# *Kingdom Stewards 2018*

**22nd Nov 7 pm to 24th Nov 1 pm**

| ***Day 1 – 21st November – Wednesday*** | |
|---|---|
| ***Time*** | ***Session Title*** |
| 7:00 PM -8:30 PM | 01- Stewardship – Introduction |
| *8:30 PM* | *Dinner* |

| ***Day 2 – 22nd November - Thursday*** | |
|---|---|
| ***Time*** | ***Session Title*** |
| 6:00 AM - 7:00 AM | 02- Morning Devotion - Believing, Belonging and Becoming |
| *7:00 AM - 9:00 AM* | *Breakfast* |
| 9:00 AM - 11:00 AM | 03- Stewardship- Life Priorities |
| 11:20 AM - 1:00 PM | 04- Stewardship- Your ministry |
| *1:00 PM - 3:00 PM* | *Lunch* |
| 3:00 PM - 4:30 PM | 05- Interactive Session – Life Priorities discussed |
| *4:30 PM - 6:00 PM* | *Break* |
| 6:00 PM - 8:00 PM | 06- Stewardship- Talents |
| *8:00 PM* | *Dinner* |

| ***Day 3 – 23rd November - Friday*** | |
|---|---|
| ***Time*** | ***Session Title*** |
| 6:00 AM - 7:00 AM | 07- Morning Devotion - Peace of God |
| *7:00 AM - 9:00 AM* | *Breakfast* |
| 9:00 AM - 11:00 AM | 08- Stewardship- Physical Family |
| 11:20 AM - 1:00 PM | 09- Stewardship- Spiritual Family |

| | |
|---|---|
| *1:00 PM - 3:00 PM* | *Lunch* |
| 3:00 PM - 4:30 PM | 10- Interactive Session – Q&A and Money |
| *4:30 PM - 6:00 PM* | *Break* |
| 6:00 PM - 8:00 PM | 11- Stewardship- Our Gifts and Talents |
| 8:00 PM | Dinner |

| ***Day 4 - 24th November – Saturday*** | |
|---|---|
| ***Time*** | ***Session Title*** |
| 6:00 AM - 7:00 AM | 12- Morning Devotion – Connected and United |
| *7:00 AM - 9:00 AM* | *Breakfast* |
| 9:00 AM - 11:00 AM | 13- Stewardship- In the light of second coming of Christ<br>14- Stewardship - Tongue |
| 11:20AM – 1:00 PM | 15- Closing session - Kings Return |

| ***Extended schedule optional for those staying back in San Antonio on Saturday.*** | |
|---|---|
| ***Day 4 - 24th November - Saturday*** | |
| ***Time*** | ***Session Title*** |
| 6 PM to 8 PM | Social gathering – at any picnic spot around San Antonio |
| | |
| ***Day 5 - 25th November – Sunday*** | |
| ***Time*** | ***Session Title*** |
| 8.30AM to 11.00 AM | Worship service at a near by church |

1. தேவ இராஜ்யத்தின் உக்கிராணக்காரர்கள் ........................................ 1
உக்கிராணத்துவம் என்றால் என்ன? .................................................... 1
தேவனே எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர்! ............................................ 3
மனிதனுக்கும் தேவனுக்கும் என்ன உறவு? .......................................... 4
வேதாகம உக்கிராணத்துவத்தின் மதிப்பு ................................................ 9
2. விசுவாசி, உரிமைகொள், மாறத்தொடங்கு - காலை தியானம் 01 .......... 15
உரிமைப்படுவதில் சேர்த்தல் (Belonging) ................................................ 22
மாற்றம் ஆகத்தொடங்கு (Becoming) .................................................... 25
முடிவுரை .................................................................................. 26
3. முதலிடம் - Priorities .................................................................. 31
உண்மையுள்ளவர்கள் ........................................................................ 33
வேதம் பாராட்டும் உண்மையுள்ளவர்கள் ................................................ 37
முடிவுரை .................................................................................. 40
4. ஊழியத்தில் உக்கிராணத்துவம் ............................................................ 43
அடையாளம் ................................................................................ 43
அடிமைத்தனம் .............................................................................. 46
தேவகுமாரனா? அடிமையா?? ................................................................ 50
பயன்பாடு .................................................................................. 55
5. வாழ்க்கையில் முதலிடம் ................................................................ 61
இயேசு கிறிஸ்துவின் மாதிரி ................................................................ 62
நித்தியமே என் நோக்கம் .................................................................... 64
நித்தியத்தை நோக்கி வாழ்தல் .............................................................. 65
மனிதனை Busy-யாக ஓட வைப்பவை ...................................................... 66
நேரத்தை திட்டமிடுதல் - Planning and schedule .................................. 69
எதற்கு முதலிடம்? .......................................................................... 73
1. தேவனோடு செலவிடும் நேரம் ............................................................ 73
2. கணவன்/மனைவியுடன் செலவிடும் நேரம் .............................................. 74
3. குழந்தைகள் / பெற்றோருடன் செலவிடும் நேரம் .................................... 74
4. விசுவாசிகளுடனான உறவும் பொறுப்பும் .............................................. 75
5. அவ்விசுவாசிகளுடனான உறவும் பொறுப்பும் .......................................... 75
6. தாலந்துகளில் உக்கிராணத்துவம் ........................................................ 79

மோசே ........ 79
நல்ல சமாரியன் ........ 86
உங்கள் கையில் உள்ளவை ........ 90
7. தேவ சமாதானம் - *Peace of God* – காலை தியானம் 02 ........ 93
கவலையின் முக்கியத்துவத்தை குறை *(Relegate the Anxiety)* ........ 96
சத்தியத்தை கொண்டு இடமாற்றம் செய்யுங்கள் ........ 100
- *Replace it with Truth* ........ 100
*Creativity* ........ 101
முடிவுரை ........ 104
8. உங்கள் குடும்பத்தின் உக்கிராணத்துவம் - *Physical family* ........ 107
தேவன் உங்களை ஒரு நோக்கத்துடன் தமது குடும்பத்தின் ஒரு அங்கமாக தத்தெடுத்துள்ளார். ........ 107
மாறும் பொறுப்புகள் - *Role always revolves* ........ 108
கணவன்/மனைவி ........ 108
குடும்பத்தின் நல்ல உக்கிராணகாரன்: ........ 112
கணவனின் கடமை: ........ 113
மனைவியின் கடமை ........ 116
பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் கடமை ........ 119
9. ஆவிக்குரிய குடும்பத்தின் உக்கிராணத்துவம் *Spiritual Family* ........ 121
கணவனின் கடமை, கிறிஸ்து: ........ 123
மனைவியின் கடமை ........ 125
ஆவிக்குரிய பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் பங்கு ........ 130
10. சம்பாத்தியத்தின் உக்கிராணத்துவம் ........ 139
வரவு செலவுத் திட்டம் ........ 144
வருமானம் - *Income* ........ 146
செலவுகள் - *Expenses* ........ 147
11. தாலந்துகளும் வரங்களும் ........ 161
தேவனுடைய ராஜ்யம் ........ 161
பொறுப்பு - *Responsibility* ........ 165
கணக்கு சரிபார்த்தல் – *Reckoning (Settling Accounts)* ........ 170
முடிவுரை ........ 178

12. உங்கள் நாவின் உக்கிராணத்துவம் .................................................. 181
நாவும் ஆவிக்குரிய வாழ்வும் ............................................................ 182
அழிவுக்கு நாவை பயன்படுத்துதல் - *Using your tongue for destruction*. 185
ஒழுக்கமான நாவை பெறுவது எப்படி? ............................................ 189
நற்செய்தியை பிரசங்கிக்கும் உக்கிராணத்துவம் - *Stewardship of Preaching the Gospel*. ................................................................................. 190
ஆறுதல் செய்யும் உக்கிராணத்துவம் - *Stewardship to comfort* ............. 191
ஆராதனையில் உக்கிராணத்துவம் - *Stewardship to worship* ................ 192
முடிவுரை ................................................................................. 192
13. இணைக்கப்படு & ஐக்கியப்படு - காலை தியானம் 03 ....................... 195
ஐக்கியமாகுதல் - *Being United* .......................................................... 201
14. இரண்டாம் வருகையை எதிர்நோக்கி வாழ்தல் ................................ 207
விளக்கு, வெளிச்சம் - *Torch, light* ..................................................... 214
எண்ணெய் - *Oil* ........................................................................... 215
15 இராஜாவின் வருகை ........................................................ 224

# *1. தேவ இராஜ்யத்தின் உக்கிராணக்காரர்கள்*

## *Stewards of Kingdom of God*

***1 கொரிந்தியர் 4:1-2,*** *[1]இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். [2]மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.*




தேவனுடைய இராஜ்யத்தின் உக்கிரானக்காரர்கள் குறித்தே இந்த ஆண்டு நாம் தியானிக்கப்போகிறோம்.

### *உக்கிராணத்துவம் என்றால் என்ன?*

உக்கிராணத்துவம் என்பதன் பொருள், *"தேவனுடைய மகிமைக்காகவும், அவருடைய படைப்பின் வளத்திற்காகவும் தாங்கள் கொண்ட எல்லாவற்றையும் பயன்படுத்துவதும், கையாளுவதும்."* ஆகும்.

____________________________________________________________

____________________________________________________________

**உக்கிராணத்துவம் - வார்த்தையின் ஆய்வும் புரிதலும்**

*'பொருளாதாரம்' (economics) என்ற வார்த்தையை கேள்விப்படும் போது பணம், வரி அல்லது வணிகம் என்பவை தான் பொதுவாக நம் நினைவுக்கு வரும். அவை மாத்திரம் அல்ல, சமுதாயம், குழந்தைகள், கல்வி, பொருட்கள் மற்றும் பொருட்களோடு தொடர்புடைய கோட்பாடுகள், வளங்கள், இவை யாவையும் நிர்வகிப்பது குறித்த எல்லா காரியங்களையும் உள்ளடக்கியதுதான் பொருளாதாரம்.*

*பொருளாதாரம் = **'ஒய்கோநோமியா' (oikonomia)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து இருந்து வந்துள்ளது.*

*'ஒய்கோநோமியா'-விற்கு இரண்டு பகுதிகள் உள்ளன.*

- *ஒய்கோஸ் (Oikos) = வீடு அல்லது குடும்பத்தினர் (house or household)*
- *நோமோஸ் (Nomos) = சட்டம் / சட்டதிட்டம் (law)*

*அதனால், அந்த வார்த்தைகளின் கலவை ஒரு குடும்பத்தினரையோ அல்லது ஒரு வீட்டையோ நிர்வகிக்கும் ஒரு சட்டம் என்று பொருள்படுகிறது.*

*வேதாகமத்தில் இந்த வார்த்தையை 'விசாரணைக்காரன்', 'நிர்வகித்தல்', எனவும் மொழிபெயர்த்துள்ளனர். அதனால், வீட்டின் சட்டதிட்டங்களுக்கும், பொருளாதாரத்திற்கும், நிர்வகித்தலுக்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை.*

*உக்கிராணக்காரன் என்பவர் வீட்டு விவகாரங்களை நிர்வகிக்கும் அல்லது விசாரிக்கும் அதிகாரம் கொண்டவர்.*

***ஆதியாகமம் 39:1-6,*** *யோசேப்பு போத்திபாரின் வீட்டு விவகாரங்களை விசாரித்தார் / நிர்வகித்தார் என நாம் பார்க்கலாம்.*

*புதிய ஏற்பாட்டில் நிர்வகித்தல் என்ற வார்த்தைக்கு **'எபிட்ரோபாஸ்' (epitropos)** என்ற மற்றோரு வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு "நிர்வகித்தல், மேற்பார்வையாளர், உக்கிராணக்காரன்" என்பது பொருள். கலாத்தியரில் இந்த வார்த்தையை பாதுகாவலர் (guardian) என மொழிபெயர்த்து பயன்படுத்தியுள்ளனர்.*

__________________________________________________________________

__________________________________________________________________

இதே பொருளில்,

- *ஒய்கோநோமியா (Oikonomia) என்ற வார்த்தை 8 முறையும்*
- *எபிட்ரோபாஸ் (epitropos) என்ற வார்த்தை 3 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*நிர்வகித்தல் அல்லது உக்கிராணத்துவம் என்று பொதுவாக சபையில் சொல்லும்போது, பணத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதனையே அடிப்படையாகக் கொண்டு இக்காலத்தில் உள்ள பல சபைகள் 'உக்கிராணத்துவத்தை' பிரசங்கித்து வருகின்றனர்! ஆனபோதிலும், உக்கிராணத்துவம் என்பது பணத்தை நிர்வகிப்பது மட்டுமல்ல! உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நிர்வகிப்பது பற்றியதாகும்!*

*எனவே, உக்கிராணத்துவம் முழுவதும் பணத்தை பற்றியது என்ற யோசனையை தயவுசெய்து உங்கள் மனதிலிருந்து நீங்கள் அகற்ற வேண்டுமென ஆவலுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

*உலகத்தை சேர்ந்தவர்கள் செழிப்பையே வெற்றி-எனவும் ஆனந்தம்-எனவும் கருதுகின்றனர். ஆகையால், தொடர்ந்து இந்த சமுதாயம் முடிந்தவரை அதிக செல்வத்தை பெறுவதற்கு போராடுகிறது. ஆனால் கிறிஸ்தவர்கள், உலகத்தார் பார்க்கிற விதம் பணத்தை பார்க்காமல் சற்று வித்தியாசமாக வேறு கோணத்தில் பார்க்க வேண்டும்.*

*முதலாவதாக, வேதாகம ஒழுங்குமுறையின்படி உக்கிராணத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.*

## தேவனே எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர்!

***ஆதியாகமம் 1:1,*** *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.*

***அப்போஸ்தலர் 17:24,*** *உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.*

***உபாகமம் 10:14,*** *இதோ, வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்.*

***சங்கீதம் 24:1,*** *பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.*

________________________________________________________________

________________________________________________________________

***சங்கீதம் 89:11,*** *வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்.*

***I நாளாகமம் 29:10-14,*** *ஆகையால் தாவீது சபை அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும்* ***கர்த்தருக்கு*** *ஸ்தோத்திரம் செலுத்திச் சொன்னது: எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய* ***கர்த்தாவே****, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.*

*11.* ***கர்த்தாவே****, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்;* ***கர்த்தாவே****, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.*

*12. ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்.*

*13. இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்.*

*14. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.*

தேவனே எல்லாவற்றிற்குமான உரிமையாளர் என்பது மேலே கூறப்பட்டுள்ள வேத வசனங்களில் இருந்து போதுமான அளவிற்கு தெளிவாகுகிறது!

எல்லா பொருட்கள் மேலும் இந்த அடிப்படை உரிமை தேவனுக்கு உண்டு என்று நீங்கள் அறிந்துகொள்ளும் வரை உங்களால் உக்கிராணத்துவத்தை குறித்து சரியான புரிதலுக்குள் வர முடியாது.

## மனிதனுக்கும் தேவனுக்கும் என்ன உறவு?

நிர்வகித்தல் என்றால் என்ன என்று சரியாக நீங்கள் அறிந்திருந்தால் தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவை சரியாக அறிந்து கொள்வீர்கள்.

***ஆதியாகமம் 1:26-28,*** *[26]பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள்*

__________________________________________________________________

__________________________________________________________________

சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். [27] தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். [28] பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."

1. தேவன் தம்மை ஒரு சிருஷ்டிகராக வெளிப்படுத்துகிறார்.
2. தேவன் மனிதர்களை தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார்.
3. தம்முடைய சாயலை உடையோருக்கு பலுகிப் பெருகுமாறு அழைப்பு விடுத்தார். மனித இனம் தன் வாழ்வில் எதையாகிலும் ஆக்கபூர்வமாக செய்யவேண்டும் என்பதற்கான கட்டளை இது. இது வேறு ஒன்றும் அல்ல உக்கிராணத்துவத்தையே குறிக்கிறது.

   புதிய ஏற்பாட்டில் இயேசு தம்முடைய போதனைகளில் கூறும்போது தம்மை நேசிப்பவர்களும், தம்முடைய சீஷர்களும் தேவ ராஜ்யத்தில் கனி கொடுப்போராய் இருக்கும்படி அழைத்தார்.

4. தேவன் ஆதாமையும் ஏவாளையும் தமக்குரிய இந்த பூமியின் மீது ஆளுகை செய்யுமாறு கட்டளையிட்டார். அதனால், தேவன் ஆதாமையும் ஏவாளையும் தம்முடைய பிரதிநிதிகளாக நியமித்து, தாம் படைத்த யாவையும் நிர்வகிக்கும் பொறுப்பையும் அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கினார். கர்த்தர் பூமியின் மீது அவர்களுக்கு தார்மீக உரிமையை வழங்கவில்லை ஆனாலும் பூமி அவருடைய உடைமை.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் அழைத்து விலங்குகள், செடிகள், கடல், ஆறு, வானம் மற்றும் சுற்றுப்புறத்தின் மீதும் தங்களுடைய அதிகாரத்தை செலுத்துமாறு அழைத்தார். தேவன் அவர்களை இந்த பூமியின் உக்கிராணக்காரர்களாக நியமித்து, பூமியை நிர்வகிக்கும்/விசாரிக்கும் பொறுப்பை வழங்கினார். அவருடைய நாமத்திற்காகவும் அவருடைய மகிமைக்காகவும் அவர்கள் காரியங்கள் செய்யும் பொறுப்பை கொடுத்தார்.

சகலமும் தேவனுக்கே சொந்தமனது.

**சங்கீதம் 115:16,** வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.

______________________________________________________________

______________________________________________________________

*முடிவாக, தேவன் மனிதர்களை வேலை செய்யுமாறும், அதனையே அன்றாடம் செய்யுமாறும் கட்டளையிட்டார்.*

***ஆதியாகமம் 2:15,*** *தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.*

1. *கர்த்தருடைய ரூபத்தில் இருப்பது ஒரு பாக்கியம்!*
   *It is a privilege to be in the image of God!*

2. *கர்த்தருடைய குழந்தைகள் என அழைக்கப்படுவது ஒரு பாக்கியம்!!*
   *It is a privilege to be called as son of God!!*


3. *பூமியின் மீது அதிகாரம் கொண்டிருப்பது ஒரு பாக்கியம்!!!*
   *It is a privileged have the authority over the earth!!!*

*ஆனால் இந்த பாக்கியங்களோடு வரும் பொறுப்பினை நாம் உணரவில்லையெனில் நாம் ஒரு நல்ல உக்கிராணக்காரர் அல்ல.*

*அதனால், வரிசையாக பார்ப்போமானால்,*

1. *தேவனுக்கே எல்லாம் சொந்தமானது!*
2. *அதனை அவருக்காக ஒழுங்காக கையாளும் அதிகாரத்தையும் பொறுப்பையும் நமக்கு கொடுத்திருக்கிறார்.*

*நாம் இதனை புரிந்துகொள்ளவில்லையெனில், முதலில் கோணல் முற்றும் கோணல் என்றாகிவிடும்.*




_______________________________________________________________________


_______________________________________________________________________

உக்கிராணக்காரன் = எஜமான் இல்லாதபோதும் எஜமானனின் வீட்டை தொடர்ந்து நேர்த்தியாக கையாளும் பொறுப்பினை கொண்டவன்.

## உங்களுக்கு எதுவும் சொந்தமில்லை!

நாம் எதையும் எடுத்துக்கொண்டு செல்லப்போவதில்லை என்பதை நாம் ஒவ்வொரு இறுதிச் சடங்கிலிருந்தும் கற்றுக்கொள்ளலாம்.

நாம் எதற்கும் சொந்தக்காரர்கள் இல்லை என்ற சக்திவாய்ந்த பிரசங்கத்தை இறந்துப்போன மக்கள் பிரசங்கிக்கின்றனர்!




பணக்காரரோ ஏழையோ அனைவரும் கல்லறைக்குள் வெறுங்கையாகதான் செல்ல வேண்டும்!

பழைய ஏற்பாட்டு காலத்தின் போது இந்த பூமியில் வாழ்ந்த மிகுந்த செல்வமும் செழிப்பும் ஞானமும் கொண்ட சாலொமோன் ராஜா இவ்வாறு எழுதியிருக்கிறார்,

***பிரசங்கி 5:15,*** *தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பிப்போவான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டுபோவதில்லை.*

நம் வேதாகமத்தில் எழுதப்பட்ட முதல் புத்தகத்திலும் இதையொத்த ஒரு கருத்தை யோபு என்ற பெயர் கொண்ட நீதிமானிடத்திலும் நாம் காணலாம்.

________________________________________________________________

________________________________________________________________

***யோபு 1:21,*** *நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்".*

*சங்கீதக்காரன்* ***சங்கீதம் 49:17,*** *அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை; அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை.*

*அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையை கவனித்துக்கொள்ளும் தன்னுடைய ஆவிக்குரிய குமாரனுக்கு எழுதும் போதும் இதையே எழுதியிருக்கிறார்.*

***1 தீமோத்தேயு 6:7,*** *உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்.*

*(ஒரு மணி நேரம் கடையில் என்று அவசரப்பட்டு தனது உயிரையே இழந்து விடும் கதை)*

*நீங்கள் வைத்திருக்கும் பொருட்கள் உங்களுடையவைகள் அல்ல!*

*உங்களுடைய கணவன்/மனைவி உங்களுடையவர்கள் அல்ல!*

*உங்களுடைய குழந்தைகள் உங்களுடையவர்கள் அல்ல!*

***சங்கீதம் 127:3-4,*** *[3]நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். [4]இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.*

*பிள்ளைகள் கர்த்தர் கொடுத்த பரிசு. அவர்கள் தேவனின் உடைமை, உங்களுடைய உடைமை அல்ல. தேவன் தற்காலிகமாக உங்களுடைய பொறுப்பில் ஒப்படைத்திருக்கிறார். உங்கள் பிள்ளைகளை தேவனிடமிருந்து "கடனாக" பெற்றுள்ளீர்கள் என கூறலாம்!*

*முதலாவது நாம் ஒரு காரியத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும்.*

---

*நாம் வைத்திருக்கும் அனைத்தும் தேவனுக்குரியவைகள். அதனை பார்த்துக்கொள்ளும் நிர்வாகப்பொறுப்பே நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது.*

---

______________________________________________________________

______________________________________________________________

நாம் அழைக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டது தொடங்கி, நமது உக்கிராணத்துவம் நம்முடைய சொந்த திறமையினாலோ ஆற்றலினாலோ பெலனாலோ நடைபெறுவதில்லை.

நமக்குள் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் பலத்தினாலும் ஆற்றலினாலும் நல்ல உக்கிராணக்காரர்களாக செயல்பட வேண்டும். அப்போதுதான் அவருடைய தெய்வீக வழிகாட்டுதலுக்கு உட்பட்டு நம் வாழ்வையும் வளர்ச்சியையும் நிர்வகிக்க முடியும். பிறகு நம் வாழ்க்கையை தேவனுடைய இருதயத்திற்கேற்றபடி வாழ்வதன் மூலம் தேவனிடமிருந்து மட்டுமே நமக்கு வேண்டிய பெலத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

நம்முடைய வழியில் செய்ய முயற்சித்தோமெனில், பிறகு நாம் மற்றவர்களுக்கும் இடறலாகி, நமது நோக்கத்தையும் இழந்துவிடுவோம்.

## வேதாகம உக்கிராணத்துவத்தின் மதிப்பு

***Value of Biblical Stewardship***

வேதாகம உக்கிராணத்துவம், பணத்தை வெறுக்கவோ அதை சம்பாதிக்க கூடாது என்றோ பிரசங்கிப்பது அல்ல.

பணம் நம்முடைய அடிப்படை வாழ்க்கைக்கு அவசியமானதாகும்.

***1 தீமோத்தேயு 6:10,*** *பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

**பண ஆசை** எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என வேதாகமம் நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

ஆகவே பணம் உங்களுடைய வாழ்க்கையின் மையமாக ஆகாமல் கவனித்துக்கொள்வது முக்கியமாகும். பணம் உங்கள் வாழ்க்கையின் கவனமாக இல்லாதிருக்கும்போது, சுலபமாக உங்கள் கவனமும் ஈடுபாடும் உலகத்திற்கு உரியவைகளிலிருந்து விலகி மேலானவைகள் மீது இருக்கும்.

பணம் வாழ்க்கைக்கு நன்மதிப்பினை அளிப்பதில்லை. ஆனால் வேதாகமோ நம் வாழ்க்கைக்கு மிகுந்த நன்மதிப்பை சேர்க்கிறது.

***நீதிமொழிகள் 11:28,*** *தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள்.*

____________________________________________________________

____________________________________________________________

He who trusts in his riches will fall,
But the righteous will flourish like foliage. (NKJV)

Trust in your money and down you go! But the godly flourish like leaves in spring. (NLT)

*செல்வந்தன் அல்ல நீதிமானே தழைப்பான். பணம் இல்லாமல் நீதிமான் எவ்வாறு தழைப்பான்? பணத்தைவிட உயரிய வேதத்தை அறிந்து, அதை தன்வசப்படுத்திக் கொள்வதால் நீதிமான் செழிப்பான்.*

*சாலொமோன் ராஜா நீதிமொழிகளில் இன்னும் எழுதியது,*

***நீதிமொழிகள் 22:1,*** *திரளான ஐசுவரியத்தைப்பார்ககிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்.*

*ஒரு நீதிமானின் இலக்கு என்னவாக இருக்க வேண்டும்?*

*வாழ்வில் ஒரு நற்பெயர் / நற்கீர்த்தி பெறுவதாகவே இருக்க வேண்டும்.*

---

*குணம் நிலைத்திருக்கும்.*

***பணம் நிலைத்திருக்காது.***

---

*அதனால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்கள் வாழ்க்கையில் செல்வத்தை திரட்டுவதை விட்டுவிட்டு ஒரு தூய வாழ்க்கை வாழ்வதையே இலக்காக கொள்ள வேண்டும்.*

*தேவனை அறிந்துகொள்வதும் அவரின் அன்பை புரிந்துகொள்வதுமே நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் மெய்யான செல்வம்.*

***எபிரெயர் 13:5-6,*** *[5] நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. [6] அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.*

*பணம் நம்மை நேசிக்காது, அது எப்போதும் நம்மோடு சுற்றித்திரியாது! கர்த்தரே நம்முடன் இருந்து நம்மை ஆசிர்வதிக்கிறார், பணம் அல்ல.*


________________________________________________________________

________________________________________________________________

நமது கவனம் - தேவன் மீதும் நித்திய ஆசீர்வாதத்தின் மீதும் இருக்க வேண்டும்

***மத்தேயு 6:24,*** *இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து ஒருவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.*

*செல்வம் நம் இருதயத்தை ஆளும் போது தேவன் தம்முடைய அதிகாரத்தை இழந்துவிடுகிறார்." -* ***ஜான் கால்வின்***




*ஒரு வயதான பெண்மணி என்றைக்காவது ஒருநாள் தனக்கு ஆபத்து நேர்ந்தால் தயாராக இருக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தாள். ஒரு நாள் அவள் கடைக்கு சென்றாள். அவள் பொருட்களை வாங்கிய பின்னர் தனது வாகனத்திற்கு திரும்பினாள்.*

*அப்போது தனது வாகனத்திற்குள் நான்கு ஆண்கள் இருப்பதை கண்டாள். தனது பொருட்கள் இருந்த பைகளை கீழே போட்டுவிட்டு, தனது கைத்துப்பாக்கியை எடுத்து, "என்னிடம் துப்பாக்கி உள்ளது, அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றும் எனக்கு தெரியும்! வாகனத்திலிருந்து*

________________________________________________________________

________________________________________________________________

வெளியே செல்லுங்கள்” என்று அலறினாள். அந்த ஆண்கள் வெளியே அலறியடித்து ஓடினர்.

சிறிது நடுங்கியவளாய், அவள் தனது பைகளை வாகனத்தில் ஏற்றிவிட்டு தானும் ஏறினாள். ஆனால் அவளால் தனது சாவியை அந்த வாகனத்தில் செலுத்த முடியவில்லை. பிறகுதான் தனது வாகனமும் இதை போலவே இருப்பதையும், அது இன்னும் சில வாகனங்கள் தள்ளி இருப்பதையும் உணர்ந்தாள். தவறை உணர்ந்த அந்த வயதான பெண்மணி காவல் நிலையத்திற்கு சென்று நடந்ததை கூற முடிவு செய்து, காவல் நிலையத்திற்கு சென்றாள்.

அந்த நான்கு ஆண்களும் அதே காவல் நிலையத்தில் தங்கள் வாகனத்தை கடத்த முயன்ற கைத்துப்பாக்கி வைத்திருந்த ஒரு வயதான பெண்மணியை குறித்து புகார் கொடுத்துக்கொண்டிருந்தனர்!!

---

---

## *2. விசுவாசி, உரிமைகொள், மாறத்தொடங்கு - காலை தியானம் 01*

### *Believing, Belonging and Becoming*

*சுவிசேஷம் அறிவிப்பதில் இப்போதுள்ள புதிய நடைமுறை என்னவெனில் பல்வேறு சமூக தொண்டு சார்ந்த செயல்பாடுகளை நடத்தி அதற்கு தேவனை அறியாதவர்களை அழைப்பதே ஆகும். எடுத்துக்காட்டாக தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் குழு, மொழி பாடம், உடற்பயிர்சி (Zumba) போன்றவை...*

*அங்கு வருபவர்களில் தேவனை அறியாதவர்கள், சுவிசேஷத்தை முழுமையாக விசுவாசிப்பதற்கு முன்னரே, அவர்களுக்கு ஒரு சபையை காட்டி, ஆராதனையில் பங்குபெறவும் ஐக்கியம் கொள்ளவும் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.*

*இது பெரும்பாலான நிறுவனங்களில் தங்களது பொருட்களை வாங்குவதற்கு முன்னரே அவற்றை பயன்படுத்தி பார்ப்பதற்காக கொடுப்பதற்கு ஒப்பானதாகும்!*

*இதனால் நாம் இப்போது பார்க்கும் விளைவு என்ன?*

*அவிசுவாசிகளாக (unbelievers) இருப்பவர்கள் தேடுபவர்களாக (seekers) மாறிவிட்டனர். அவர்களும் விசுவாசிகளாகிய நம்மோடு பயணம் செய்யும் பயணிகளாகிவிட்டனர். ஆனால் சுவிசேஷத்தில் தொடங்காமல் வேறொரு காரணத்தில் நம்முடன் இணைந்துகொண்டனர்.*

*எனவே அவர்கள் இப்போது சபையை சேர்ந்தவர்கள்தான் ஆனால் விசுவாசிகளாக அல்ல.*

*ஆனால், சபையானது கர்த்தருக்குள் உறுதியாக இருந்து இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும் விசுவாசிகளின் சமூகமாக இருக்க வேண்டும்.*

*சபையை சார்ந்தவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பரிசுத்தத்தை நாடி முழுமையான மனிதர்களாக வளர விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும்.*

*விசுவாசிகள் ஒருவரை ஒருவர் நேசிப்பதன் மூலம் தேவனின் அன்பை காட்டுபவர்களாக இருக்க வேண்டும்.*

*இப்படி அவிசுவாசிகளாக, கர்த்தர்மேல் முழுமையான வைராக்கியத்தை பகிர்ந்துகொள்ளாத மக்களும் சபைகளில் இருப்பதால், இது கிறிஸ்தவர்கள்*

______________________________________________________________

______________________________________________________________

*மத்தியிலும் குழப்பத்தை உண்டாக்குகிறது. அவிசுவாசிகளாய் சபையில் இணைந்தவர்கள் சபையின் காரியங்களில் பங்கேற்பதற்கு பல சாக்குகளை கூறி நழுவுகிறார்கள். இதனால் சபையில் நான்கு விதமான மனிதர்களை நாம் பார்க்க முடியும் –*

- *வைராக்கியமானவர்கள்,*
- *மந்த கிறிஸ்தவர்கள்,*
- *செயல்படுபவர்கள்,*
- *ஒன்றும் செய்யாதவர்கள்.*

*நமது ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்கு என்ன பிரசங்கித்தார்? தங்களுடைய கடந்த வாழ்க்கையை விட்டு முற்றிலும் விலகி, தம்மைப் பின்பற்ற வேண்டும் என்றே பிரசங்கித்தார்.*

***மத்தேயு 12:50,*** *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்."*

***மத்தேயு 10:38,*** *தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*

*நாம் பார்த்த இந்த புதிய சுவிசேஷ அணுகுமுறையின் ஆபத்து என்னவெனில், இது சுவிசேஷத்தின் நற்செய்தியை நீர்த்துப்போகச் செய்யும், சீஷத்துவத்தின் விலைக்கிரயத்தை பற்றி குழப்பத்தையும் இது விளைவிக்கும்.*

***இரண்டாவதாக***, *விசுவாசிகளாக மாறுவதற்கு முன்னரே சபையில் இணைந்துகொள்வது அவிசுவாசிகளுக்கும் மிகுந்த குழப்பத்தை விளைவிக்கும்.*

*விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் இடையில் எந்தவித தெளிவான வேறுபாடும் இல்லாமல் போகிறது. சபையை சார்ந்த ஒரு அவிசுவாசி பாவத்தில் விழுவதன் காரணம் என்ன? தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்கிற தெளிவான சிந்தனை அவர்களுக்கு இருப்பதில்லை.*

*இவர்களை பொறுத்தவரை சுவிசேஷம் என்பது மனந்திரும்பி விசுவாசிப்பது அல்ல. மாறாக, சபை மக்களுடன் சேர்ந்து, சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தங்களுடைய வரங்களையும் ஆர்வங்களையும் வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்தால் போதும் என்பதே கிறிஸ்தவம் என்று*

________________________________________________________________

________________________________________________________________

எண்ணுகிறார்கள். தேவ பொறுப்பும் அர்ப்பணிப்பும் அவர்களின் மனதில் தோன்றுவதே இல்லை.

அவிசுவாசிகளை, "அவிசுவாசிகள்" என கூறாமல், அதற்கு மாறாக "சக பயணி", "தேடுபவர்" அல்லது "ஒரே பயணத்தில் வேறு இடத்தில் ஏறினவர்" என்று அவர்களுக்கு தவறான அடையாளம் கற்பிக்கப்படுகிறது. பிறகு இதுவே உண்மையில் கிறிஸ்தவத்தை குறித்தும் சுவிசேஷத்தின் மீதுள்ள நம்பிக்கையை பற்றியும் அவர்கள் சுலபமாக குழம்புவதற்கு வழி வகுக்கிறது.

இக்காலத்தில் ஜனங்கள், சபை என்று பெயர்சூட்டப்பட்ட இயேசுவின் குழுவோடு சேர்ந்து கொள்கிறார்களே தவிர இயேசுவை விசுவாசித்து மனம் திரும்பி அவரிடம் சேர்ந்துகொள்வதில்லை.

**மூன்றாவதாக**, விசுவாசிப்பதற்கு முன்னரே சபையுடன் சேர்ந்திருந்தால் அது சபையின் அடிப்படையையே மாற்றிவிடுகிறது. சபை என்பது தேவன் மீது உறுதியாகவும் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கையும் கொண்ட விசுவாசிகளின் கூட்டமாகும்.

அதின் **அங்கத்தினர்கள் கீழ்ப்படியவும், பரிசுத்தமாக வாழ்க்கையை வாழ்ந்து, தேறினவர்களாக வளரும் எண்ணம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்**.

அவர்கள் **தேவன் மீது கொண்ட அன்பை ஒருவரை ஒருவர் நேசிப்பதன் மூலமாக வெளிப்படுத்துபவர்களாக** இருக்க வேண்டும்.

***யோவான் 13:35,*** *நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்."*

இதையே பவுல் கற்றுக்கொடுத்தார்.

***1 கொரிந்தியர் 5:6-7,*** *[6]நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? [7]ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக் கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.*

***2 கொரிந்தியர் 6:14,*** *அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?*

______________________________________________________________

______________________________________________________________

இதையே பேதுருவும் கற்றுக்கொடுத்தார்.

*1 பேதுரு 2:12, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.*


இதையே அப்போஸ்தலனாகிய யோவானும் கற்றுக்கொடுத்தார்,

*1 யோவான் 2:5-6, [5]அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். [6]அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.*

ஒரு சபையை குறித்த வல்லமையான சாட்சி என்னவென்றால், தேவ அன்பினாலும் சுவிசேஷத்தின் நற்செய்தியினாலும், பாவிகளின் வாழ்க்கை முற்றிலும் மாறுவதே ஆகும். பின்னர் இந்த தேவ அன்பு, ஒருவரை ஒருவர் நேசிப்பதன் மூலம் சபையோரால் மொழிபெயர்க்கப்படுகிறது. இப்படி சபை மக்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்பு செலுத்துவதற்கு காரணம்:

அ) மரித்து உயிர்த்த இயேசுகிறிஸ்து,

ஆ) சுவிசேஷத்தின் பரிசுத்தமும் சத்தியமும்.



எனவே, சபையின் அஸ்திபாரம் சரியாக இருக்க வேண்டுமானால், சபையோர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

விசுவாசிப்பதற்கு முன்னரே ஒரு சபையுடன் இணைந்து கொள்வது சபையின் அஸ்திபாரத்தை அசைக்கச் செய்கிறது. இது நாளடைவில் சுவிசேஷத்தையும் சபையின் வல்லமையான சாட்சியையும் நீர்த்துப்போகப்பண்ணுகிறது.

__________________________________________________________________

__________________________________________________________________

*கிரேஸ் டேவி (Grace Davie), என்கிற பிரித்தானிய (British) சமூக ஆய்வாளர் (sociologist) 1994ஆம் ஆண்டு "Believing without Belonging" (விசுவாசியாமல் இணைந்து கொள்வது) என்ற ஒரு புத்தகத்தை எழுதினார். அதில், 1945 முதல் பிரிட்டனில் மதச்சார்பின்மையின் எழுச்சி (Rise of secularism in Britain since 1945) என்கிற ஒரு ஆய்வை விவரித்தார். தொடர்ந்து இந்த புத்தகத்தில், எந்த சமயத்தையும் சாராதவர்கள் பெரும்பாலானோர் கடவுளை குறித்து ஏதோ ஒரு வகையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று கூறுகிறார். In the book, she suggests that most people who do not belong to institutional religions have some form of belief about God.*

*இத்தாலிய அறிஞர்கள் பலர், சபைக்கு செல்லும் மக்கள், சபையில் பிரசங்கிப்பதை நம்புவதில்லை என்று நிரூபிக்க முயன்றனர். Italian scholars have attempted to argue that a large number of Italian Catholics belong to the church without really believing in what the church teaches.*

*அபி டே (Abby Day), என்ற மற்றொரு பிரித்தானிய அறிஞர், "Believing in Belonging" என்ற அவருடைய புத்தகத்தில், ஒரு கூட்டத்தினரோடு இணைந்து கொள்ள விரும்புவதால்தான் ஜனங்கள் உண்மையில் சில காரியங்களை விசுவாசிக்கிறார்கள் என்று கூறியுள்ளார் (actually people believe because they want to belong to a group that gives them identity).*

*அப்படியானால், நாம் ஏன் ஒரு சபையை சார்ந்திருக்கிறோம்?*

*சபையில் (நம்மை) சேராத ஒருவரை நாம் எப்படி பார்க்கிறோம்?*

*சபையில் இல்லாத ஒருவர், விசுவாசியான நம்மை சேராத ஒருவர், கிறிஸ்தவத்தின் மீது அதீத வைராக்கியம் கொண்ட ஒருவர், அதோடு கூட பரிசுத்த ஆவியானவரின் வரங்களாலும் நிரப்பப்பட்ட ஒருவர் – இப்படிப்பட்டவரை குறித்து நமது பார்வை என்ன?*

*ஆவியானவரை அவர் விரும்பும் இடத்தில் அசைவாட அனுமதிக்காமல் (யோவான் 3:8) நமது சிறிய கூட்டுக்குள் இந்த பிரபஞ்சத்தின் தேவனை அடைக்க விரும்புகிறோமா?*

*Do we want to capture the God of the Universe in our little enclosures (both physical and social) and not allow the Spirit to blow as it wills (John 3:8)?*

*பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் நடந்த இரு சம்பவங்களை குறித்து நாம் இப்போது காண்போம்!*

***எண்ணாகமம் 11:16-30***

______________________________________________________________

______________________________________________________________

***எண்ணாகமம் 11:25-29,*** *[25]கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள். [26]அப்பொழுது இரண்டுபேர் பாளயத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத், மற்றவன்பேர் மேதாத்;* ***அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்;*** *அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். [27]ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான். [28]உடனே மோசேயினிடத்தில் உள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனுமாகிய யோசுவா பிரதியுத்தரமாக: என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான். [29]அதற்கு மோசே:* ***நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ?*** *கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்"*

தேவன் ஆசரிப்பு கூடாரத்தின் *(Tent of Meeting)* மீது மேகமாக இறங்கிய போது எல்தாத் *(Eldad)* மற்றும் மேதாத் *(Medad)* ஆகிய இருவரும் தங்களுக்கான கூடாரங்களிலேயே தங்கிவிட்டனர். ஆரம்பத்தில் மோசேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுபது மூப்பர்களிடையே அவர்கள் இல்லாதபோதும் ஆவியானவர் இந்த இரண்டு பேர் மீதும் இறங்கினார், அவர்கள் தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்தார்கள். தேவ சித்தத்தை அறிந்துகொண்ட மோசே மிகுந்த பெருந்தன்மையாக *(magnanimous)* இருக்கிறார்.

மோசேயின் தலைமைத்துவத்தில் *(leadership)* தேவனின் செயலை காண வேண்டும் என்று யோசுவா எண்ணினார். ஆனால் மோசேக்கு ஒரு பரந்த கண்ணோட்டம் *(perspective)* இருந்தது.

***எண்ணாகமம் 11:29,*** *அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்!"*

புதிய ஏற்பாட்டில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தை பற்றி நாம் இப்போது காணலாம்,

________________________________________________________________

________________________________________________________________

***மாற்கு 9:38-41,*** [38]*அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக்கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான். [39]அதற்கு இயேசு: அவனைத் தடுக்கவேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். [40]நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான். [41]நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*இயேசுவை பின்பற்றாத சிலர் இயேசுவின் பெயரை வெறும் சுகமாக்குவதற்காக மட்டுமே பயன்படுத்துவதை இயேசுவின் இருதயத்திற்கு அருகில் இருந்த அப்போஸ்தலனாகிய யோவான் கண்டார்.*

*நாம் லூக்கா எழுதின சுவிசேஷ புத்தகத்தை படித்தோமேன்றால் இயேசு 70 சீஷர்களை தேர்ந்தெடுத்து அவர்களை அனுப்பியதை நாம் காணலாம். (லூக்கா 10:1)*

*அப்படி தம்முடைய நாமத்தில் அதிசயங்களை செய்பவர்களை, இயேசு தடுக்க வேண்டாம் என்று தம்முடைய சீஷர்களுக்கு கூறினார். அதுமட்டுமல்லாமல் தம்முடைய நாமத்தில் அவர்கள் அதிசயங்களை செய்வதால் தேவ ராஜ்யத்திற்கு எதிராக அவர்கள் செயல்பட மாட்டார்கள் எனவும் தம் சீஷர்களிடத்தில் கூறினார்.*

*Jesus reminds us that his Kingdom is not about territories, or institutions, or in the church or the unchurched, but it is about hearts of people. God has all the possibility and propensity to work within hearts of people, as He desires.*

*தம்முடைய ராஜ்யம், அதிக இடங்களை பிடிப்பதிலோ, அதிக நிறுவனங்கள் அமைப்பதிலோ, சபைகளிலோ அல்லது சபையல்லாதவற்றிலோ இல்லை என்பதை இயேசு நமக்கு தெளிவுபடுத்துகிறார். இவை எல்லாவற்றிற்கும் மாறாக, தேவ ராஜ்யம் மக்களின் இருதயங்களில் உள்ளது.* ***ஜனங்களின் இருதயத்திற்குள் தம் விருப்பத்தின்படி கிரியை செய்ய தேவனுக்கு அனைத்து வல்லமையும் விருப்பமும் உள்ளது****.*

*அதனால் நீங்கள் சேர்ந்திருக்கிற கூட்டத்துக்கு வெளியேயும் தேவனை தேவனாக இருக்க அனுமதியுங்கள்!*

________________________________________________________________

________________________________________________________________

*திருச்சபையின் வேலி எல்லைகளுக்கு வெளியில் உள்ளவர்களை குறித்து உங்கள் எண்ணம் என்ன?*

*What is your attitude towards people who are outside the visible confines of the Church?*

இயேசு கிறிஸ்து எல்லா மனுஷருக்காகவும் மரித்தார். எல்லா மனிதர்களுக்கும் தேவனை அறியும் ஒரே நித்திய பிரமாணம் உள்ளது. ஆகவே நாம் புரிந்துகொள்ள முடியாத வழிகளில், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு எல்லா மனிதர்களும் இயேசுவின் சுவிசேஷத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை அளிக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

***அப்போஸ்தலர் 10:34-35,*** *34 அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், 35 எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.*

யார் இரட்சிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இரட்சிக்கப்படவில்லை என்றும் நாம் நியாயந்தீர்க்க வேண்டியதில்லை. ஆனால், தேவன் நம்மை எதற்காக பிடித்துள்ளாரோ அதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போம்.

## உரிமைப்படுவதில் சேர்த்தல் *(Belonging)*

சபையை இரண்டு படங்களை கொண்டு நான் விவரிக்க விரும்புகிறேன்.

### *அருவி (River)*



_______________________________________________________________

_______________________________________________________________

***அருவியின் பண்புகள் (characteristics):***

- *மலைகளின் மேல் சிறிய துளிகளாக உருவாகி ஒரு துளிக்கு பின் மற்றொரு துளியாக ஓடத் துவங்கும்.*
- *ஆயிரக்கணக்கான துளிகள் ஒன்று இணைந்து ஒரு பாதையாகிறது (trail).*
- *பல ஓடைகள் (stream) இணைந்து நதியாக (river) ஓட ஆரம்பிக்கிறது.*

## *மரம்*



- *மரம் ஒரு சிறிய விதையிலிருந்து துவங்கும்.*
- *விதையானது பூமியின் அடியில் தனிமையில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் (vulnerable) விழும்*
- *ஒளியை பெறுவதற்கு மேலே ஆகாயத்தை நோக்கி துளிர் விடும்.*
- *தண்ணீருக்காகவும் ஊட்டச்சத்திற்காகவும் கீழே பூமியினுள் ஆழத்தில் வேர்விடும்.*
- *அதனுடைய கிளைகளையும் வேரையும் பரப்பும்.*
- *மரத்தின் ஒரே தண்டிலிருந்து (trunk) பல கிளைகள் வளரும்.*

## *சபையோடு ஒரு ஒப்பீடு*

*அப்போஸ்தலனாகிய யோவானின் வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் அவர் கண்ட ஒரு தரிசனத்தில், எல்லா ஜனத்தாரும், ஜாதிகளும், பாஷைக்காரரும் ஒன்றுகூடி தேவனை ஆராதிக்கிறார்கள்.*

*ஜனங்கள் அனைவரும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு முறையில் தங்கள் கிறிஸ்தவ பயணத்தை துவங்கினாலும் அவர்கள் அனைவரும் ஒரே ஓடையை போல ஒன்றாக இணைகின்றனர்.*

________________________________________________________________

________________________________________________________________

*சபையிலுள்ள ஜனங்கள் "பலதரப்பட்ட பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், ஒருவரோடொருவர் இணைந்து ஒரே திசையில் ஒற்றை பாதையில் வல்லமையாக ஓடுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்". **ஒற்றுமையில் வேற்றுமை! Diversity in Unity!***

*The church consists of people from the "widest possible variety of backgrounds, they belong to one another, and are meant to be part of the same powerful flow going now in the same single direction. **Diversity in Unity!***

*சபை மரத்தை போன்றது. இயேசு தம்மையே ஒரு விதையாக இந்த இருண்ட பூமிக்குள் விதைத்து, ஒரு அற்புதமான மரத்தினை உருவாக்கியுள்ளார். அனைத்து திசைகளிலும் கிளைகள் வளர ஆரம்பித்தன. சில கிளைகள் மேல்நோக்கியும், சில கீழே பூமியை நோக்கியும் மேலும் சில கிளைகள் அண்டை வீட்டு சுவரின் மீதும் வளர்ந்தன. ஆர்வத்துடன் வெளியே வளரத் துவங்கிய இந்த கிளைகளை பார்த்து, அவை ஒரே நடுத்தண்டை (stem) சேர்ந்தவை என அறிந்து கொள்ள முடியாது. **வேற்றுமையில் ஒற்றுமை! Unity in Diversity!***

*The church is like a tree. The single seed, Jesus himself, has been sown in the dark earth and has produced an amazing tree. Branches have set off in all directions. Some pointing almost directly upward and some reaching down to the earth and some heading out over neighboring walls. Looking at the eager out-stretched branches, you can hardly know they were all from the same stem. **Unity in Diversity**!*

*நதியும் மரமும் இணைந்து புதிய எருசலேமின் ஒரே அங்கமாக இருப்பதை வெளி 22 இல் நாம் காணலாம்.*

*ஒரே இடத்திலிருந்து (source) நதி உற்பத்தியாகி வருகிறது. மரங்களும் ஒரே குணமாக்கும் வல்லமையை கொண்ட இலைகளை கொண்டுள்ளது.*

*இந்த இரண்டு படங்களும் "குடும்பத்தை" குறித்த எண்ணத்தை தெளிவாக்குகிறது. ஆதி திருச்சபையினர் ஒரு பரந்த குடும்பத்தைப்போல (extended family) ஒருவரையொருவர் கூடுமானவரை கவனித்து வாழ்ந்தனர். அவர்கள் ஒருவரையொருவர் "அண்ணன்" மற்றும் "அக்கா" என்று மனதார அழைத்தனர். அவர்கள் வாழ்வும் ஜெபமும் எண்ணங்களும் அவ்வாறே இருந்தன. ஒரே தந்தையின் பிள்ளைகளாக, மூத்த சகோதரனின் வழிடத்துதலின் படி நடந்து, தேவையின் போது பொருட்களையும் வளங்களையும் (resources) பகிர்ந்து, ஒரே குடும்பமாக பரஸ்பரமாக உதவி செய்யும் சமுதாயமாக வாழ்ந்தனர்.*

________________________________________________________________

________________________________________________________________

*The church is not simply a collection of isolated individuals, who follow their own paths of spiritual growth without reference to one another. It may sometimes look like that, but each of us is called to respond to God's call at a personal level. Apostle Paul calls this as body! Every member of the body needs to connect, depend and work with one another.*

*சபை பத்து தனி நபர்கள் கூடும் இடமல்ல. அதில் மற்றவரை சாராமல் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் தேறும் எண்ணத்திற்கு இடமில்லை. ஒரு சில வேளைகளில், சிலர் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் பிறருடைய ஈடுபாடு இல்லாமல் தனியாக பயணிப்பதைப் போல தோன்றலாம்; ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் தேவன் நம்மை அழைத்த அழைப்பில் தனிப்பட்ட முறையில் அவருக்கு உண்மையாய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இதனை ஒரு சரீரம் என அப்போஸ்தலனாகிய பவுல் அழைக்கிறார். உடலின் ஒவ்வொரு அங்கத்தினரும் இணைந்து, ஒருவரையொருவர் சார்ந்து, ஒருவரோடொருவர் இணைந்து வேலை செய்ய வேண்டும்.*

## *மாற்றம் ஆகத்தொடங்கு (Becoming)*

---

*"If God is our father, the church is our mother."* ***John Calvin.***

*"தேவன் தந்தையானால், சபையே நம்முடைய தாய்."* ***ஜான் கல்வின்.***

---

***கலாத்தியர் 4:26-27,*** *[26]மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். [27]அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது."*

முக்கியமாக சபையானது நெருக்கமான தொடர்புடைய மூன்று நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

- தேவனை ஆராதிக்க
- இவ்வுலகில் அவருடைய ராஜ்யத்திற்காக வேலை செய்ய
- ஒருவரையொருவர் நேசிக்க
  - ஒருவரை ஒருவர் ஊக்குவிப்பதன் மூலம்,
  - ஒருவரை ஒருவர் விசுவாசத்தில் கட்டியெழுப்புவதின் மூலம்

_______________________________________________________________

_______________________________________________________________

- ஒருவரோடொருவர் ஜெபிப்பதன் மூலம்
- ஒருவரிலொருவர் கற்றுக்கொள்வதன் மூலம்
- ஒருவருக்கொருவர் கற்றுக்கொடுப்பதன் மூலம்
- ஒருவருக்கொருவர் பின்பற்றக்கூடிய ஒரு நல்ல உதாரணமாக இருப்பதன் மூலம்

தனிப்பட்ட முறையிலும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக தேவனை வழிபட்டு அவருடைய ராஜ்யத்திற்காகவும் வேலை செய்ய வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு இணைந்தும் செயல்பட வேண்டும்.

இன்னும் சுருக்கமாக கூற வேண்டுமானால்,

- ஆராதிக்க
- வேலை செய்ய
- ஐக்கியம் கொள்ள

## முடிவுரை

இதனை இயேசு யோவான் 13இல் விளக்கியுள்ளார். சபை என்பது, சுவிசேஷத்தை ஆழமாக நம்புவதோடு, ஒருவருக்கொருவர் கொண்ட அன்பினால் வேறுபிரிக்கப்பட்ட சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சமூகம், வெளியில் உள்ள மக்களின் ஆர்வத்தை தூண்டுவதோடு, தாங்கள் சபைக்கு வெளியில் உள்ளனர் என்பதையும் உணர வைக்கிறது. இதனால் அவர்கள் உள்ளே வந்து சபையோடு இணைவதற்கு அவர்களுடைய விருப்பமும் தூண்டப்படும்.




பொதுவாக பேக்கரி கடைகள் கண்ணாடி கதவும் ஜன்னல்களும் கொண்டிருக்கும். நல்ல மழை நேரத்தில் சுவையான பேக்கரிக்கு செல்லும்போது அங்குள்ள பதார்த்தங்களின் வாசனையும் கண்ணாடி ஜன்னலிற்கு பின் அவை வைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது வெளியில் இருப்பவரின் விருப்பத்தை தூண்டும். அந்த கண்ணாடிக்கு பின் இருப்பதை வெளியில் இருப்பவர் தொடவோ

________________________________________________________________

________________________________________________________________

சுவைக்கவோ முடியாது. அந்த கடைக்கென உள்ள சிறிய கதவின் வழியேதான் சென்று அந்த பதார்த்தங்களை தொடவும், சுவைக்கவும், விரும்பியதை கேட்கவும் முடியும்.

ஒரு அவிசுவாசி சபையை சந்திக்கும்போது அந்த கண்ணாடி கடைக்கு வெளியே நிற்பதைப்போல இருக்க வேண்டும்.

அவர்கள் சபை மக்களின் அன்பின் வெதுவெதுப்பை உணர வேண்டும்.

தேவ சாயலைக்கொண்ட மக்களாக சபையோர் அவர்களை வரவேற்று அவர்களோடு இடைபட வேண்டும்.

அவர்கள் உங்கள் உறவின் ஆழத்தை காண வேண்டும்.

எந்த நோக்கமுமின்றி சபையில் ஒருவரையோருவர் கவனிப்பதையும் தங்கள் சுகத்தையும் விட்டு பிறரை கவனிக்கும் மனப்பாங்கையும் அவர்கள் காண வேண்டும்.

அவர்கள் அந்த சுவிசேஷத்தின் சாரத்தை ருசிக்க வேண்டும்.

அவர்களது வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக்கொள்ளும் வகையில் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்.

சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த தேவனை துதித்து ஜெபிக்கும் சபை மக்களின் ஆராதனை சத்தம், இந்த சந்தோஷமான சமூகத்திற்குள் அவர்களை வரவேற்கும் அழைப்பின் சத்தமாக இருக்க வேண்டும்.

என் அன்பான சகோதர சகோதரிகளே, வெளியே உள்ளவர்களை வரவேற்கும் ஒரு சமூகத்தை உருவாக்க உங்கள் சுகத்தை விட்டு வெளியேறுங்கள்.

நீங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளை சற்று கவனித்துக்கொள்ளுங்கள்.

ஆர்வத்தோடு அவர்களை உபசரியுங்கள்.

பக்குவமாக உங்கள் சுவிசேஷ எண்ணங்களை வெளிப்படுத்துங்கள். அந்த பேக்கரியைப்போல் வெளிப்படையாக உங்களுக்கு தேவன் கிருபையாய் கொடுத்த சாட்சிகளையும், தேவன் உங்கள் வாழ்க்கையை மாற்றியதையும் அறிவியுங்கள்.

சுவிசேஷத்தை தெளிவாக எடுத்துக்கூறி மனந்திரும்புதலுக்கும் விசுவாசத்திற்குள்ளும் அவர்களை நடத்துங்கள்.

________________________________________________________________

________________________________________________________________

அவர்களை கண்ணாடி கடையின் வெளியே நின்று வேடிக்கை பாராமல், அந்த குறுகிய வாசலின் வழியே உள்ளே நுழைந்து இணைந்துகொள்ள அவர்களை அழையுங்கள்.

_____________________________________________________________________

_____________________________________________________________________

## *3. முதலிடம் - Priorities*

***மத்தேயு 25:14-30***

***1. சகலமும் தேவனுக்கு சொந்தமானது***

***மத்தேயு 25:14,*** *“அன்றியும் பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்தது போல் இருக்கிறது.*

***யாக்கோபு 1:17,*** *நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.*

***2. உங்களிடம் கொடுக்கப்பட்டவைகளின் நிமித்தம் தேவன் உங்கள் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்.***

***மத்தேயு 25:14-15,*** *“[14]அன்றியும் பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. [15]அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்.*

*மத்தேயு 7இல் உள்ள இயேசுவின் வார்த்தையும் இதனை உறுதிபடுத்துகிறது:*

***மத்தேயு 7:11,*** *ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?*

*ஒரு நிமிடம் தேவன் உங்களுக்கு கொடுத்தவைகளை இப்போது பட்டியலிடலாம்!*

- *சரீரம்,*
- *குடும்பம்,*
- *குழந்தைகள்,*

______________________________________________________________

______________________________________________________________

- ➢ வீடு,
- ➢ வேலை/ தொழில் *(Business)*
- ➢ ஊழியம்

தேவன் உங்களுக்கு என்னவெல்லாம் நன்மைகளை அருளியிருக்கிறார் என்று நீங்கள் உணர்ந்துள்ளீர்களா!

3. **தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டியவர்கள். எந்த நேரமும்**

***மத்தேயு 25:19,*** *வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக்கேட்டான்.*

***லூக்கா 16:12,*** *வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?*

***2 கொரிந்தியர் 5:10,*** *ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.*

முதலாவது பாடத்தில் நாம் உக்கிராணத்துவத்தின் அர்த்தத்தையும் விளக்கத்தையும் பார்த்தோம். இப்போது இந்த கூட்டத்தின் மைய வசனத்தில் நாம் இந்த உக்கிராணத்துவத்திற்கு வேண்டிய முதன்மையான தன்மை என்னவென்று பார்ப்போம். அது வேறொன்றும் அல்ல, **உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும்** என்பதே..

***1 கொரிந்தியர் 4:1-2,*** *[1]இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். [2]மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.*

4. ***கணக்கு கொடுக்க வேண்டும்!***
   ***தேவன் கொடுத்தவைகளை பெருக்கியிருந்தாலும் சரி, அப்படியே வைத்திருந்தாலும் சரி!***

***மத்தேயு 25:16-18,*** *[16]ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். [17]அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு*

__________________________________________________________________

__________________________________________________________________

*இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். [18] ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.*

***லூக்கா 16:10*** *"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்."*


*பல சபைகள் மற்றும் நிறுவனங்களின் இன்றைய பிரச்சனை என்னவெனில் அவை, ரோபோட் போல தன்னியக்க (auto pilot mode) நிலையில் தான் செயல்படுகின்றன. பலரும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைக்கூட ரோபோட் போல தன்னியக்க (auto pilot mode) நிலையில்தான் வாழ்கின்றனர்.*

## உண்மையுள்ளவர்கள்

*ஒரு உக்கிராணக்காரனாக நீங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த கூட்டத்திலும் இல்லாதவராக இருக்கலாம்,*

- *புத்திசாலி,*
- *திறமைசாலி,*
- *வரங்கள் நிறைந்தவராக*

*ஆனால், உங்களுக்கு கொடுத்தவைகளில் நீங்கள்* ***உண்மையுள்ளவராக*** *இருக்கிறீர்களா என்பதை தான் தேவன் எதிர்பார்கிறார்!*




________________________________________________________________

________________________________________________________________

வ 2, *"உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்"* எனக்கூறுகிறது

உக்கிராணக்காரனுக்கு ஒரு தகுதி அவசியம் என்று தேவன் கூறுகிறார். அது உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதே.

எப்படிப்பட்ட வேலைக்காரரை கண்டுபிடிப்பது கடினம்?

உண்மையுள்ள ஒருவனை!

உண்மையுள்ளவன் என்றால் நம்பகத்தன்மை கொண்ட, அதாவது நம்பக்கூடியவராக இருப்பவர்.



சில நாட்களுக்கு முன்னர் தேவ ஊழியர்களை உணவு விடுதி (restaurant) பணியாட்கள் (waiter) என்று ஒரு ஒப்பீடு கூறியுள்ளேன். உணவு விடுதி பணியாட்களுக்கு சமையல் அறையில் செய்து தரப்படும் உணவை பரிமாறுவதை தவிர வேறு எந்த வேலையும் இல்லை. சமையல் அறையில் செய்யப்பட்ட உணவை கொண்டுவந்து அப்படியே கொடுக்க வேண்டும். அவர்கள் எந்த நறுமணப் பொருட்களையோ, படைப்புத்திறன் (creative) மிக்கவர்களாகவோ, புதுமையான (innovative) காரியங்களை செய்பவர்களாகவோ இருக்கவேண்டியதில்லை. அந்த உணவை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்க அறிந்திருந்தால் போதும்.

இன்றைய ஊழியர்களின் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் அந்த ஒரு தாலந்தை வாங்கியவரின் மனநிலைக்கு சென்றுவிடுகிறார்கள். (எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பது பிரச்சனை இல்லை... உங்களுக்கு கொடுக்கப்பட்டவைகளை வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்க**ள்** என்பது தான் கேள்வி!)

*Reliability (Which comes through faithfulness, trustworthiness over time) is the one necessary virtue for all servants and stewards in the things of God.*

நம்பகத்தன்மையே (Reliability) தேவ காரியங்களில் எல்லா ஊழியர்களிடமும் உக்கிராணக்காரர்களிடமும் காணப்பட வேண்டிய ஒரு முக்கிய தகுதி. நாம் உண்மையுள்ளவர்களாக நடந்துகொள்ளும்போது காலப்போக்கில் நமது நம்பகத்தன்மையை வளர்த்துக்கொள்ள முடியும்.

__________________________________________________________________

__________________________________________________________________

*The ministers of Christ should make it their hearty and continual endeavour to approve themselves trustworthy; and when they have the testimony of a good conscience, and the (approval) of their Master, they must (minimize) the opinions and (criticism) of their fellow-servants: - **Matthew Henry***

*கிறிஸ்துவின் ஊழியர்கள் "நம்பகமானவர்கள்" என்று பெயர் பெறுவதற்கு மனதார தொடர்ந்து முயன்றிட வேண்டும்; தங்கள் நல்மனசாட்சியும், தங்கள் ஆண்டவரும் அவர்களை "நம்பகமானவர்கள்" என்று உறுதிசெய்ததும், பிற ஊழியர்களை குறித்த கருத்துகளையும் விமர்சனங்களையும் குறைத்து கொள்ளவும் வேண்டும்: - **மேத்யு ஹென்றி (Matthew Henry)***

## விருப்பமோ இல்லையோ உண்மையுள்ளவராய் இருப்பது அவசியம்!

### *Faithfulness is Not Optional*

*திருமணம் செய்து கொண்டவர்கள் ஒருவரிடமொருவர் மரிக்கும்வரை உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். உண்மையுள்ளவராய் இருப்பது திருமணத்தின் ஒரு பகுதி. தேவனிடமும் அதுபோலத்தான், நாம் உண்மையுள்ளவராய் இருப்பது, தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவின் ஒரு பகுதி. உண்மையுள்ளவன் எப்போதும் உண்மையுள்ளவனாக இருக்கிறான்.*

---

*தான் விரும்புகிற போது மாத்திரம் உண்மையுள்ளவனாக இருப்பவனை உண்மையுள்ளவன் என்று எப்படி அழைக்க முடியும்?*

---

*ஆக, நாம் தேவனிடம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே வாழும் ஜனங்களை எப்பொழுதும் தேவன் தேடுகிறார்.*

***1 சாமுவேல் 2:35,*** *நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க **உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி**, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம் பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான்.*

__________________________________________________________________

__________________________________________________________________

நாம் உண்மையுள்ளவர்கள் என்பதை, தேவனுக்கு கீழ்ப்படிவதின் மூலமே காண்பிக்க முடியும்.



- அவருடைய இருதயம் நம்முடைய இருதயமாக மாறுகிறது; *His heart becomes our heart*
- அவருடைய மனது நமது மனதாகிறது; *His mind our mind*
- அவருடைய விருப்பம் நமது விருப்பமாகிறது *His will our will.*

தன்னுடைய இஷ்டம்போல காரியங்களை செய்தால் தேவனுக்கு உண்மையானவனாக இருக்க முடியாது.

தேவன் தம் ஊழியர்களிடையே உண்மையுள்ளவர்களை தீவிரமாக தேடுகிறார். உண்மைத்தன்மையை கொண்டே தேவன் தமது ஜனங்களை நியாயந்தீர்க்கிறார். நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் மிகவும் விரும்புகிறார். இதை நாம் புரிந்துகொள்வதற்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தமது வார்த்தைகளின் மூலம் நமக்கு உதவுகிறார்.

***மத்தேயு 25:21,*** *அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.'*

________________________________________________________________

________________________________________________________________

***மத்தேயு 25:23,*** *அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.'*

எல்லோருடைய சூழ்நிலையும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதுபோல எல்லோருக்கும் ஒரே திறமைகளும் கிடையாது. ஆனால், நாம் எல்லோரும் அவரவருக்கு கொடுக்கப்பட்டவைகளில் உண்மையுள்ளவர்களாக இருக்கக்கூடிய திறன் நம் எல்லோருக்கும் ஒன்றுதான். அவரவருக்கு கொடுக்கப்பட்ட வரங்களிலும் தாலந்துகளிலும் அவரவர் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டிய திறன் நம் ஒவ்வொருவரிடமும் உண்டு. ஆனாலும், சோதிக்கப்படும்போது எல்லோரும் உண்மையுள்ளவர்களாக காணப்படுவது இல்லை. இயேசு கிறிஸ்து இந்த உண்மையை நமக்கு ஞாபகப்படுத்தினார்.

தேவனிடத்தில் உண்மையாய் இருந்த சிலரை தேவன் எப்படி பாராட்டுகிறார் என்று நாம் பார்ப்போம்.

## வேதம் பாராட்டும் உண்மையுள்ளவர்கள்

### இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவே உண்மையுள்ளவராக இருப்பதற்கு உச்சகட்ட உதாரணம். அவர் எப்போதுமே தேவனின் விருப்பத்தை செய்து, தேவனுடைய வார்த்தையையே பேசினார். அவருக்கு ஒரே ஒரு விருப்பம் மாத்திரமே இருந்தது, அது பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்வது மாத்திரமே.

***யோவான் 6:38,*** *என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்.*

இயேசு சிலுவைக்கு செல்லும் போது கூட ஜெபித்து, தாம் என்ன செய்ய வேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்புவாரோ அதையே செய்தும் காட்டினார்!

***லூக்கா 22:42,*** *பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்."*

இப்படி கீழ்ப்படிவதற்கு, இயேசு எவ்வாறு கற்றுக்கொண்டார்?

________________________________________________________________

________________________________________________________________

இயேசுவின் கீழ்ப்படிதல் இயல்பாகவே வரவில்லை என்பதை நாம் எபிரெயர் என்ற புத்தகத்தில் காணலாம். இயேசுவிற்கு கூட உண்மையாக இருப்பது என்பது கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது.

***எபிரெயர் 5:8,*** *அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு.*

நம்முடைய வாழ்க்கையின் ஒரு பகுதியில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, அந்த உண்மை மற்ற பகுதிகளுக்கும் செல்லும்.

அதிக விசுவாசத்தை வளர்த்துக்கொள்வதால், அந்த விசுவாசம் மற்ற பகுதிகளுக்குள்ளும் செல்லும். தேவனிடம் உண்மையுள்ளவராக இருக்க துவங்கும்போது, குடும்பத்திடமும் வேலையிலும் பணத்தை கையாளுவதிலும் உண்மையுள்ளவர்களாக நம்மை மாற்றுகிறது. யாராவது ஒரு பெரிய பொறுப்பை நம்மிடம் கொடுக்கும்போது அதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க மிகுந்த ஆர்வம் காட்டுகிறோம். ஆனால், ஏற்கனவே தேவன் நம்மிடம் கொடுத்தவற்றில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### மோசே

***எண்ணாகமம் 12:7,*** *என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.*

ஒரு நிமிடம், மோசேயை தேவன் உண்மையுள்ளவன் என்று அறிவிக்கிற அந்த சூழ்நிலையை நினைவுகூருங்கள்!

மோசே ஒரு எத்தியோப்பிய பெண்ணை திருமணம் செய்ததால் அவரை மிரியமும் (Miriam) ஆரோனும் (Aaron) விமர்சனம் செய்தனர். அதனால், தேவன் மோசேயின் பட்சத்தில் பேசுவதற்காக இறங்கி வந்து, "மோசே என் வீட்டில் உண்மையுள்ளவன்" என கர்த்தர் அறிவித்தார்.

எபிரெயர் புத்தகத்தை எழுதியவர் இந்த வசனத்தை தேர்ந்தெடுத்து, மோசேயை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு ஒப்பிடுகிறார்.

***எபிரெயர் 3:1-2,*** *[1] இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; [2] மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.*

________________________________________________________________

________________________________________________________________

***எபிரெயர் 3:5,*** *சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்,*

*மற்ற பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை காட்டிலும் மோசேயை தேவனிடம் உண்மையுள்ளவனாக இருக்கும்படி செய்தது எது?*

*தேவன் தனக்கு கொடுத்த பொறுப்பை செய்வதில் மோசே மிகவும் கவனமாக இருந்தார். தேவன், ஜனங்களை அழிக்க எண்ணிய போதும் மோசே தேவனிடம் அந்த முடிவை மாற்றிக்கொள்ளுமாறு மன்றாடினார்.*

### தீமோத்தேயு

***1 கொரிந்தியர் 4:17,*** *இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.*

*யாரும் தேவனுக்கு உண்மையாக இருக்கிறார்களா இல்லையா என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாது, அது தேவனுக்கு மாத்திரமே தெரியும். அவர்களை தேவன் கனப்படுத்துவார்! இளம் தீமோத்தேயுவுக்கு எப்படிப்பட்ட பாராட்டு என்று பாருங்கள்!*

*வேதத்தில் அதிகம் பேசப்படாத சிலரை நான் உங்களுக்கு காண்பிப்பேன் (வேதாகமத்தில் உள்ளவர்கள்). நீங்கள் அவர்களை கவனித்திருக்கவோ அல்லது நினைவுகூர்ந்திருக்கவோ மாட்டீர்கள்.*

### எப்பாப்பிரா (Epaphras)

***கொலோசெயர் 1:7,*** *அதை எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்,*

### தீகிக்கு (Tychicus)

***கொலோசெயர் 4:7,*** *பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்..*

- கொடுக்கப்பட்டதில் உண்மையுள்ளவர்களாக மாத்திரம் இருங்கள் - *Just be faithful*
- முறையற்று எதையும் செய்ய வேண்டாம் - *Don't pervert it*

____________________________________________________________

____________________________________________________________

- திரிக்க வேண்டாம் - *Don't twist it*
- ஏமாற்றும்படியோ வஞ்சிக்கும் வகையிலோ எதையும் கையாளாதீர்கள் - *Don't handle deceitfully*
- கொடுத்ததை கெடுத்துவிடாதீர்கள் - *Don't corrupt it.*
- எப்படி கொடுக்கப்பட்டதோ, அப்படியே திருப்பி கொடுத்து விடுங்கள் - *Just give it out the way it came.*

## முடிவுரை


கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு திரும்பி வரும் போது, அவர் தம்முடைய ஊழியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புவார்?

உண்மையுள்ளவர்களாக!

வெற்றிபெற்றவர்களாக இல்லை!

***லூக்கா 18:8,*** *சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்?"*

***மத்தேயு*** *24:45, " ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?"*




______________________________________________________________

______________________________________________________________

***நீங்கள்*** *உண்மையாக இருக்க வேண்டும் என்பதையே தேவன் உங்களிடம் விரும்புகிறார்.*

*உண்மையுள்ளவர்களாக இருத்தல் என்றால் என்ன?*

*தேவன் என்ன செய்ய சொல்கிறாரோ அதை மாத்திரம் செய்வது தான்.*

*நாமும் உண்மையாக இருத்தலை கற்றுக்கொள்ளலாம்.*

***லூக்கா 16:10-12,*** *[10]* ***கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்****, கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். [11] அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?*
*[12] வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?*

*இந்த நாளிலிருந்து* ***நீங்கள் அவருக்கு*** *உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களா?*

*நீங்கள் தேவனுக்கு மாத்திரம் கீழ்ப்படிந்து அவரை மாத்திரம் திருப்தி செய்ய கற்றுக்கொள்வீர்களா?*

*Will YOU be faithful to HIM from this day forward?*

*Will you learn to obey and satisfy Him alone?*

__________________________________________________________________

__________________________________________________________________

# *4. ஊழியத்தில் உக்கிராணத்துவம்*

## *Stewardship - Your ministry*

***1 கொரிந்தியர் 4:1-2,*** [1]*இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.* [2]*மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.*

### அடையாளம்

*தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருக்க வேண்டுமானால், முதலில் நாம் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.*

*இப்போது உங்கள் வேதாகமத்தை நீங்கள் பார்த்தால் உக்கிராணக்காரன் (அல்லது உக்கிராணத்துவம்) என்கிற வார்த்தையை அடிக்கடி காணமாட்டீர்கள். கிங் ஜேம்ஸ் (King James) என்கிற ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள பழைய ஏற்பாட்டை பார்த்தால், "அடிமை" (slave) என்ற வார்த்தையை ஒருமுறை மாத்திரமே காண்பீர்கள். ஆனால் இதற்கான எபிரேய வார்த்தை பெயர்ச்சொல்லாக (noun) 800 முறையும் வினைச்சொல்லாக (verb) 300 முறையும் காணலாம். மொத்தமாக ஆயிரத்து நூறு முறை எபிரேய வேதாகமத்தில் "அடிமை" (slave) என்கிற வார்த்தை குறிப்பிடப்பட்டிருந்தாலும், நமது ஆங்கில வேதாகமத்தில் ஒரே ஒரு முறை மாத்திரமே "அடிமை" (slave) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*அடிமையை குறிக்கும் 'டூலாஸ்' (doulos) என்கிற கிரேக்க வார்த்தை சுமார் 150 முறை கிரேக்க புதிய ஏற்பாட்டில் உபயோகப்-படுத்தப்பட்டிருந்தாலும், ஆங்கிலத்தில் சில முறை மாத்திரமே 'அடிமை' என மொழிபெயர்த்துள்ளனர். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது, கீழ்க்கண்ட இரண்டு சூழல்களில் (context) மாத்திரமே, அவற்றை "அடிமை" என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர்.*

- *I) அடிமை என்கிற வார்த்தை உண்மையாகவே ஒரு முதலாளி – அடிமை உறவை குறிக்கும்போது,*
- *II) "பாவத்தின் அடிமை" அல்லது "நீதியின் அடிமை" என்பவற்றை குறிக்கும்போது.*

______________________________________________________________

______________________________________________________________

*'டூலாஸ்' (doulos) என்ற கிரேக்க வார்த்தைக்கு "அடிமை" என்பது மாத்திரமே பொருள். அது "அடிமையை" தவிற வேறு எதையும் குறிப்பதில்லை.*

*'டூலாஸ்' (doulos) என்றால், "வேலைக்காரன்" அல்ல, "தொழிலாளி" அல்ல, "பணியில் அமர்த்தப்பட்டவர்" அல்ல "உதவியாளர்" அல்ல. 'டூலாஸ்' என்றால் அடிமை (slave).*

*"வேலைக்காரரை" குறிக்க கிரேக்க மொழியில் ஆறு அல்லது ஏழு வார்த்தைகள் உள்ளன. 'டூலாஸ்' (doulos) எப்போதும் "வேலைக்காரரை" குறிப்பதில்லை.*

*'டூலாஸ்' (doulos) என்ற கிரேக்க வார்த்தையை கீழ்கண்டவாறு மொழிபெயர்த்துள்ளனர்,*


- *ஒரு அடிமை, கொத்தடிமை*
  *a slave, bondman, man of servile condition*
- *ஒரு அடிமை - a slave*
- *மற்றொருவரின் விருப்பத்திற்கு விட்டுக்கொடுப்பவர். கிறிஸ்துவின் பணியை மனிதர்களிடம் அதிகரிக்கவும் செயல்படுத்தவும் தனது சேவையை பயன்படுத்துகிறவர்.*
  *metaph., one who gives himself up to another's will those whose service is used by Christ in extending and advancing his cause among men*
- *தனது சொந்த நலன்களை புறக்கணித்து மற்றொருவருக்கு தன்னை அர்ப்பணிப்பவர்.*
  *devoted to another to the disregard of one's own interests*
- *ஒரு வேலைக்காரன், உதவியாளர் - a servant, attendant.*

*ஆனால், 'டூலாஸ்'-ன் அர்த்தம் எப்போதுமே 'அடிமை' மட்டும் தான்!*

| கிரேக்க வார்த்தை | அர்த்தமும் மொழிபெயர்ப்பும் |
|---|---|
| **'டியகனாஸ்' (diakonos)** | ➢ *ஒரு எஜமானனின் கட்டளைகளை நிறைவேற்றும் வேலைக்காரர், பணியாளர், ஊழியர்.* *one who executes the commands of another, esp. of a master, a servant, attendant, minister* |

______________________________________________________________

______________________________________________________________

| | |
|---|---|
| | ➢ ஒரு இராஜாவின் பணியாள் - *the servant of a king*<br>➢ சபையால் நியமிக்கப்பட்ட உதவியாளர் (deacon). ஏழைகளின் மீது அக்கறை காட்டுபவர், ஏழைகளின் நலனுக்காக பணத்தை சேகரித்து விநியோகம் செய்யும் பொறுப்பில் இருப்பவர்.<br>*a deacon, one who, by virtue of the office assigned to him by the church, cares for the poor and has charge of and distributes the money collected for their use*<br>➢ உணவு பரிமாறுபவர் - *a waiter, one who serves food and drink.* |
| **'பைஸ்' *(pais)*** | 'பணியாள்' |
| **'ஒய்கேடேஸ்' *(Oiketes)*** | 'வீட்டு வேலைக்காரன்' |
| **'ஹுபெறேடேஸ்' *(huperetes)*** | **பொருள் – அடிமட்ட அடிமை**<br>மொழிபெயர்ப்பு - 'வேலைக்காரன்' அல்லது 'ஊழியர்'<br> |
| **'தேராபோன்' *(therapon)*** | 'வேலைக்காரன்' |

### சுருக்கம்

❖ 'ஒய்கேடேஸ்' (Oiketes) என்ற கிரேக்க வார்த்தைக்கு 'வீட்டு வேலைக்காரன்' என்பதே அதன் அர்த்தமாகும்.

______________________________________________________________

______________________________________________________________

- ‘டூலாஸ்’ *(doulos)* என்ற கிரேக்க வார்த்தைக்கு ‘கொத்தடிமை’ *(bond slave)* அதாவது சங்கிலிகளால் கட்டப்பட்டவன் என்பதே அதன் அர்த்தமாகும்.
- ‘டியகனாஸ்’ *(diakonos)* என்பதற்கு வெறும் ஊழியர் அல்லது வேலைக்காரன் அதாவது மற்றொருவரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் யாரோ ஒருவர் என்பதே பொருள்.
- ‘ஹுபெறேடேஸ்’ *(huperetes)* என்ற கிரேக்க வார்த்தை அடிமட்டத்தில் *(galley)* பயணம் செய்து கடலில் துடுப்புப்போடுபவர்களை குறிப்பிடுகிறது.

இதிலுள்ள ‘டூலாஸ்’ *(doulos)* மற்றும் ‘ஹுபெறேடேஸ்’ *(huperetes)* என்ற இரண்டு வார்த்தையை மட்டும் விளக்கமாக காணலாம்.

**யோவான் 15:14-15,** [14]நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். [15]இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

***John 15:14-15***, *You are My friends if you do what I command you. 15 I do not call you slaves anymore, because a slave doesn’t know what his master is doing. I have called you friends, because I have made known to you everything I have heard from My Father. (HCSB)*

ஆகையால், இயேசு இதற்கு முன்னர் போதித்தவற்றை இந்த கண்ணோட்டத்தில், இந்த அர்த்தத்தில் தியானிக்க வேண்டும்.

## அடிமைத்தனம்

அடிமைகளை எவ்வாறு வாங்கி விற்பனை செய்தனர்?

அடிமைச் சந்தைக்குச் செல்லுங்கள். அங்கே அவர்களை கட்டி வைத்திருப்பார்கள் *(block)*!

அடிமையை வாங்க வேண்டுமானால், அந்த சந்தைக்கு சென்று, விரும்பிய அடிமையை தேர்வு செய்வார்கள்.

அந்த அடிமையின் விலையை நிர்ணயித்து பேரம் பேசுவார்கள்.

________________________________________________________________

________________________________________________________________

அந்த விலையை கொடுத்தால் அந்த அடிமையை சொந்தமாக்கிக்-கொள்ளலாம்.

பிறகு தன்னை வாங்கியவருக்கு அந்த அடிமை சொந்தமாகிவிடுவார், பின்னர்,

- அந்த அடிமையை பயிற்றுவிப்பார்கள்
- ஆணோ / பெண்ணோ, அந்த அடிமையின் தேவைகளை சந்திப்பார்கள்
- அந்த அடிமை செய்ய வேண்டிய வேலையை / பொறுப்புகளை நியமிப்பார்கள்.
- அந்த அடிமைகளை ஒழுங்குபடுத்துவார்கள் (Discipline).

தயவுசெய்து ஒரு நிமிடம் இதே முறையை நம்முடைய இரட்சிப்புக்கு பயன்படுத்திப்பாருங்கள்!

- நீங்கள் பாவத்தின் சங்கிலிகளால் கட்டப்பட்டு பாவத்தின் அடிமைகளாக இருந்தீர்கள்,
- தேவன் உங்களை தேர்ந்தெடுத்தார்!
- உங்களை மீட்பதற்காக (விடுவிப்பதற்காக) அவர் தமது விலையுயர்ந்த இரத்தத்தை கிரயமாக செலுத்தினார் (அழிந்துபோகக்கூடிய பொன்னையோ வெள்ளியையோ அல்ல).
- தேவன் உங்களை பாதுகாக்கிறார்.
- தேவன் உங்கள் தேவைகளை சந்திக்கிறார்.
- நீங்கள் உங்களுக்கு சொந்தம் இல்லை.
- அவர் உங்கள் ஆண்டவராகவும் பிதாவாகவும் இருப்பதால் நீங்கள் அவருக்கு கீழ்ப்படிகிறீர்கள்.
- தேவன் நம்மை ஒழுங்குபடுத்துகிறார் - God disciplines us.

**மத்தேயு 20:25-28,** [25]அப்பொழுது, இயேசு அவர்களை கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.
[26]உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.
[27]உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.
[28]அப்படியே, மனுஷகுமாரனும்

_________________________________________________________________

_________________________________________________________________

ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்.

ஆதி திருச்சபை இந்த வாக்கியங்களின் சரியான அர்த்தத்தை உணர்ந்திருந்தனர், அதனால்தான் அவர்கள் கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

***மத்தேயு 28:19-20,*** *[19]ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, [20]நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."*

ஆதி திருச்சபை அதிகமாய் துன்புறுத்தப்பட்டாலும், அவர்கள் தேவனிடம் தாங்கள் கொண்ட வைராக்கியத்தை விட்டுக்கொடுக்கவில்லை.

***அப்போஸ்தலர் 4:29, 30*** *[29]இப்பொழுதும், கர்த்தாவே அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து, [30]உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்.*

***Acts 4:29,*** *And now, Lord, consider their threats, and grant that Your slaves may speak Your message with complete boldness,*

***ரோமர் 1:1,*** *இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்*

***Romans 1:1,*** *Paul, a slave of Christ Jesus, called as an apostle and singled out for God's good news*

***கொலோசெயர் 4:1,*** *எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்.*

***Colossians 4:1****, Masters, supply your slaves with what is right and fair, since you know that you too have a Master in heaven.*

__________________________________________________________________

__________________________________________________________________

***கொலோசெயர் 4:7,*** *பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்.*

***Colossians 4:7***, *Tychicus, our dearly loved brother, faithful servant, and fellow slave in the Lord, will tell you all the news about me*

***கொலோசெயர் 4:12,*** *எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.*

***Colossians 4:12***, *Epaphras, who is one of you, a slave of Christ Jesus, greets you. He is always contending for you in his prayers, so that you can stand mature and fully assured in everything God wills.*

***பிலிப்பியர் 1:1***, *இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது.*

***Philippians 1:1***, *Paul and Timothy, slaves of Christ Jesus: To all the saints in Christ Jesus who are in Philippi, including the overseers and deacons.*

***தீத்து 1:1,*** *தேவனுடைய ஊழியக்காரனும் இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது*

***Titus 1:1***, *Paul, a slave of God and an apostle of Jesus Christ, to build up the faith of God's elect and their knowledge of the truth that leads to godliness*

***2 பேதுரு 1:1,*** *நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது:*

***2 Peter 1:1***, *Simeon Peter, a slave and an apostle of Jesus Christ: To those who have obtained a faith of equal privilege with ours through the righteousness of our God and Savior Jesus Christ.*

________________________________________________________________

________________________________________________________________

***யாக்கோபு 1:1,*** *தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது.*

***James 1:1***, *James, a slave of God and of the Lord Jesus Christ: To the 12 tribes in the Dispersion. Greetings.*

***வெளி 1:1,*** *சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்,*

***Revelation 1:1***, *The revelation of Jesus Christ that God gave Him to show His slaves what must quickly take place. He sent it and signified it through His angel to His slave John,*

இதை எவ்வாறு நாம் புரிந்து கொள்ளலாம்? இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இவற்றை எப்படி செயல்படுத்தினார் என்று நாம் அறிந்துகொள்ளும் வரை இதை நாம் சரியாக புரிந்துகொள்ள முடியாது.

***பிலிப்பியர் 2: 3-10,*** *3 ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது*
*செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும்*
*மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4 அவனவன்*
*தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.*
*5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; 6 அவர்*
*தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக்*
*கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், 7 தம்மைத்தாமே*
*வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். 8 அவர்*
*மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின்*
*மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*
*9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,*
*10 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய*
*முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் —*

இயேசு தேவகுமாரனாக இருந்தாலும், தாம் அடிமையாக இருக்கும்படி தம்மைத்தாமே தேர்வு செய்துகொண்டார்!

## ***தேவகுமாரனா? அடிமையா??***

*இயேசுவின் அடையாளம் தேவகுமாரன் – பணியோ அடிமை!*

______________________________________________________________

______________________________________________________________

ஆகவே கிறிஸ்தவன் என்பதும், **தேவனுடைய பிள்ளை என்பதும் என்னுடைய அடையாளமாக** இருந்தாலும், **என்னுடைய வேலை, என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடிமையாக இருப்பது**.

இந்த சிந்தனையுடன் கீழேயுள்ள பத்தியை (passage) பாருங்கள்.

***லூக்கா 17:7-10***, *7 உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தை மேய்த்து வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி: நீ முன்பு போய்ச் சாப்பிட்டுவா என்று அவனுக்குச் சொல்வானோ? 8 நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம்பண்ணி, அரைகட்டிக்கொண்டு, நான் போஜனபானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய், அதற்குப்பின் நீ புசித்துக்குடிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லுவானல்லவா. 9 தான் கட்டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்ததற்காக அவனுக்கு உபசாரஞ்செய்வானோ? அப்படிச் செய்யமாட்டானே. 10 அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்.'"*

***Luke 17:7-10,*** *7 "Which one of you having a slave tending sheep or plowing will say to him when he comes in from the field, 'Come at once and sit down to eat'? 8 Instead, will he not tell him, 'Prepare something for me to eat, get ready, and serve me while I eat and drink; later you can eat and drink'? 9 Does he thank that slave because he did what was commanded? 10 In the same way, when you have done all that you were commanded, you should say, 'We are good-for-nothing slaves; we've only done our duty.'"*

*நாம் அப்பிரயோஜனமான அடிமைகள்!! அதாவது, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத அடிமைகள்!!*

*அப்படியானால், என்னுடைய ஊழியம் என்ன?*

*கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியுள்ளதை நாம் பார்ப்போம்.*

*3ஆம் அதிகாரத்தில், சபையிலுள்ள தலைவர்களை பற்றி பவுல் பேசுகிறார்.*

*சுருக்கமாக சொல்வோமானால், தானோ (பவுலோ), அப்பொல்லோவோ (Apollos), கேபாவோ (Cephas), புதிய ஏற்பாட்டிலுள்ள அனைவரும் சமம்*

_______________________________________________________________

_______________________________________________________________

என்ற வாதத்தை முன்வைத்தார். ஒருவரும் பெரியவரும் இல்லை, ஒருவரும் சிறியவரும் இல்லை.

***1 கொரிந்தியர் 4:1-2,*** *[1]இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். [2]மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.*

4-ஆம் அதிகாரத்தில், தேவனின் இரகசியங்களை அறிந்த நல்ல உக்கிராணக்காரனாக இருக்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார்.

இங்கு 'ஹுபெறேடேஸ்' *(huperetes)* என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

நம்முடைய ஆங்கில/தமிழ் வேதாகமம் இதனை தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று மொழிபெயர்த்துள்ளது. நாமும் சமுதாயமாக சேர்ந்து இந்த ஊழியக்காரர் என்கிற வார்த்தையை மிகவும் கௌரவமானதாகவும், பெரியதாகவும், மிகவும் அற்புதமானதாகவும், கனம் பொருந்தியதாகவும் ஆக்கி விட்டுள்ளோம்.

இந்த அடிமை என்கிற வார்த்தையை அடிமை என மொழிபெயர்த்திருந்தால், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் அடிமைகளாக எண்ணிக்கொள்ளக்கடவன்" *(Let a man regard us as slaves of Christ.).* இதில் எந்த ஒரு கௌரவமும் இல்லை. கிறிஸ்துவின் அடிமை என்பதே அடையாளத்தின் முதல் பகுதியாகும்.

ஆகவே, கிறிஸ்துவின் அடிமைகளாக இருக்கும்படி நமக்கு கட்டளைகொடுக்கப்பட்டுள்ளது. தான் கிறிஸ்துவின் அடிமை என்பதை ஒருவர் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்? அவருடைய ஜனங்களுக்கு சேவை செய்வதன் மூலம் மாத்திரமே.

நான் கிறித்துவை சேவிக்கும்போது, அவருடைய ஜனங்களுக்கு சேவை செய்கிறேன். கிறிஸ்துவை சேவிப்பதன் மூலம் ஜனங்களை சேவிப்பதற்கும், வெறுமனே ஜனங்களை சேவிப்பதற்கும் ஒரு சிறிய வித்தியாசம் உள்ளது போலத்தான் தெரியும். ஆனால் அவை இரண்டிற்கும் உள்ள அடிப்படை நோக்கம் மிகவும் வித்தியாசமானது.

ஜனங்களின் தேவைகளை சந்திப்பதிலும் நிறைவேற்றுவதிலும் ஒருவருடைய கவனம் திசைதிரும்பினால், இறுதியில் தன்னைக்கொண்டு தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை மறந்துவிடுவான். இதனால்,


______________________________________________________________

______________________________________________________________

தேவன் தம்முடைய ஊழியத்தை செய்யும்படி அழைக்கும்போது கொடுத்த ஆவிக்குரிய நியமங்களிலிருந்தும் இடறிவிடக்கூடும்.

நான் இதனை மோசேயின் வாழ்க்கை பாடத்தின் மூலமாய் கற்றுக்கொண்டேன். மோசே, இஸ்ரவேல் மக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து சென்ற போது, தேவனிடம் கவனம் செலுத்துவதை விட, மக்களின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தியதை நாம் காணலாம்.

சில சமயங்களில் நம்மை சுற்றி நிறைய தேவைகள் இருக்கும் போது நம்மைக் கொண்டு தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்பதில் கவனம் செலுத்துவது கடினமான காரியமாகிவிடும்.



மிகவும் அடிமட்டத்து ஜனங்களே 'ஹுபெறேட்ஸ்' (*huperetes*) என்று அழைக்கப்படுவர். இவர்கள் மிக சாதரணமான குறைந்தபட்ச வீட்டு பணியாளர்களையும், மிக எளிய பணியை செய்யும் மிகச் சாதாரண அடிமைகள். வேத வசனம் போதகரை இப்படி ஒரு கீழ்நிலை அடிமையாகவே கருதுகிறது. பவுல் தம்மை, கடைநிலை (*galley*) அடிமையாகவும், துடுப்பு செலுத்துபவர்களுக்கும் தாழ்ந்தவர்களாகவும் கருதுமாறு கூறுகிறார். நீங்கள் அவர்களை உயர்த்தாதிருங்கள்.

மிகவும் கடினமாக உழைத்து, பொதுவான நன்றி கூறக்கூட அவசியமில்லாத செயல்களைச் செய்வதே இந்த கடைநிலை (*galley*) அடிமையின் அர்த்தமாகும்.

நாம் எப்போதும் ஒரு கடைநிலை அடிமையைவிட மற்றொரு கடைநிலை அடிமையை உயர்வாக கருதுவதில்லை. நாம் அனைவரும் கிறிஸ்துவின் அடிமைகள். நாம் மிகவும் தாழ்ந்த வேலைக்காரர்களுக்கும் கீழே உள்ளவர்கள். *We are the lowest of low servants.*

________________________________________________________________

________________________________________________________________

அதனால் யார் சிறந்தவர் பவுலா? அப்போலோவா (Apollos)? கேபாவா (Cephas)?? என்று பவுல் கேட்டபோது, அவர்கள் எல்லோரும் இயேசுவின் கடைநிலை அடிமைகளே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. **ஒரேயொரு காரியம் என்னவெனில் தேவன் நம்மை தேர்ந்தெடுத்துள்ளார்**!!

சில இடங்களில் சீஷர்களையும் கடைநிலை அடிமைகள் என இயேசு கிறிஸ்து அழைப்பதை நம்மால் காணமுடிகிறது.

இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் 'ஹுபெறேடேஸ்' (huperetes) என்ற வார்த்தையை பயன்படுத்தும் விதத்தை நாம் பார்த்தோமானால், தேவன் வேதத்தில் கூறியுள்ள முழு ஆலோசனையையும் பரிபூரணமாக புரிந்துகொள்ள உதவும்.

***யோவான் 18:36,*** "இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் (ஹுபெறேடேஸ்) போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.

அப்போஸ்தலர்களை 'ஹுபெறேட்ஸ்' (huperetes) என லூக்கா அழைக்கிறார்.

***லூக்கா 1:1-2,*** [1]மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, [2]ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் (ஹுபெறேடேஸ்) எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக்குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால்.

அப்போஸ்தலராகிய பவுல் அதை திரும்பவும் கூறுகிறார்,

***அப்போஸ்தலர் 26:16,*** இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் (ஹுபெறேடேஸ்) சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்.

***1 கொரிந்தியர் 9:16-17,*** [16]சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. [17]நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு;

________________________________________________________________

________________________________________________________________

*உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.*

***கொலோசெயர் 1:25***, *ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு,*

## பயன்பாடு

தேவன் தம்மை குறித்தும், நம் வாழ்வில் அவருடைய சித்தத்தைக் குறித்தும் வெளிப்படுத்துவதே கர்த்தருடைய வார்த்தை ஆகும்.

தேவன் நமக்கு வைத்துள்ள எல்லாவற்றையும் வேதாகமம் உள்ளடக்காமல் இருக்கலாம். ஆனால், அவரை அறியவும் நம் வாழ்வில் அவருடைய சித்தத்தை குறித்து மனித குலம் அறிந்து கொள்ளவும் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேதாகமம் போதுமானதாகும்.

### வேதாகமத்தின் பரிபூரணம் - *Sufficiency of the Scriptures*

***2 பேதுரு 1:3,*** *தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும். அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,*

***2 தீமோத்தேயு 3:16-17,*** [16]*வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,*
[17]*அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

அதனால், ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருக்க நாம் செய்ய வேண்டியது,

| | |
|---|---|
| ➢ வேதத்தை படித்தல், | ➢ *Study the Word of God,* |
| ➢ வேதத்தை அறிந்து கொள்ளுதல், | ➢ *Know the Word of God,* |
| ➢ வேதத்தை தியானித்தல், | ➢ *Meditate the word of God,* |
| ➢ வேதத்தை மனப்பாடம் செய்தல், | ➢ *Memorize the word of God,* |
| ➢ வேதத்திற்கு கீழ்ப்படிதல் | ➢ *Obey the word of God and* |
| ➢ வேதத்தை பிரசங்கித்தல். | ➢ *Proclaim the word of God* |

________________________________________________________________

________________________________________________________________

### வேதத்தை படித்தல்

*__2 தீமோத்தேயு 2:15,__ நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.*

ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற சாதனங்கள் வாயிலாகவும் பிரசங்கங்களை கேட்பதோடு நில்லாமல், நீங்களே தனிப்பட்ட முறையில் வேத வசனத்தை படியுங்கள்.

வேத புத்தகத்தின் அச்சு நகலைப் *(hard copy)* பயன்படுத்துங்கள், மின்னணு ஊடகங்களை *(electronic media types)* பயன்படுத்த வேண்டாம்.

### வேதத்தை அறிந்து கொள்ளுதல்

*__2 பேதுரு 3:18,__ நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.*

*__சங்கீதம் 119:169,__ கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக; உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்.*

தேவனின் வார்த்தையை அறிவதன் மூலமே நமக்கு ஞானம் உண்டாகும்.

நீங்கள் தேவனின் வார்த்தையை அறியும் போது, உங்களுடைய உணர்வுகளையோ விருப்பங்களையோ சாராமல் வேத சத்தியத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்வில் முடிவுகளை எடுக்க முடியும்.

*__யோவான் 17:3,__ ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். — இயேசு கிறிஸ்து.*

### வேதத்தை தியானித்தல்

*__1 தீமோத்தேயு 4:15,__ நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு.*

*__சங்கீதம் 1:1-3,__ [1]துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், [2]கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். [3]அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.*

_________________________________________________________________

_________________________________________________________________

***யோசுவா 1:8,*** *இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்.*

***சங்கீதம் 119:148,*** *உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்.*

சென்ற வருட கூடுகையில் *(Arise 2017)* நாம் சேலாவை *(selah)* பற்றி பேசினோம்... சேலாவை செயல்படுத்துங்கள்.

### வேதத்தை மனப்பாடம் செய்தல்

***சங்கீதம் 119:11,*** *நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

***சங்கீதம் 37:31,*** *அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.*

***கொலோசெயர் 3:16,*** *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி.*

### வேதத்திற்கு கீழ்ப்படிதல்

***யாக்கோபு 1:22-25,*** *[22]அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். [23]என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; [24]அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். [25]சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

தேவனின் வார்த்தையை அறிந்தும் அதற்கு கீழ்ப்படியாதிருக்கும் போது நம் வாழ்க்கை எதை வெளிப்படுத்துகிறது?

__________________________________________________________________

__________________________________________________________________

நாம் கீழ்ப்படியாததன் மூலம் நாம் கடவுளுக்கு என்ன சொல்கிறோம் என்றால்,

- நான் உமது அதிகாரத்தை நிராகரிக்கிறேன்
- நான் உம்மை விட சிறந்தவன்
- நான் மீட்பைப் பற்றி கவலைப்படவில்லை

*What does it say of our lives when we know the Word of God, but we do not obey the Word?*

*By not obeying we are telling God that*

- *I am rejecting your authority*
- *I am smarter than you are*
- *I don't care about the redemption*

**வேதத்தை பிரசங்கித்தல் - *Proclaim the word of God***

***சங்கீதம் 118:17,*** *நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.*

சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பிராதான கட்டளை *(great commission)* நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

***யோவான் 17:8 &14,*** *நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.*

*நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது*

__________________________________________________________________

__________________________________________________________________

# 5. வாழ்க்கையில் முதலிடம்

## *Life Priorities*


***1 கொரிந்தியர் 4:1-2,*** *[1]இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். [2]மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.*

***பிரசங்கி 3:1,*** *ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு:*

*எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. ஆகவே நம்மிடம் ஒரு schedule / அட்டவணை இருப்பது அவசியமானதாகும். அதோடு கூட நாம், மற்றவரின் அட்டவணையையும் (schedule) நாம் மதிக்க வேண்டும். பிறருடைய நேரத்தையும் (schedule-லையும்) நாம் கணக்கில் கொண்டு, நம்மால் செய்ய முடிந்ததை செய்ய வேண்டும்; முடியாததை செய்ய முயற்சிக்க கூடாது. எல்லோருடையை நேரத்தையும் அனுசரிப்பதற்காக, தயவு செய்து உங்களுடயை அட்டவணையை (schedule) நசுக்காதீர்கள்.*

*21 ஆம் நூற்றாண்டில் வாழ்க்கை நம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கிறது. ஆகவே, எவருக்கும் எதற்கும் நேரம் இல்லை. நாம் ஒரு திடுதிப்/உடனடி உலகில் வாழ்கிறோம், நம்மால் எதற்காகவும் காத்திருக்க முடியாது.*

*சிலருக்கு சாப்பிட நேரமில்லை, போதுமான அளவு ஓய்வெடுக்கக்கூட நேரமில்லை; சிலருக்கு ஒரு நாளில் 24 மணி நேரத்திற்கு பதிலாக 26 மணிநேரம் வேண்டுமென ஆசைப்படுகிறார்கள்!*




________________________________________________________________

________________________________________________________________

## இயேசு கிறிஸ்துவின் மாதிரி

*மாற்கு 6:30-31,* [30]அப்பொழுது அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள். [31]அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது.

இதுதான் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களின் நிலை. ஆகையால், அவர்கள் இளைப்பாறி சாப்பிடுவதற்காக இயேசு கிறிஸ்து அவர்களை ஒரு வனாந்திரமான இடத்திற்கு அழைத்துச்செல்கிறார்.

ஒரு நல்ல உக்கிராணக்காரனாக நம்முடைய நேரத்தை நாம் எவ்வாறு கையாள வேண்டும்?

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம் சற்று பார்ப்போம்.

கிறிஸ்து வெறும் 33 1/2 ஆண்டுகள் மட்டுமே இந்த பூமியில் வாழ்ந்தார்; அதில் 3 ½ ஆண்டுகள் மட்டுமே ஊழியம் செய்தார்.

நான் உங்களுக்கு இரண்டு அதிர்ச்சியூட்டும் செய்திகளை சொல்ல விரும்புகிறேன்.

- **இயேசு தாம் செய்ய விரும்பிய அனைத்து காரியங்களையும் செய்யவில்லை!**
  ***Jesus did NOT do all that He wanted to do!***

- **ஜனங்கள் இயேசுகிறிஸ்து செய்ய வேண்டுமென்று விரும்பி எதிர்பார்த்த அனைத்து காரியங்களையும் அவர் செய்யவில்லை!!**
  ***Jesus did NOT do all that the people wanted or expected Him to do!!***

தயவு செய்து இந்த காரியம் உங்களுக்குள் ஆழமாக பதிய சிறிது நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

*யோவான் 6:38,* என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்.

*யோவான் 4:34,* இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

________________________________________________________________

________________________________________________________________

***யோவான் 17:4,*** *பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.*

**இயேசு கிறிஸ்து என்ன செய்ய வேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்பினாரோ அதை மட்டுமே அவர் செய்தார்!**

*அவரால் எப்படி அதை செய்ய முடிந்தது?*

***How did He manage to do?***

***மாற்கு 1:35-39,*** *[35]அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு,
வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.
[36]சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்துபோய்,
[37]அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று
சொன்னார்கள். [38]அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான்
பிரசங்கம் பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம்
வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி; [39]கலிலேயா
நாடெங்கும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் பிரசங்கம்
பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.*

இயேசு இடைவிடாமல் தம்முடையை நேரத்தை மக்களை சுகப்படுத்துவதிலும் அவர்களுக்கு ஊழியம் செய்வதிலும் செலவழித்திருக்க முடியும், ஏனென்றால் தேவைகள் மிகவும் அதிகமாக இருந்தன.

இந்த வசனத்தின் காலகட்டம் தான் இயேசு கிறிஸ்துவின் ஊழியப் பாதையின் ஆரம்பம். ஜனங்கள் அவரை அறிந்து கொள்ள அவர் அங்கேயே சந்தோஷமாக தங்கியிருக்க முடியும்.

ஆனால் இயேசு தேவனோடு தனித்திருக்க நேரத்தை ஒதுக்கினார்.

தேவனோடு நேரத்தை தனித்து செலவழிப்பதே முக்கியமானது என்பதை நாம் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்து தேவனோடு நேரத்தை தனித்து செலவழிப்பதால், தாம் என்ன செய்ய வேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்புகிறார் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆகவே, தேவனோடு தொடர்பு கொள்வதே முக்கியமானதாகும்.

____________________________________________________________

____________________________________________________________

இயேசுவோடு இருந்த சீஷர்கள் ஒரு விஷயத்தை தங்களுக்கு கற்றுக்கொடுக்குமாறு அவரிடம் வேண்டினர். அது ஜெபம் தான் வேறொன்றும் இல்லை.

***லூக்கா 11:1,*** *அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்."*

அவர்கள் அவரிடம் கீழே கொடுக்கப்பட்ட எதையும் கேட்கவில்லை,

- எப்படி பிணியாளியை சுகமாக்குவது,
- அப்பத்தை எப்படி பெருக்குவது,
- மரித்தவனை எப்படி உயிருடன் எழுப்புவது,
- எப்படி பிரசிங்கிப்பது,

ஆனால் அவர்கள் அவரிடம் எப்படி ஜெபம் செய்ய வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையில் உள்ள தனித்தன்மையை அவர்களால் காண முடிந்ததே இதற்கான காரணம்.

## நித்தியமே என் நோக்கம்

*நித்தியத்தின் அடிப்படையில் அனைத்தையும் செய்தல்*

***Doing everything in the perspective of eternity***

தேவன் எல்லோருடைய இருதயங்களிலும் நித்தியத்தை வைத்துள்ளார்.

***பிரசங்கி 3:11,*** *அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்.*

***Ecclesiastes 3:11,*** *He has made everything appropriate in its time. He has also put eternity in their hearts, but man cannot discover the work God has done from beginning to end.*

**தேவனிடம் ஒரு சரியான திட்டம் உள்ளது.**
***God has a perfect plan***

__________________________________________________________________

__________________________________________________________________

***2 பேதுரு 3:8-10,*** *[8]பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். [9]தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். [10]கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.*

*கர்த்தர் நம்முடைய திட்டத்தின் ஒரு பகுதி அல்ல, நாமே கர்த்தருடைய திட்டத்தின் ஒரு பகுதி என்பதை புரிந்து கொள்ளுங்கள்!*


*நாம் செய்ய வேண்டிய நற்கிரியைகளைச் தேவன் முன்னதாகவே ஆயத்தம்பண்ணியிருக்கிறார். நாம் அவற்றில் நடக்க வேண்டும்.*

***எபேசியர் 2:8-10,*** *[8]கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; [9]ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; [10]ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

## நித்தியத்தை நோக்கி வாழ்தல்

***Live in the light of eternity***

*நாம் ஆவிக்குரியவர்கள். இந்த மனித அனுபவத்திற்குள்ளாக கடந்து செல்கிறோம். நித்தியதுடன் ஒப்பிடும் போது பூமியில் நாம் இருப்பது மிகவும் குறைவு தான்.*




__________________________________________________________________

__________________________________________________________________

***யாக்கோபு 4:14,*** *நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே.*

***சங்கீதம் 39:4-5,*** *“[4]கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். [5]இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். (சேலா.)*

***சங்கீதம் 90:10-12,*** *[10]எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். [11]உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்? [12]நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.*

*நித்தியத்தோடு ஒப்பிட்டு பார்த்தால் இந்த பூமியில் நம்முடைய வாழ்வு மிகவும் குறைவே. இதனால் தான், நாம் நித்தியத்தை முன்னிலைப்படுத்தி வாழ வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.*

## மனிதனை Busy-யாக ஓட வைப்பவை




***எது உங்களை ஓய்வில்லாமல் (BUSY) இருக்க வைக்கிறது?***

***What causes you to be busy?***

### *1. பேராசை - Greed*

*மக்கள் தங்களிடம் உள்ளதை கொண்டு சந்தோஷமாக இருப்பதில்லை. அவர்களுக்கு பெரிய வீடு, பெரிய தொலைக்காட்சி, பெரிய வண்டி மற்றும் புதிதாக அறிமுகமான சாதனங்கள் போன்றவை தேவைப்படுகிறது. அதனால் அவர்கள் தங்களது சம்பளத்தில் சந்தோஷமாக இருப்பதில்லை. அதிக பணத்தை ஈட்ட அவர்கள் விரும்புகிறார்கள். அதிகம் சம்பாதிக்க அதிக நேரம் வேலை செய்கின்றனர், வெவ்வேறு இடங்களில் வேலை செய்கின்றனர், வார ஓய்வுநாட்களில் கூடுதல் நேரம் (over time) வேலை செய்கின்றனர் அல்லது சில மணி நேரம் பயணத்தில் செலவிடுகின்றனர். இது போன்ற நிறைய காரணங்கள் உள்ளன.*

____________________________________________________________________

____________________________________________________________________

மனநிறைவே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிகச் சிறந்த நல்லொழுக்கம் என்று வேதாகமம் கூறுகிறது.

***1 தீமோத்தேயு 6:6-9,*** *[6]போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். [7]உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். [8]உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். [9]ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.*

### 2. மனிதர்களை பிரியப்படுத்துதல் - *People tend to please men*

***அப்போஸ்தலர் 6:1-7,*** *[1]அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். [2]அப்பொழுது பன்னிருவரும் சீஷர்கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. [3]ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். [4]நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.*

*[5]இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு, [6]அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.*

*[7]தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.*

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு பெரும் சவாலை ஆதி திருச்சபையினர் எதிர்கொண்டனர். அவர்கள் தங்களுடைய முன்னுரிமைகளை *(priorities)* சரியாக அமைத்துக்கொண்டனர். *They set their*

______________________________________________________________

______________________________________________________________

*priorities right.* மனிதர்களை மகிழ்விப்பது அல்ல தேவன் மீது கவனம் செலுத்துவதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்.

தங்களுடைய பணியில் கூடுதல் பொறுப்பை சேர்ப்பதற்குப் பதிலாக, அந்த கூடுதல் பொறுப்புகளை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தனர். தேவனுடைய சித்தமும், நம்முடைய முன்னுரிமைகளுமே *(priorities)* நம்முடைய காரியங்களை தீர்மானிக்க வேண்டும். மாறாக மற்றவரின் விருப்பமோ அல்லது தேவையோ நம்முடைய பணிகளை தீர்மானிக்கக் கூடாது.

மனிதர்களை பிரியப்படுத்துவதில் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை.

### 3. சோம்பேறியாக இருந்து உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள் - *Don't be lazy in wasting your time*

***நீதிமொழிகள் 6:6-11,*** *[6]சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். [7]அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், [8]கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும். [9]சோம்பேறியே, நீ எவ்வளவுநேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? [10]இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? [11]உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும்.*

***நீதிமொழிகள் 12:24,*** *ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகைசெய்யும்; சோம்பேறியோ பகுதிகட்டுவான்.*

***நீதிமொழிகள் 13:4,*** *சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.*

***நீதிமொழிகள் 18:9,*** *தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்.*

***நீதிமொழிகள் 20:4,*** *சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான், அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது.*

***நீதிமொழிகள் 21:25,*** *சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதியாததினால், அவன் ஆசை அவனைக் கொல்லும்;*

________________________________________________________________

________________________________________________________________

***நீதிமொழிகள் 26:14,*** *கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான்.*

***மத்தேயு 25:26,*** *"அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே.*

சோம்பேறியாக இருந்த மனிதனே தன் தாலந்தை உபயோகிக்காமல் இருந்தான். மேலும் அவன் தான் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இல்லாமல் போனதற்காக தண்டனையும் பெற்றான்.

## நேரத்தை திட்டமிடுதல் - *Planning and schedule*

***லூக்கா 14:28-30,*** *உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து*
*[29] அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால்,*
*பார்க்கிறவர்களெல்லாரும்: [30] இந்த மனுஷன் கட்டத்தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?*

இயேசு இந்த பத்தியில் தம்முடைய சீஷராக இருப்பதற்கான நிபந்தனைகளை கூறுகிறார். சீஷனாக இருப்பதற்கு அவர் கூறும் முதல் நிபந்தனையே, திட்டமிட்டு செயல்படுபவர்களாக இருக்க வேண்டும் என்பதே.

*1 நாள் = 24 மணி நேரம் / 1 நாள் = 1,440 நிமிடங்கள்*


*1 வாரம் = 168 மணி நேரம் / 1 வாரம் = 10,080 நிமிடங்கள்*

*1 மாதம் = 730.48 மணி நேரம் / 1 மாதம் = 43,829.07 நிமிடங்கள்*

*1 வருடம் = 8765.81 மணி நேரம் / 1 வருடம் = 525,949 நிமிடங்கள்*

______________________________________________________________

______________________________________________________________




*1*

***கொரிந்தியர் 14:40,*** *சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.*

அதனால், தற்போது நீங்கள் ஒருநாளில் செய்வதை இப்போது பட்டியலிடலாம். இது உங்களுக்காக நீங்கள் செய்வது ஆகவே, இதில் நேர்மையாக பட்டியலிடுங்கள். கூடுமானால் உங்களுடைய கணவன்/மனைவியுடன் இணைந்து இந்த அட்டவணையை நிரப்புங்கள்.

| **தொடங்கும் நேரம்** | **முடிக்கும் நேரம்** | **செலவிடும் மணி நேரம்** | **நோக்கம்** |
|---|---|---|---|
| *06:00* | *06:30* | *0:30* | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

________________________________________________________________

________________________________________________________________

| **தொடங்கும் நேரம்** | **முடிக்கும் நேரம்** | **செலவிடும் மணி நேரம்** | **நோக்கம்** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*இப்போது உங்கள் அட்டவணையிலிருந்து, நீங்கள் அதிகம் செலவிடும் காரியம் தொடங்கி மேலிருந்து கீழ் (descending order) அனைத்து காரியங்களையும் வரிசைப்படுத்துங்கள்.*

| **மணி நேரம்** | **நோக்கம்** |
|---|---|
| *7 (அ) 8* | *உறக்கம்* |
| | *வேலை* |
| | *பயணம்* |
| | *சமையல்* |
| | *உண்ணுதல்* |
| | *உடற் பயிற்சி* |




___________________________________________________________________

___________________________________________________________________

| **மணி நேரம்** | **நோக்கம்** |
|---|---|
| | தொலைக்காட்சி |
| | படித்தல் |
| | எழுதுதல் |
| | ஜெபித்தல் |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

*இன்று தசமபாகம் கொடுப்பதை பற்றி நிறைய பிரசங்கிகள் பேசுகிறார்கள், நீங்கள் உங்கள் நேரத்தில் 10% தேவனுக்காக செலவழிக்கிறீர்களா?*

*இந்த கடினமான கேள்விகளை நீங்கள் உங்களுக்குள்ளே கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.*

1. *என்னுடைய நேரம் நித்தியத்தின் வெளிச்சத்தில்தான் செலவழிக்கப்படுகிறதா? Is my time spent in the light of eternity?*

2. *என்னுடைய வாழ்க்கையில் தேவனுக்கு முன்னுரிமை கிடைக்கிறதா? Does God gets priority in my life?*

3. *நான் என்னுடைய நேரத்தை ஞானத்துடன் செலவிடுகிறேனா? Am I spending my time wisely?*

____________________________________________________________________

____________________________________________________________________


4. *நான் செய்ய விரும்புகிறதை இது பிரதிபலிக்கிறதா? Does this reflect what I wanted or desired to do?*

5. *எந்த விஷயங்களை எல்லாம் நான் என்னுடைய அட்டவணையிலிருந்து உடனடியாக நீக்கலாம்? What are the things I can delete/ cut from my schedule immediately?*

*நீங்கள் உங்கள் நாளுக்கான ஒரு நேர அட்டவனையை இப்போது தயார் செய்யுங்கள்.*

## *எதற்கு முதலிடம்?*

## *Priorities*




### *1. தேவனோடு செலவிடும் நேரம்*

*தேவனோடு நீங்கள் செலவிடும் நேரமே நீங்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவை பிரதிபலிக்கிறது.*

***Time with God will reflect your relationship with God***

*தேவனோடு நான் கொண்டுள்ள உறவை கட்டியெழுப்புவதற்கு நான் ஒதுக்கிய நேரம் அதற்கான தாக்கத்தை உண்டாக்குமா?*

______________________________________________________________________

______________________________________________________________________

*இந்த தேவையை சந்திப்பதற்கு நான் என்னுடைய நேரத்தை சரி செய்யலாமா/ செய்யவேண்டுமா அல்லது இந்த வேலையை வேறு யாரேனும் செய்ய முடியுமா?*

***நீங்கள் மட்டுமே செய்யகூடியவை:*** *தேவனுக்கு செலவிடப்படும் நேரம், அவருடைய வார்த்தையை நீங்களே வாசித்தல், வசனத்தை மனப்பாடம் செய்தல், உபவாசித்தல், மனந்திரும்புதல் போன்றவை.*

## *2. கணவன்/மனைவியுடன் செலவிடும் நேரம்*

### கணவன்/மனைவியுடன் நேரத்தை செலவிடுதல் – இரண்டாம் பெரிய பொறுப்பு

***Time with spouse the second biggest responsibility***

*ஒரு காரியத்தை செய்யும்போது, இது என் கணவருடனோ, மனைவியுடனோ, பிள்ளைகளிடமோ அல்லது பெற்றோரிடமோ பொதுவாக நான் செலவிடும் நேரத்தை எப்படி பாதிக்கும் என சிந்தித்து திட்டமிட வேண்டும்.*

***நீங்கள் மட்டுமே செய்யகூடியவை:*** *உங்கள் கணவன்/மனைவியுடன் நெருக்கமாக இருப்பது, நேருக்கு நேரான பேச்சுவார்த்தைகளை வைத்துக்கொள்வது, அவர் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை செய்து அவருக்கு/அவளுக்கு உதவுவது, உடற்பயிற்சி செய்தல், சத்தான உணவை உண்ணுதல்.*

## *3. குழந்தைகள் / பெற்றோருடன் செலவிடும் நேரம்*

***Time with kids / parents***

*(உங்கள் வாழ்க்கையின் சூழலை பொறுத்தது)*

*நித்தியத்திற்கு முக்கியத்துவம் இல்லாததும், குடும்பத்தின் ஐக்கியத்தை மேம்படுத்தாத செயல்களுக்கு என் குழந்தைகளைச் அழைத்து சென்று இந்த நேரத்தை செலவிட வேண்டுமா?*

*வேறு யாரையேனும் இந்த காரியத்தை செய்யச் சொல்வது சிறந்ததா அல்லது இந்த காரியத்தை நானே செய்யலாமா/ செய்யவேண்டுமா?*

***நீங்கள் மட்டுமே செய்யகூடியவை:*** *உங்கள் பிள்ளைகளை படுக்கையில் போடுதல், உங்கள் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துதல், உங்கள் பெற்றோரை கனப்படுத்துதல்.*

______________________________________________________________________

______________________________________________________________________

## *4. விசுவாசிகளுடனான உறவும் பொறுப்பும்*

***Relationships/Responsibilities to believers***

*இந்த நிகழ்ச்சி என் சபையில் திட்டமிடப்பட்ட காரியங்களில் என் ஈடுபாட்டை பாதிக்காதா?*

*என்னால் மட்டுமே செய்யகூடிய காரியங்களில் அதிக கவனம் செலுத்துவதற்காக இதனை வேறு ஒருவருக்கு ஒப்படைக்க முடியாதா? (யாத்திராகமம் 18:13-22)?*

***நீங்கள் மட்டுமே செய்யகூடியவை:*** *நீங்கள் ஒப்புக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவது, உங்கள் சபையின் மூத்த உறுப்பினருடன் நீங்கள் ஆரம்பித்த உரையாடலை தொடர்வது.*

## *5. அவ்விசுவாசிகளுடனான உறவும் பொறுப்பும்*

***Relationships/Responsibilities to unbelievers***

*இந்த நிகழ்ச்சி அவிசுவாசிகளோடு நான் ஏற்கனவே கொண்டுள்ள உறவில் நேரத்தை செலவிட அனுமதிக்குமா?*

*இந்த நிகழ்ச்சி எனக்கு புதிய அவிசுவாசிகளை சந்திக்கவும் அவர்களுடனான புதிய நட்பை உருவாக்கவும் அனுமதிக்குமா?*

*தேவன் நான் இந்த நாளில்/ வாரத்தில்/ மாதத்தில் முடிக்க கொடுத்த வேலை (வீட்டிற்கு வெளியே / வீட்டிற்குள்ளே).*

*அண்டை வீட்டாரிடமும் முதலாளிக்கு கீழ்ப்படிவதிலும் நம் ஒளியை பிரகாசிக்கச்செய்தல்.*

________________________________________________________________

________________________________________________________________

| தொடங்கும் நேரம் | முடிக்கும் நேரம் | செலவிடும் மணி நேரம் | நோக்கம் |
|---|---|---|---|
| *06:00* | *06:30* | *0:30* | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

____________________________________________________________

____________________________________________________________

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

நான் என் வேலைகளை சிறப்பாக முடிப்பதற்கு யதார்த்தமாக நேரத்தை திட்டமிட்டிருக்கிறேனா? அல்லது துல்லியமாக செய்துமுடிப்பதற்கு திட்டமிட்டிருக்கிறேனா?

*Have I been realistic in the amount of time I have scheduled to complete this task well but not perfection?*

____________________________________________________________________

____________________________________________________________________

# 6. தாலந்துகளில் உக்கிராணத்துவம்

உங்களுடைய வாழ்க்கையின் எந்தவொரு மிகச்சிறிய விஷயத்தையும் தேவனால் பயன்படுத்த முடியும். நாம் வீண் என்று எண்ணியவற்றை தேவன் பயன்படுத்தி தம்முடைய மகிமைக்காக அவருடைய ராஜ்யத்தில் அற்புதமான விளைச்சலையும் அறுவடையையும் உண்டாக்க முடியும்.

***1 பேதுரு 4:10,*** *அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.*

நம் ஒவ்வொருவரிடமும் தேவன் அளித்த தாலந்துகளும், திறமைகளும், ஆவிக்குரிய வரங்களும் இருக்கும். நாம் அவற்றை தேவனுடைய ராஜ்யத்தில் பயன்படுத்த வேண்டும்.

## மோசே

வேத வசனத்தில் இருக்கும் கீழ்க்கண்ட இந்த எளிமையான எடுத்துக்காட்டுடன் இதை நான் துவங்குகிறேன்.

***யாத்திராகமம் 4:1-4,*** *[1]அப்பொழுது மோசே: அவர்கள் என்னை நம்பார்கள்;
என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை
என்று சொல்லுவார்கள் என்றான். [2]கர்த்தர் அவனை நோக்கி: உன்
கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான். [3]அதைத் தரையிலே
போடு என்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபோது, அது
சர்ப்பமாயிற்று; மோசே அதற்கு விலகி ஓடினான். [4]அப்பொழுது கர்த்தர்
மோசேயை நோக்கி: உன் கையை நீட்டி, அதின் வாலைப் பிடி என்றார்;
அவன் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தபோது, அது அவன் கையிலே
கோலாயிற்று. [5]ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின்
தேவனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குத்
தரிசனமானதை அவர்கள் நம்புவதற்கு இதுவே அடையாளம் என்றார்.*

அந்நாட்களில் ஒவ்வொரு மேய்ப்பனும் பயன்படுத்திய கோலை முதலில் பார்க்கும்போது மிகவும் குறைத்து மதிப்பிடுவீர்கள்.

அது மேய்ப்பனின் கைகளில் குறைந்த மதிப்பினைக் கொண்டிருந்தாலும் தேவனின் கரங்களில் அதிக மதிப்பு உடையது.

மோசேயின் கரங்களில் இருந்த கோலைக் கொண்டு தேவன் மிகப் பெரிய அற்புதங்களை செய்தார். மோசேயின் கரங்களில் இருந்த வரை அது வெறும்

________________________________________________________________

________________________________________________________________

*கோல் தான். ஆனால் அவன் அதை கீழே போட்டு, பிறகு அதை எடுத்த பின்னர் அது தேவனுடைய கோலானது.*

*வனாந்திரத்தில் 40 ஆண்டு காலத்திற்கு 3 மில்லியன் (30 லட்சம்) ஜனங்களின் தேவைகளை சந்திப்பதற்கு அந்த கோல் ஒன்றே போதுமானதாக இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!*




*நாம் எதை அற்ப மதிப்புள்ளது என்று எண்ணுகிறோமோ, அதையே தேவன் தம்முடைய நாமத்திற்கு மகிமை உண்டாகும்படி, வல்லமையாக பயன்படுத்துவார்.*

*எனவே, இப்பாடத்தில் தேவன் உங்கள் கரங்களில் கொடுத்து வைத்திருப்பவை என்ன என்பதை நாம் சிந்திக்கலாம்?*

***எபேசியார் 4:11-16,*** *[11]மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவானவளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், [12]பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், [13]அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். [14]நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித*

________________________________________________________________

________________________________________________________________

*காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், [15]அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். [16]அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.*

தம்மை பிரத்தியேகமான வழியில் வெளிப்படுத்தும்படி தேவன் நம் ஒவ்வொருவரையும் வடிவமைத்திருக்கிறார்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத பகுதி புரிந்துகொள்வதற்கு பெரிய பகுதியானாலும், எல்லா விசுவாசிகளும் அடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறவற்றை இப்பகுதி நமக்கு விளக்குகிறது.

எல்லா விசுவாசிகளும் அடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறவை:

| | |
|---|---|
| ➢ விசுவாசத்தில் ஒருமைப்பாடு,<br>➢ பூரண புருஷராக,<br>➢ இனி குழந்தைகளாய் இராதபடி,<br>➢ கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி,<br>➢ அன்பினால் சத்தியத்தை கைகொள்ளுதல்,<br>➢ ஒருவரோடொருவர் சேர்ந்து வளருகிறவர்களாயிருக்கும்படி<br>➢ அன்பினால் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குதல் | ➢ *the unity of faith,*<br>➢ *matured man,*<br>➢ *no longer be children,*<br>➢ *fullness of Christ,*<br>➢ *speaking truth in love,*<br>➢ *grow together and*<br>➢ *edifying in one another in love* |

பரிசுத்த ஆவியானவரின் வரங்களை குறித்து நம்முடைய முந்தய கூடுகையில் பார்த்தோம். இதனை நீங்கள் YouTube-ல் காணலாம்.

தவிர நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்டுள்ளோம்.

***1 கொரிந்தியர் 12:11,*** *இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.*

அவருடைய சித்தத்தை அவரே தேர்வு செய்வார்.

________________________________________________________________

________________________________________________________________

*1 **கொரிந்தியர் 12:18,** தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.*

தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பங்குபெற நிறைய வாய்ப்புகள் உள்ளன.

- *சுவிசேஷ ஊழியம் (Evangelism),*
- *ஆராதனை (Worship),*
- *பிரசங்கம் (Preaching),*
- *இசை (Music),*
- *போதனை (Teaching),*
- *நிர்வாகம் (Administration),*
- *எழுதுதல் (Writing),*
- *பாடுதல் (Singing),*
- *தீர்க்கதரிசனம் (Prophecy) போன்ற மற்றும் பல.,*

இதனையே நம்முடைய சபைகளிலும் காணலாம், பலவிதமான வரங்களையும் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| *வரவேற்பு ஊழியம் (Welcome ministry),*<br>*சுவிசேஷ ஊழியம் (Evangelism),*<br>*பாடகர் குழு (Choir),*<br>*இசை (Music),*<br>*சபையை ஆயத்தப்படுத்துதல் (Setting up the church),*<br>*சுத்தப்படுத்துதல் (Cleaning),* | *கணினி (Computer),*<br>*ஒலி அமைப்பு (Sound system),*<br>*ஆராதனை (Worship),*<br>*பிரசங்கம் (Preaching),*<br>*போதனை (Teaching),*<br>*தேநீர் (coffee/ tea) தயாரித்தல்,*<br>*பந்தி பரிமாறுதல் (Serving) போன்றவை.,* |

ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்ய திறமையுள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய வரங்களை கண்டறிந்து அவற்றை "மற்றவரின் நலனிற்காக" பயன்படுத்துவதே உக்கிராணத்துவத்தின் முக்கிய பங்காகும். இதனால் சபையின் முழு "சரீரமும்" வளர்ந்து தேவ அன்பினால் கட்டியமைக்கப்படும்.

________________________________________________________________

________________________________________________________________

இங்கு அமர்ந்திருக்கும் அனைவரிடமும், மேலும் இதனை பார்த்துக்கொண்டிருக்கும் அனைவரிடமும் ஒரு விசேஷமான வரம்/திறமை இருக்கிறது.

***மத்தேயு 25:14-15,*** *"[14]அன்றியும் பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. [15]அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்*

***Matthew 25:14-15,*** *"For it is just like a man going on a journey. He called his own slaves and turned over his possessions to them. [15] To one he gave five talents;[c] to another, two; and to another, one—to each according to his own ability. Then he went on a journey. Immediately*

இயேசு இந்த உவமையில் அடிமையை பற்றி கூறினார்.

அடிமை என்றால், "மற்றவரின் விருப்பத்திற்காக தனது சொந்த நலன்களை புறக்கணித்து, தன்னையே மற்றவருக்காக அர்ப்பணிப்பவர்" என்று பொருள்.

துல்லியமாக இதை செய்யவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

***2 கொரிந்தியர் 8:5,*** *மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.*

***2 Corinthians 8:5,*** *It was more than we could have hoped for! First they gave themselves to the Lord; and then, by God's will they gave themselves to us as well. (GNT)*

மத்தேயு 25:14-15 வசனங்களில் "தன் ஆஸ்திகளை" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, அனைத்தும் தேவனுக்கே சொந்தம் என்று நமக்கு நினைவுபடுத்துகிறார். நம்மை அவற்றின் உக்கிராணக்காரர்களாக ஏற்படுத்தினார்.

தாலந்துகள் என்பது பணம் அல்லது சொத்தின் மதிப்பு.

ஆனால் நிச்சயமாக, இந்த உவமை பண முதலீட்டையும் (capital investment), வணிக நிர்வாகத்தையும் விட மேலான கருத்தை நமக்கு அறிவிக்கிறது.

______________________________________________________________

______________________________________________________________

ஒவ்வொருவருக்கும் "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக" கொடுக்கப்பட்டுள்ளது.

தேவனே நமக்கு அந்த தாலந்துகளை கொடுத்தார்!

ஆவிக்குரிய வரங்களை குறித்து நாம் பார்க்கும்போது, தேவன் தம் விருப்பத்திற்கு ஏற்றபடி ஆவிக்குரிய வரங்களை கொடுத்தார்.

*__1 கொரிந்தியர் 12:18,__ தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.*

தேவன் நமக்கு ஆவிக்குரிய வரங்களை மட்டும் ஒப்படைக்கவில்லை, கூடுதலாக தேவன் நம் ஒவ்வொருவரையும் அவர் விரும்பிய விதமாகவே உருவாக்கி, நமக்கு தாலந்துகளையும் திறமைகளையும் கொடுத்தார். நாம் அவற்றை அவருடைய மகிமைக்காக முதலீடு செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

நாம் உண்டாக்கப்பட்டதுமுதல், நாம் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டோம் என்பதை வேதவசனங்கள் நமக்கு தெளிவாக விளக்குகின்றன.

*__சங்கீதம் 139:13,__ நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.*

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு தாலந்துகள் கொடுக்கப்பட்டுள்ளதை இயேசு தெளிவாக கற்றுக்கொடுத்தார். பல ஆவிக்குரிய வரங்கள் உள்ளன. சிலர் பெரிய காரியங்களுக்காகவும் சிலர் சிறிய காரியங்களுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆனால் எல்லோருமே அவசியம்.

எல்லா ஆவிக்குரிய வரமும்/ தாலந்தும்/ திறனும் சபையின் வாழ்க்கைக்கு முக்கியம்.

சபையாக சரீரத்தில் வெவ்வேறு வரங்களும் திறன்களும் உடைய அநேக உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களிடம் தேவன் அந்தந்த வரங்களை/திறமைகளை ஒப்படைத்துள்ளார். முழு சபையின் ஆரோக்கியத்திற்கு எல்லோரும் அவசியம்.

*__1 கொரிந்தியர் 12:14,__ சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களை உடையதாயிருக்கிறது*

*__1 கொரிந்தியர் 12:26,__ ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.*

________________________________________________________________

________________________________________________________________

தேவன் திறமைகளையும் ஆவிக்குரிய வரங்களையும் சபையாகிய சரீரத்தின் பொதுவான நலனுக்காக வழங்கினார்.

*1 **கொரிந்தியர்** 12:7, ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது*

***1 Corinthians 12:7,** But the manifestation of the Spirit is given to each one for the profit of all:*

அப்படியானால், நீங்கள் உங்கள் ஆவிக்குரிய வரங்களை அடையாளம் கண்டுகொண்டு அவற்றை பயன்படுத்த உங்களை எது தடுக்கிறது?

நாம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப செல்வோம்!

மோசேயிடம் தாலந்துகளும் திறமைகளும் இருந்தன. ஆனால் அவர் அதனை நீண்ட காலமாக புரிந்து கொள்ளவில்லை.

தேவன் மோசேயை பார்வோனிடத்தில் போகும்படி கூறிய போது மோசே பல சாக்குகளை கூறினார். இறுதியாக தலைமை தாங்கி நடத்துவதற்கான திறமை தன்னிடம் இருப்பதை அறிந்து கொண்டார்.

மோசே பார்வோனிடத்தில் இருந்து ஓடிச்சென்றார். அந்த பயம் அவரை பற்றிக்கொண்டிருந்தது. இரண்டாவதாக, எகிப்தியரோ/இஸ்ரவேலரோ தன்னை மதிக்க மாட்டார்கள் என்று அவர் அறிந்திருந்தார்.

**மோசே, உன்னுடைய கரங்களில் என்ன இருக்கிறது?**

மேய்ப்பனின் கோல் மாத்திரமே

ஆடுகளை வழிநடத்த பயன்படும் பலவீனமான, மெலிந்த குச்சி.

**மோசே அந்த கோலை கீழே போடு!**

அது பாம்பாக மாறியது

அது உயிருள்ள ஜீவனாக மாறியது!

நீங்கள் வைத்திருப்பதை தேவனிடம் தாருங்கள். உங்களிடம் உயிரற்று இருப்பவை அவரிடத்தில் உயிர்பெற்று வரும்.

கிறிஸ்தவர்களே, உங்கள் கரங்களில் என்ன உள்ளது?

வெகு சில எளிமையான, சிறிய காரியங்களா?

சில புறக்கணிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட தாலந்துகளா வரங்களா?

________________________________________________________________

________________________________________________________________

இருந்தாலும், நீங்கள் அவற்றை கொண்டுவந்து பலிபீடத்தின் மேல் ஒப்புக்கொடுங்கள்.

மோசே மேய்ப்பனின் கோலை எடுத்தார். ஆனால் அது ஒருபோதும் மேய்ப்பனின் கோல் என அழைக்கப்பட்டதில்லை. அது "**தேவனின் கோல்**" என்றே வேதம் அழைக்கிறது.


***யாத்திராகமம் 4:20,*** *அப்பொழுது மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்துக்குத் திரும்பினான்; தேவனுடைய கோலையும் மோசே தன் கையிலே பிடித்துக்கொண்டுபோனான்.*

***யாத்திராகமம் 17:9,*** *அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில்* ***தேவனுடைய கோலை*** *என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.*

ஆகையால், உங்கள் முக்கியமற்ற காரியத்தை கொடுத்தால், தேவன் அதை பயன்படுத்தி விசேஷமான ஒன்றாக மாற்றிவிடுவார்.

தனது தாலந்துகளை தேவ மகிமைக்காக பயன்படுத்திய இன்னொரு உதாரணத்தை வேதாகமத்தில் இருந்து பார்ப்போம்.

## நல்ல சமாரியன்




__________________________________________________________________

__________________________________________________________________

நல்ல சமாரியனை குறித்த உவமை *(The Parable of Good Samaritan)*

**லூக்கா 10:30-37,** [30-36] இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக்கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித்தோன்றுகிறது என்றார்.

[37] அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்

*[37] "The man who gave him practical sympathy," he replied. "Then you go and give the same," returned Jesus. (PHILIPS)*

இந்த சூழலை நான் உங்களுக்கு அமைத்து தருகிறேன்.

சமாரியனிடம் இருந்தது,

- கழுதை,
- திராட்சரசம்,
- எண்ணெய்,
- துணி,
- பணம்
- மனதுருக்கம் நிறைந்த இதயம் *(Heart filled with kindness)*

____________________________________________________________

____________________________________________________________

இதனையே நாம் இன்றைய காலகட்டத்திற்கு மாற்றி அமைத்தோமெனில், அந்த நல்ல சமாரியன் உங்களையும் என்னையும் போன்ற ஒரு நடுத்தர வர்க்கத்தை *(Middle-class)* சேர்ந்த ஒருவர் என்றே நாம் கூறுவோம்.

| | |
|---|---|
| கழுதை | போக்குவரத்து வாகனம் *(Transport car)* |
| திராட்சரசம் | ஆடம்பரம் *(Luxury)* |
| எண்ணெய் | ஆடம்பரம் *(Luxury)* |
| துணி | முதல் உதவி பெட்டி மற்றும் நிறைய கூடுதல் துணிகள் *(First aid kit plus plenty of spare clothes)* |
| பணம் | கூடுதலான பணம், அட்டை *(Spare money, cards)* |
| மனதுருக்கம் நிறைந்த இதயம் | உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்து |

அந்த நல்ல சமாரியன் தன்னிடம் இருந்த அனைத்தையும் பயன்படுத்தினார்.

| | |
|---|---|
| திராட்சரசத்தை அந்த புண்ணின் மீது ஊற்றினார் | கிருமிநாசினி *(Antiseptic)* |
| எண்ணெய் | குணமடைவதற்கு |
| எண்ணெய் | ஆடம்பரம் *(Luxury)* |
| துணி | காயங்களை கட்ட பயன்படுத்தப்பட்டது |
| கழுதை | பாதிக்கப்பட்டவரை கூட்டிச் செல்ல உதவியது. ஒருவேளை அந்த மனிதனை தன் கழுதையின் மீது போட்டுவிட்டு அந்த சமாரியன் நடந்தே கூட சென்றிருக்கலாம். சமாரியன் செல்ல வேண்டிய தூரத்தை விட கூடுதலான தூரம் சென்றிருக்கலாம் *(going extra mile)*. |

__________________________________________________________________

__________________________________________________________________

| | |
|---|---|
| பணம் | பாதிக்கப்பட்டவர் தங்குவதற்கு பணம் செலுத்தினார் |
| அவரால் முடிந்த அனைத்தையும் செய்தார் | தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் *(resource)* பயன்படுத்தினார் |
| கூடுதலான பணம் | பாதிக்கப்பட்டவரின் எதிர்காலத்திற்கு தேவையான கூடுதலான இரண்டு நாணயங்களையும் செலுத்தினார் |
| உறுதியளித்தார் | அவர் திரும்பி வரும் போது ஏதேனும் கூடுதலாக செலவாகி இருந்தால் அதையும் நிச்சயம் செலுத்துவதாக உறுதியளித்தார் |

உக்கிராணத்துவத்திற்கான எத்தகைய எடுத்துக்காட்டு இவர் என்பதை உங்களால் காணமுடிகிறதா! அவரிடம் உள்ள அனைத்தையுமே தேவ மகிமைக்காக பயன்படுத்தினார்.

பழைய ஏற்பாட்டில் உள்ள ஒரு வசனத்தை நான் உங்களுக்கு காண்பிக்கிறேன். இதனை தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலர்களை அடிமைத்தனத்தில் இருந்து வழிகாட்டிய போது கூறினார்.

***யாத்திராகமம் 10:26,*** *எங்கள் மிருக ஜீவன்களும் எங்களோடே கூடவரவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அவைகளிலிருந்து எடுக்கவேண்டும்; இன்னதைக்கொண்டு கர்த்தருக்கு ஆராதனை செய்வோம் என்பது நாங்கள் அங்கே போய்ச் சேருமளவும் எங்களுக்குத் தெரியாது என்றான்.*

எல்லாவற்றையும் கொண்டு வாருங்கள். கர்த்தர் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார் என்று நமக்குத் தெரியாது!

உங்களிடம் அத்தகைய அணுகுமுறை உள்ளதா?

________________________________________________________________

________________________________________________________________

### உங்கள் கையில் உள்ளவை

## *Application*

தேவன் உங்களிடத்தில் ஒப்படைத்த பொக்கிஷங்களின் உக்கிராணத் திட்டத்தை குறித்து யோசிப்பதற்கு நீங்கள் குடும்பமாக சில மணி நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

நம்முடைய நேரத்தையும் தாலந்துகளையும் எவ்வாறு செலவழிப்பது என்பதை பற்றி நாம் யோசிப்போம்.

ஆரோக்கியமான உக்கிராணத்துவம் பணத்தை பற்றியது. இந்நாட்களில் நமக்கும் நம்முடைய சமூகத்திற்கும் பணம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். பணமே நமது கண்கூடான "பொக்கிஷம்."

அந்த பணத்தை வைத்து என்ன செய்கிறோம் என்பதை பார்க்கும்போது நம்முடைய இருதயம் எங்கே இருக்கிறது என்பது வெளிப்படும்.

***1 கொரிந்தியர் 16:1-4,*** *[1]பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும்*
*தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப்*
*பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். [2]நான்*
*வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன்*
*வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும்*
*தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன். [3]நான் வரும்போது உங்கள்*
*உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள்*
*தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில்*
*நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன். [4]நானும்*
*போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.*

பவுலின் ஆலோசனை மிகவும் எளிமையானது.

நேரத்தை ஒதுக்கி வையுங்கள், அது தான் ஞாயிற்றுக்கிழமை.

உங்களுடைய வருமானத்திற்கு ஏற்ப பணத்தை ஒதுக்கி வையுங்கள்.

அதை சேகரித்து ராஜ்யத்தில் முதலீடு செய்யுங்கள்.

நீங்கள் கொடுப்பதன் நோக்கத்தை கவனித்துப்பாருங்கள். பவுல், எருசலேமில் உள்ள சபையின் தேவைக்காக மக்கெதோனியா *(Macedonia)* மற்றும் கலாத்தியா நாட்டிலுள்ள அனைத்து சபைகளிடமிருந்தும் பணத்தை சேகரித்தார்.

__________________________________________________________________

__________________________________________________________________

எங்கே தேவன் உங்களை வழிநடத்துகிறாரோ அங்கே உங்கள் காணிக்கைகளை செலுத்துவது தான் சிறந்தது.

உக்கிராணத்துவத்தை ஆராதனையின் ஒரு வடிவமாக உணரும்போது, நாம் தேவனிடத்தில் இருந்து பெற்ற ஆசிர்வாதங்கள் நம் நினைவிற்கு வரும்.

தேவன் நமக்கு செய்ததை வைத்து நன்றியுணர்வுடன் இருத்தல்.

தேவனால் நம்மூலம் என்ன செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் இருப்பது. தேவனிடம் இருந்து பெற்றதை மற்றவர்களுடன் பகிரும் வாய்ப்பு கிடைக்கும் போது நம்முடைய பணப்பையை தாராளமாக திறப்பதாகும்.

_______________________________________________________________

_______________________________________________________________

---

---

## *7. தேவ சமாதானம் - Peace of God – காலை தியானம் 02*

*தேவன் நம்மை தம்முடைய சமாதானத்தின் மூலம் வழிநடத்துகிறார். இந்த சமாதானமானது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நமக்குள் இருக்கிறது.*

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் கூட அவர் தம்மை பின்பற்றுபவர்களின் சமாதானம், களிப்பு மற்றும் விசுவாசத்தை குறித்து அக்கறையுடன் இருந்தார். நாளை மிகவும் கொடூரமான முறையில் உங்களை கொல்லப் போகின்றனர் என்பதை நீங்கள் அறிந்திருந்தால், யாருடைய சமாதானத்தை குறித்து அக்கறையாக இருந்திருப்பீர்கள்? மற்றவரின் சமாதானத்தை குறித்தா அல்லது உங்களுடைய சமாதானத்தை குறித்தா?*




*இயேசு கிறிஸ்து தம்முடைய சமாதானத்தை கொடுப்பதாக கூறினார்.*

***யோவான் 14:27,*** *"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக..*

*"Peace is what I leave with you; it is my own peace that I give you. I do not give it as the world does. Do not be worried and upset; do not be afraid. (GNT)*

________________________________________________________________

________________________________________________________________

உலகத்தை பொறுத்த வரை சமாதானம் என்றால், பிரச்சனைகள் கஷ்டங்கள் இல்லாமல் இருப்பதே. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு, தேவனுடைய பிரசன்னத்தையே சமாதானம் என இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் சமாதானம், எல்லா வகையான பிரச்சனைகள், பயம், கவலை, மன அழுத்தம் மற்றும் பதட்டங்களையும் விரட்டியடிக்கிறது.

***யோவான் 16:33***, *"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்."*

உலகத்தை வென்றவர் தம்முடைய சமாதானத்தை நமக்காக தந்துள்ளார்.

***யோவான் 20:19***, *வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.."*

***யோவான் 20:21***, *இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,"*

***யோவான் 20:26,*** *மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.!"*

*ஏன் இது இவ்வளவு முக்கியம்?*

*நீங்கள் உங்கள் சமாதானத்தை இழக்கும் போது, உங்களுடைய எதிரி உங்களை மூன்று விதமான பகுதிகளில் தாக்குகிறான். இது உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை பாதிக்கிறது. மேலும் நீங்கள் நல்ல உக்கிராணக்காரராக செயல்படுவதை தடுத்து நிறுத்துகிறது.*

1. *தேவனின் மீதுள்ள ஆதி அன்பு - First love towards God*
2. *உங்களுடைய அடையாளம் - Your identity*
3. *உங்களுடைய படைப்பாற்றல் - Your creativity*

*நாம் மீண்டும் ஏதேன் தோட்டத்திற்கு சென்று அங்கே எதிரியின் யுக்தியை அறிந்து கொள்வோம். சாத்தான் ஆதியிலிருந்தே ஒரே யுக்தியை தான் பயன்படுத்துகின்றான்.*

________________________________________________________________

________________________________________________________________

தேவன் ஆதாமை படைத்தார். ஏவாளை அவனிலிருந்து உருவாக்கி அவர்கள் இருவரையும் கணவன் மனைவியாக ஆக்கினார்.

தேவன் அவர்களுக்கு எல்லாவற்றின் மேலும் அதிகாரம் கொடுத்தார். மேலும் நன்மை தீமை பற்றி அறியத்தக்க விருட்சத்தின் கனியைத் தவிர மற்றவை அனைத்தையும் உண்ணும் உரிமையை அளித்தார்.

***ஆதியாகமம் 2:15-17,*** *15. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். 16. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். 17. ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்."*

தேவனையும் மனிதனையும் பிரிப்பதே சாத்தானின் **முதல் தாக்குதலாகும்**. தேவனுக்கு கீழ்ப்படியாமல் அவர் மீது மனிதன் கொண்டிருந்த ஆதி அன்பை தொலைக்கச் செய்தான்.

அதனால், சாத்தானின் தாக்குதலை கவனமாக பாருங்கள்.

***ஆதியாகமம் 3:1,*** *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது."*

தேவன் கூறினாரா?

**இரண்டாவது**, உங்களுடைய அடையாளத்தின் மீது தாக்குதல் நடத்துவான்.

***ஆதியாகமம் 3:4-5,*** *4. அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; 5. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது."*

அவர்கள் தேவனின் சாயலில் உருவாக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் தேவனின் மகிமையான உலகில் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் நீங்கள் அதை உண்டால் மட்டுமே அவரை போல ஆக முடியும் என அவன் கூறினான்.

**மூன்றாவதாக**, உங்களுடைய அன்பு மற்றும் அடையாளத்தை இழந்துவிட்ட பின்னர், நீங்கள் பயந்து தேவன் கொடுத்த அனைத்து படைப்பாற்றலையும்

______________________________________________________________

______________________________________________________________

இழந்து விடுவீர்கள். தேவன் உங்களுக்குள் வைத்திருக்கும் படைப்பாற்றலையும் கற்பனை திறனையும் பயம் அழித்துவிடுகிறது.

***ஆதியாகமம் 3:9-10,*** *9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். 10. அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்."*

அவர்கள் அத்தி மரத்தின் இலைகளை எடுத்து அவற்றைத் தைத்து ஆடையாக அணிந்துகொண்டனர். *(ஆதியாகமம் 3:7).*

தேவன் நம்மை ஒவ்வொரு நாள் வாழ்விலும் வழி நடத்த விரும்புகிறார். ஆனால் அவருடைய பிரசன்னத்தை உணரும் திறனை நாம் இழக்கிறோம் என்பதை நாம் உணராததால், நம்மால் ஆதி ஏதேன் தோட்ட அனுபவத்திற்குள் செல்ல முடிவதில்லை.

நம்முடைய நாவு தேவ சமாதானத்தை பெறுவதிலும் இழப்பதிலும் பெரிய பங்கு வகிக்கிறது.

***நீதிமொழிகள் 18:21,*** *மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்..*

உங்களால் ஒரு பிரச்சனையை சரிசெய்யவும் முடியும், அல்லது அதனை பெரிதாக்கவும் முடியும். அதற்கான ஆற்றல் உங்களுக்குள் இருக்கிறது.

உங்களுடைய பிரச்சனைகளை சொல்லுவதன் மூலம் உங்கள் பிரச்சனைகளை வலிமையாக்குகிறீர்கள். மேலும் தேவனை காட்டிலும் பிரச்சனைகள் மீது அதிக விசுவாசத்தை வைக்கிறீர்கள்.

விசுவாசம் கேள்வியால் (கேட்பதால்) வருகிறது!

***ரோமர் 10:17,*** *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்..*

## கவலையின் முக்கியத்துவத்தை குறை *(Relegate the Anxiety)*

ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையை *(spiritual stability)* குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் நம் எல்லோருக்கும் கற்றுத் தருகிறார்.

***பிலிப்பியர் 4:6-7,*** *6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். 7. அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான*

________________________________________________________________

________________________________________________________________

*தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.*

*கவலை உங்கள் அன்பை பாதிக்கும்!*

*நாம் ஒரு தகவலை பெறும்போது, நல்லதோ கெட்டதோ, நம்முடைய பதட்டத்தை (படபடப்பை) தூண்டுகிறது.*

*சற்று சிந்தித்துப் பாருங்கள், நீங்கள் பதட்டத்தோடு இருந்து ஒன்றுமில்லாமல் முடிந்த காரியங்கள் எத்தனை!*

*பிரச்சினைகள், சோதனைகள், கஷ்டங்கள் ஆகியவற்றை நீங்கள் கையாளும் விதத்தை வைத்தே, தேவனை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று அறிந்துகொள்ள முடியும். தேவனை நீங்கள் அறியும் போது, அவருடைய அனைத்து வல்லமைகளையும், வளங்களையும், நோக்கங்களையும் மற்றும் உங்களுக்கான அவரது திட்டங்களையும் தெரிந்துகொள்ளும் போதுதான் அவர் எப்போதும் உங்களுடனே இருப்பதை நீங்கள் உணருவீர்கள்.*

*பதட்டத்திற்கான காரணம் என்ன?*

*எதை குறித்து நீங்கள் பதட்டமாக உள்ளீர்கள்?*

*தேவன் சர்வ வல்லமையுள்ள சக்கராதிபதி (I தீமோ 6:15), தேவன் அன்புள்ளவர், தேவன் தம்முடைய மகிமைக்காகவும் உங்களுடைய நலனிற்காகவும் உங்கள் வாழ்வில் நடக்கும் எல்லாவற்றையும் அவரது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் என்று உணரும்போது, தேவனின் கட்டுப்பாட்டை மீறி ஒன்றும் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.*

*தேவன் எல்லாவற்றையும் நித்திய நோக்கத்திற்காக செய்கிறார். நீங்கள் இந்த விசுவாசத்தில் நம்பிக்கை வைத்தால், மிகவும் கடுமையான காலங்களில் கூட ஸ்திரப்பட்டிருப்பீர்கள்.*

*“இந்த பிரச்சனையிலும் தேவனுடைய திட்டம் உள்ளது, இது கர்த்தருடைய கிரியை என்றும், நான் தேவனுடைய கிரியையை காண்பேன்”, என்கிற விசுவாசம் தான் நம்மை மிகக்கடினமான பிரச்சனைகளிலும் நம்மை ஸ்திரப்படுத்தி நடத்தும்.*

*சங்கீதம் 31-ல் தாவீது இவ்வாறு ஜெபித்தார்:*

***சங்கீதம் 31:1-5**, 1. கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும்; உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும். 2. உமது செவியை எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்; நீர்*

________________________________________________________________

________________________________________________________________

*எனக்குப் பலத்த துருகமும், எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும். 3. என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும். 4. அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கிவிடும்; தேவரீரே எனக்கு அரண். 5. உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.*

***Psalms 31:1-5,*** *O Lord, I have come to you for protection; don't let me be disgraced. Save me, for you do what is right. 2 Turn your ear to listen to me; rescue me quickly. Be my rock of protection, a fortress where I will be safe. 3 You are my rock and my fortress. For the honour of your name, lead me out of this danger 4 Pull me from the trap my enemies set for me for I find protection in you alone. 5 I entrust my spirit into your hand. Rescue me, Lord, for you are a faithful God. (NLT)*

ஜெபம் செய்யாதிருத்தலே பல பிரச்சனைகளுக்கு காரணமாகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை போல, ஒன்று நாம் எதையும் கேட்பதில்லை இரண்டாவது நம்முடைய எண்ணத்தில் பிரச்சனைகளுக்கு பதிலாக நல்ல காரியங்களை வைப்பதுமில்லை.

சில சமயங்களில் நம்முடைய வாழ்க்கையில் வரும் குறைபாடுகளுக்கு ஜெப பற்றாக்குறையே காரணம்.

***யாக்கோபு 4:2b,*** *நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.*

நீங்கள் ஏதும் கேட்காததால் உங்களிடம் ஏதும் இல்லை.

ஜெபத்தின் மற்றொரு பக்கம் என்னவென்றால், உங்களை எல்லா வகையான சோதனைகளில் இருந்தும் பாதுகாக்கிறது. சோதனைகளுக்குள் சிக்காமல் இருப்பதற்காக ஜெபியுங்கள்.

***மத்தேயு 26:41,*** *நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்."*


---

*நீங்கள் சோதனைகளுக்கு உள்ளாகும் சூழ்நிலைகளை ஜெபப் பற்றாக்குறை உண்டாக்குகிறது. ஆனால், உங்களால் அவற்றில் இருந்து மீள முடியும்.*

---

__________________________________________________________________

__________________________________________________________________




*ஒருவர் பிரச்சனைகளுக்கும் பதற்றத்திற்கும் பதிலாக அந்த இடத்தில் நல்ல காரியங்களை வைக்க வேண்டும்!*

*மனிதனின் இருதயத்தை ஒரு வீட்டுடன் இயேசு ஒப்பிட்டு கூறிய உவமை உங்கள் நினைவில் வருகிறதா. எல்லா வகையான பொருட்களினாலும் வீடு நிறைந்திருந்தது (cluttered). அதனை சுத்தம் செய்த பின் நல்ல பொருட்களால் நிரப்ப வேண்டும்.*

***மத்தேயு** 12:43-45, 43. அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: 44. நான் விட்டு வந்த வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, 45. திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே*

________________________________________________________________

________________________________________________________________

*கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்."*

*நீங்கள் சமாதானத்தை இழந்துவிட்டால், எந்த இடத்தில் அதை இழந்தீர்களோ அங்கே மீண்டும் செல்ல வேண்டும். அந்த நாளில் என்ன நடந்தது என்பதை தொடர்ந்து சோதித்துப் பார்க்க வேண்டும். எந்த காரணத்தால் சமாதானத்தை இழக்க நேரிட்டது என்பதை சோதித்து அறிந்து, பிறகு மீண்டும் அந்த இடத்திற்கு சென்று மனந்திரும்பி, சமாதானத்தை கர்த்தரிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

## சத்தியத்தை கொண்டு இடமாற்றம் செய்யுங்கள்

### *- Replace it with Truth*

*உங்களுடைய வாழ்க்கையில் இருந்து கவலை தரும் எண்ணங்களை நீங்கள் எடுத்து விட்டு நன்மையான காரியங்களால் நிரப்புங்கள்!*

***பிலிப்பியர் 4:8,*** *கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். சத்தியமே உங்களை விடுதலையாக்கும்!*

***சங்கீதம் 1:1-4,*** *1. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், 2. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். 3. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். 4. துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள்.*

________________________________________________________________


________________________________________________________________

## *Creativity*

### *சமாதானத்தோடு இருக்கும் போது படைப்பாற்றல் தோன்றும்.*

*சகரியா இங்கு படைப்பாற்றலை கொண்டு நான்கு கொம்புகள் வீழ்த்தப்படுவதை பற்றி கூறுகிறார். அந்த நான்கு கொம்புகளையும் வீழ்த்துவதற்கு தேவனுடைய பதில், நான்கு தொழிலாளிகளே (artisan)* ***சகரியா 1:18-21.***

*சகரியா தன் கண்களை ஏறெடுத்து பார்த்தபோது, தேசங்களையும் தேசங்களின் வல்லமையையும் குறிக்கும் நான்கு கொம்புகளை காண்கிறார். அந்த கொம்புகளை பார்க்கும்போது, நான்கு இரக்கமற்ற சக்திவாய்ந்த, தேசங்களின் வல்லமையை கண்டார். 19ஆம் வசனத்தில் அவர் கேட்டதாவது, "இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடி**த்த** கொம்புகள்." இதன் சரியான மொழிபெயர்ப்பு "யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடி**க்கும்**" என்பதே.*




*வ20, கர்த்தர் எனக்கு அந்த கொம்புகளை சிதறடிப்பவர்களாகிய நான்கு தொழிலாளிகள் (artisans), நான்கு தட்டான்கள் (smiths), நான்கு உலோகம்*

______________________________________________________________

______________________________________________________________

அல்லது மர வேலை செய்பவர்களை காண்பித்தார். சொல்லப்பட்டபடி, துல்லியமாக எருசலேமின் மீது வந்த அந்த கொம்புகளை அவர்கள் சிதறடிப்பார்கள்.

எதிரி எருசலேமை சிதறடிப்பதற்கு எழும்பும் போது, தேவன் இந்த தொழிலாளிகளின் (artisans) படைப்பாற்றலை பயன்படுத்தி அவர்களை அழிப்பார் என்பதையே இப்பகுதி நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

நீங்கள் தேவனின் சமாதானத்தில் வாழும் போது, உங்களிடம் படைப்பாற்றல் கிரியை செய்யும். அதை கொண்டு உங்களுக்கு உள்ளும் புறமும் உள்ள எதிரியின் திட்டத்தை உங்களால் அழிக்க முடியும்.

நாம் இதனை இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பார்க்கலாம்,

- இயேசு தம்முடைய பொது வாழ்க்கையை 3 ஆண்டுகளில் நிறைவு செய்தார்.
- சிலுவை மரணத்திற்காக கைது செய்ய இருக்கும் முந்தய இரவின்போது, யோவான் 13ல்அவர் பேசுகிறார்.
- யூதாஸ் காட்டிக்கொடுப்பவன் என்பதை அவர் அறிந்திருந்தார். அப்படியிருந்தும் அவனுடைய பாதங்களை கழுவ ஆயத்தமாக இருக்கிறார்.
- அவர் இந்த முழு மனிதகுலத்தின் பாவத்தின் தண்டனையையும் சுமக்க இருக்கிறார்.
- இயேசு மிகவும் கொடூரமான மரணத்தை எதிர்கொள்ளப்போகிறார்.
- மிகவும் மோசமாக நடத்தப்பட இருக்கிறார்.
- கேலி, பரியாசம், வாரின் அடிகள் போன்ற பலவற்றை சந்திக்க இருக்கிறார்.,

இந்த சூழ்நிலையியை இயேசு எவ்வாறு கையாளுகிறார் என்று இப்போது பார்க்கலாம்.

***யோவான் 13:1-5***, 1. பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். 2. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்; 3. தம்முடைய கையில் பிதா

________________________________________________________________

________________________________________________________________

*எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; 4. போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைச் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, 5. பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.*

*சிலுவையில் அறையப்படும் நேரம் இதுவே என்பதை இயேசு அறிந்திருந்தார்.*

***வ3a***, *இவை அனைத்தையும் பிதா தமக்கு அளித்துள்ளார் என்பதை இயேசு அறிந்திருந்தார்.*

*இயேசு மனிதனாக பிறப்பதற்கு முன்னரே அனைத்தையும் உடையவர் என்பதை நாம் அறிவோம். அது அவருக்குரியது.*

*எல்லாம் அவருக்கே திரும்ப வரும் என்றும் இயேசுவுக்கு தெரியும். மனுஷகுமாரனாக அவர் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளப்போகிறார். ஆனால் அந்த நேரத்தில் அவர் சிலுவையில் மரிக்க இருக்கிறார்.*

*எப்படி?*

***வ 3b***, *அவர் தேவனிடம் இருந்து வந்தார் மேலும் தேவனிடமே செல்கிறார்.*

*நித்திய நோக்கம் மற்றும் நித்திய இலக்கு!*

*Eternal purpose and eternal destiny*!

*அனைத்தும் நித்தியத்திற்கு அவருடனே இருந்தன. மேலும் அவர் மனுஷ குமாரனாக இவை அனைத்தையும் மீண்டும் சுதந்தரிக்கப் போகிறார். அதனால் அவரால் சமாதானத்துடன் சேவை செய்ய முடிந்தது.*

*ஒரு தரம்தாழ்ந்த அடிமையின் வடிவமாக தம்மைத் தாழ்த்திக் கொண்டு, சீஷர்களின் கால்களைக் கழுவவும் அவரால் முடிந்தது.*

*பண்டைய காலங்களில் சாலைகள் தூசியும், சேறும் நிறைந்திருந்தன. ஆகவே, மக்களின் கால்களில் அழுக்கு நிறைய குவிந்து காணப்பட்டது. அந்த சேற்றை வீட்டிற்குள் எடுத்துச் செல்லக்கூடாது என்பதற்காக, ஒவ்வொரு வீட்டிற்கு முன்னும் ஒரு தண்ணீர் பானை வைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்குள் செல்லும் முன் அந்த நீரினால் கால்களை கழுவுவார்கள். இது மிகவும் சாதாரண வேலை என்பதால்,*

________________________________________________________________

________________________________________________________________

மிகவும் அடிமட்டத்தில் உள்ள அடிமையைத் தான் இந்த கால்களை கழுவும் பணியில் ஈடுபடுத்துவர். எந்தவித திறமையும் அவசியப்படாத, சுவாரஸ்யமற்ற கடமை, ஆனால் மிகவும் அவசியமான ஒன்று.

அதனால், தம்மை எல்லாவற்றிற்கும் கீழாக தாழ்த்திக்கொள்ளும் போது, தேவன் தம்மை உயர்த்துவார் என்பதை இயேசு அறிந்திருந்தார். அதனால் தான், அவரால் கீழானவர்களுக்கும் கீழாக தன்னை தாழ்மைப் படுத்திக்கொள்ள முடிந்தது.

## முடிவுரை

பலருடைய அடையாளம் அவர்களுடைய பெயருக்கு முன் உள்ள தலைப்பில் உள்ளது. அதனால்தான் அவர்களால் தங்களை தாழ்த்திக் கொள்ள முடிவதில்லை. ஆனால், இயேசுவின் கவனமும் அடையாளமும் நித்திய மதிப்பின் மீது இருந்ததால், அவரால் தம்மை தாழ்த்திக்கொள்ள முடிந்தது.

இந்த கூடுகையில் நாம் பார்ப்பது போல, தேவனே எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர்.

உங்களுடைய விசுவாசம் மற்றும் திறமைகளுக்கு தக்க அளவின் படி தேவன் உங்களுக்கு கொடுத்துள்ளார்.

உங்களுக்கு உக்கிராணகாரர் என்ற பாக்கியம் கிடைத்துவிட்டது. இந்த பொறுப்பைப் பயன்படுத்தி, தேவன் கொடுத்ததை உங்களால் அதிகரிக்கவும் முடியும் வீணடிக்கவும் முடியும்.

நீங்கள் ஒரு நாள் தேவனை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறீர்கள்.

தேவன் உங்கள் கைகளில் ஒப்படைத்த அனைத்தையும் கணக்கிடுவார்.

உங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள முடியுமா!

உங்கள் கவனத்தை நித்தியத்தின் மீது வையுங்கள்!!

தேவன் முன்பு உங்களை தாழ்திக்கொள்ளுங்கள். தேவனின் சமாதானம் எப்பொழுதும் உங்களை வழிநடத்தட்டும்!!!

__________________________________________________________________

__________________________________________________________________

# 8. உங்கள் குடும்பத்தின் உக்கிராணத்துவம் - Physical family

***எபேசியர் 3:14,*** *இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய,*

நாம் கையாளும்படி தேவன் நமக்கு இரண்டு குடும்பங்களை கொடுத்திருக்கிறார் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

1. உலகப்பூர்வமான குடும்பம் - *Physical Family*
2. ஆவிக்குரிய குடும்பம் - *Spiritual Family*

ஆகவே, இந்த பாடத்தில் நாம் கற்றுக்கொள்பவை உங்கள் உலகப்பூர்வமான மற்றும் ஆவிக்குரிய குடும்பம் ஆகிய இரண்டிற்குமே பொருந்தும்.

தேவன் நமக்கு அதிக பொறுப்பை கொடுத்துள்ளார் என்பதை பல கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வதில்லை. சிறந்த உக்கிராணக்காரர்களாய் இப்பூமியில் நாம் இருக்கும் போது, தேவன் நம்மிடத்தில் கொடுத்த இவ்விரண்டு குடும்பங்களையும் சரியான கண்ணோட்டத்தில் *(right perspective)* நாம் நிர்வகிக்க வேண்டும்.

## தேவன் உங்களை ஒரு நோக்கத்துடன் தமது குடும்பத்தின் ஒரு அங்கமாக தத்தெடுத்துள்ளார்.



***யோவான் 15:16,*** *நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.*

கிறிஸ்துவை பின்பற்றுகிற நாம், கனி கொடுக்கிற வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான திறமைகளை அவர் நமக்குள் வைத்திருக்கிறார். இதைக் கொண்டுதான் இவ்வுலகில் நம்மால் ஒரு தாக்கத்தையும் வித்தியாசத்தையும் உண்டாக்க முடியும். பிறருக்கு உதவி செய்து அவர்களை ஆசிர்வதித்து

______________________________________________________________

______________________________________________________________

தேவனுக்கு மகிமை சேர்ப்பது, இம்மையில் மட்டுமல்ல நித்தியத்திலும் ஒரு வித்தியாசத்தை உண்டாக்கும்.

## மாறும் பொறுப்புகள் - Role always revolves

நம்முடைய வாழ்க்கை பயணம் முழுவதிலும், நம்முடைய குடும்பம் பல வடிவத்தைப் பெறும்.

ஒரு குழந்தைக்கு குடும்பம் என்றால், பெற்றோர்கள், உடன்பிறப்புகள், தாத்தா, பாட்டி, தாய் தந்தையின் உடன் பிறந்தவர்கள், அவர்களின் பிள்ளைகள், ஞானப்பெற்றோர்கள் (godparents) மற்றும் அந்த குழந்தையின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் நபர்கள்.

அதே குழந்தை வளர்ந்து திருமணமான பின்னர், கணவன்/மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்களால் விரிவடைகிறது.

வயது வந்து (adult) பெற்றோர் ஆகும் போது, அத்தை, மாமா, தாய் அல்லது தந்தையின் உடன் பிறந்தவர்களின் பிள்ளைகள் (cousins) போன்ற உறவுகளின் பொறுப்பு அதிகரிக்கிறது.

குடும்பத்தில் ஒருவருடைய பொறுப்பு அதிகரிக்கும்போது, தன்னுடைய பொறுப்புக்கு அவர் உக்கிராணக்காரராகிறார்.

ஆகவே, நம்முடைய குடும்ப உறுப்பினர்கள் விசுவாசத்தில் வளர அவர்களை ஊக்குவிக்கவும் தாங்கவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

குடும்பத்தில் தேவன் ஒவ்வொருவருக்கும் அளித்த ஆவிக்குரிய வாரங்களையும் தாலந்துகளையும் தேவனுடைய மகிமைக்காக மேலும் வளர்த்துக்கொள்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்தவும் தாங்கவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

## கணவன்/மனைவி

அன்பு மற்றும் மரியாதையின் மையப்புள்ளியில் கணவன்-மனைவி உறவு பலப்படுகிறது. This requires balance tempered by love and respect.

கணவன்/மனைவியை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் நேசிப்பதும், அதேபோல் அவர்களும் நம்மை நேசிப்பதுமே ஒரு வெற்றிகரமான திருமணத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

__________________________________________________________________

__________________________________________________________________




***நீதிமொழிகள் 18:22,*** *மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான்.*

***ஆதியாகமம் 2:18,*** *பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.*

*திருமணமும் குடும்பமும் தேவனுடைய புனிதமான திட்டம்!*

***நீதிமொழிகள் 19:14,*** *வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு.*

*திருமணம் கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது!*

*உங்கள் திருமணம், காதலித்தோ அல்லது குடும்பத்தில் உள்ளோரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்ததோ, எப்படியாக இருந்தாலும் அது தேவனாலே சம்பவித்தது.*

***ஆதியாகமம் 1:28,*** *பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

______________________________________________________________

______________________________________________________________

***ஆதியாகமம் 25:21,*** *மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்.*

***யோசுவா 24:3-4,*** *3. நான் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டு வந்து, அவனைக் கானான்தேசமெங்கும் சஞ்சரிக்கச்செய்து, அவன் சந்ததியைத் திரட்சியாக்கி, அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தேன். 4. ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படி கொடுத்தேன்; யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்குப் போனார்கள்.*

***சங்கீதம் 113:9,*** *மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா.!*

***சங்கீதம் 127:4,*** *இதோ, பிள்ளைகள்* ***கர்த்தரால்*** *வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.*

குழந்தைகள் தேவனிடம் இருந்து வரும் வெகுமதியாகும். *Children are gift from the Lord*

உங்களுடைய கணவன்/மனைவி மற்றும் உங்களுடைய பிள்ளைகள் தேவனால் அருளப்பட்டவர்கள் என்பதை வேத வசனங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். தேவன் உங்களை நம்பி உங்களுக்கு ஒரு குடும்பத்தை கொடுத்துள்ளார்!

**பில் ஹய்பெல்ஸ்** *(Bill Hybels)*, என்பவர் அமெரிக்காவில் *(United States)* உள்ள பெரிய சபைகளில் ஒன்றின் போதகராவார். அவர், "லின்னுக்கும் எனக்கும் இடையிலான இந்த திருமணத்தில் எந்த ஒரு உண்மையும் நான் மறைத்து வைத்ததில்லை. மற்ற திருமணங்களை காட்டிலும் எங்களுடைய திருமணத்தில் மிகவும் அதிக வேலை தேவைப்படுகிறது. எங்களுக்கு திருமணமாகி கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னமும் எங்களுடைய ஒவ்வொரு சிறிய முன்னேற்ற படிக்கும் நாங்கள் போராடி எங்கள் திருமண மகிழ்ச்சியின் பாதையை நோக்கி செல்கிறோம். தனிப்பட்ட காயம், வேறுபாடுகள் மற்றும் காணக்கூடிய வாழ்க்கைமுறையின் மிகுந்த அழுத்தங்கள் நமது சவால்களை கூட்டுகின்றன. ஆனால் நாங்கள் ஜெபிக்கிறோம், பேசுகிறோம், ஆலோசனை கேட்கிறோம், எங்களை நாங்களே ஒழுங்குபடுத்துகிறோம், வளருகிறோம், மாறுகிறோம், வாக்களிக்கிறோம், மன்னிப்புக் கோருகிறோம், ஒப்புக்கொள்கிறோம், எங்களது எதிர்பார்ப்புகளை சரிசெய்கிறோம், ஒருவருக்கொருவர் கொடுத்த வாக்குறுதியை நினைவுபடுத்துகிறோம், எதிர்காலத்தை நோக்குகிறோம்,

______________________________________________________________

______________________________________________________________

*முயற்சியை விட்டுக்கொடுக்க மறுக்கிறோம். நாங்கள் இந்த திருமணம் தான் எங்கள் வாழ்க்கை — சந்தோஷத்திற்கு அருகில் கொண்டு செல்லும் ஒவ்வொரு படிக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். [**பில் ஹய்பெல்ஸ் – "**மேகிங் லைப் வொர்க்" என்கிற புத்தகத்தில்]*

***Bill Hybels**, pastor of one of the largest churches in the United States, wrote, "Lynne and I have never hidden the fact our marriage requires a tremendous amount of work—more than many marriages do. We have been married for nearly 2 1/2 decades, and still it seems we have to struggle for every tiny step of progress we make on the path toward marital joy. Personal woundedness, personality differences, and pressures of a highly visible lifestyle compound our challenges. But we pray, we talk, we seek counsel, we discipline ourselves, we grow, we change, we promise, we apologize, we confess, we adjust our expectations, we remind ourselves of our commitment, we look to the future, and we refuse to give up. We are in this marriage for life—we have chosen to stay with the spouse 'of our youth'—and we thank God for each step that brings us closer to rejoicing.* **]***Bill Hybels, Making Life Work (Downers Grove: InterVarsity Press, 1998)***[**

*திருமணம் மிகுந்த சவால்கள் நிறைந்ததாக காணப்படுகிறது. மேலும் ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் தேவன் உண்டாக்கின இந்த திருமண உறவின் அஸ்திபாரம் இந்நாட்களில் அதிக தாக்குதல்களை சந்திக்கிறது.*

*பாலினம் (sex) ஏதும் கருதாது இரண்டு வயது வந்தோருக்கு (adults) இடையே நடத்தப்படுவதை திருமணம் என்று பல நாடுகளில் மறுவிரிவாக்கம் செய்துள்ளனர். இது முற்றிலும் வேத வார்த்தைக்கு எதிரானதாகும்.*

*குடும்பத்தின் மீதுள்ள இந்த தாக்குதல்களை கிறிஸ்தவர்களாகிய நாம், அறிந்து கொள்ள வேண்டும்.*

*1 **தீமோத்தேயு** 4:2, விவாகம்பண்ணாதிருக்கவும், 3. விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்.*

*திருமணத்திற்கு முன் இருவர் கூடி வாழ்வது (Living together) மிகவும் பிரபலமாகிவிட்டது! மக்கள் ஒரு பொருளை வாங்குவதற்கு முன்னர் அதனை பயன்படுத்தி பார்க்க விரும்புகின்றனர். ஆனால் யாரும் அந்த*

________________________________________________________________

________________________________________________________________

*சோதனை வாகனத்தை (trial car) அல்லது அந்த மாதிரி பொருளை (demo piece) அப்படியே வாங்குவதில்லை!*

*அதனால், திருமணத்தை குறித்த அதிக அளவு உக்கிராணத்துவத்தை நாம் இளைய சமுதாயத்தினருக்கு கற்றுக் கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.*

## குடும்பத்தின் நல்ல உக்கிராணகாரன்:

*நம்முடைய வீட்டை பார்த்தல், வீட்டில் உள்ள அநேக பொருட்களுக்கு குறிப்பிட்ட நோக்கம் ஒன்று இருக்கும்.*

- *நாற்காலி - உட்காருவதற்கு.*
- *உணவருந்தும் மேசை - உண்ணுவதற்கு.*
- *ஜன்னல் - வெளிச்சத்திற்காகவும் சுவாசிக்க புதிய காற்றுக்காகவும்.*

*நம்முடைய வீட்டில் உள்ள "பொருட்கள்" ஒரு காரணத்திற்காக இருப்பது போல, தேவனும் நம் குடும்பத்தில் உள்ளவர்களை ஒரு நோக்கத்தை வைத்துள்ளார்.*

*கால் உடைந்த நாற்காலி பயனற்றதாகும். அது அதிக இடத்தை பிடித்தாலும், அது பயனற்றது, அதில் யாரும் உட்கார முடியாது.*



________________________________________________________________________

________________________________________________________________________

வீட்டில் இருப்போரும் விருந்தினர்களும் அந்த உடைந்த நாற்காலியில் உட்காராமல் பாதுகாத்துக்கொண்டே இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் தரையில் விழுந்து தங்களை காயப்படுத்திக் கொள்வார்கள்!

***எபேசியர் 5:21,*** *தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.*

நான் குடும்பத்தை பற்றி 18 மேற்பட்ட பிரசங்கங்களை செய்திருந்தாலும் இந்த பாடத்தோடு (subject) தொடர்புடைய சில முக்கியமான விஷயங்களை நான் பட்டியலிடுகிறேன்.

## கணவனின் கடமை:

### 1. தலைமை/வழிகாட்டுதல் - Lead

***எபேசியர் 5:23,*** *கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.*

இயேசு கிறிஸ்து சபையை வழி நடத்துவது போல கணவனும் தன்னுடைய குடும்பத்தை வழி நடத்த வேண்டும். இயேசுவின் தலைமைத்துவத்தில் சுயத்துக்கு இடமில்லை (self-centered). மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக அவர் தம்மையே பலியாக்கினார். ஏன்? அன்பின் காரணத்தால்!

கலாச்சாரம், மரபுகள், சமுதாயம் மற்றும் நிச்சயமாக பெற்றோர் எதிர்பார்ப்புகளை ஒதுக்கி வைத்து எல்லாவற்றிற்கும் மேலாக வேதத்தின் கலாச்சாரத்தை நிலைநாட்ட வேண்டும்.

### 2. நேசித்தல்

***எபேசியர் 5:25,*** *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,*

***எபேசியர் 5:28,*** *அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்.*

***எபேசியர் 5:33,*** *எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.*

________________________________________________________________

________________________________________________________________

இந்த 8 வசனங்களுக்குள்ளேயே தேவன் மூன்று முறை கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்!

ஒரு கிறிஸ்தவன் தனது மனைவி மற்றும் குடும்பத்தின் மீதுள்ள அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். இயேசு தன் சபையை எப்போதுமே நேசித்துக்கொண்டு இருக்கிறார். அதேபோல கணவனும் தன் குடும்பத்தை எப்போதும் நேசிக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர் செய்வது நன்மையோ தீமையோ, அதை பொருட்படுத்தாது தொடர்ந்து நேசிக்க வேண்டும்.

### 3. நாணயமானவன் (Loyal)

***எபேசியர் 5:31,*** *இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்..*

வாழ்க்கையின் அனைத்து அனுபவங்களிலும் இயேசு கிறிஸ்து எப்போதும் சபையின் அருகிலே இருக்கிறார். கணவனும் அவன் மனைவிக்கு அதேபோல செய்ய வேண்டும். விசுவாசம் என்பது வாழ்நாள் முழுவதும் உறுதியோடும் நாணயத்தோடும் இருப்பதாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் (polygamy), விபச்சாரம் மற்றும் திருமணத்திற்கு முன் ஈடுபடும் பாலியல் உறவுகள் (pre-marital sex) போன்ற செயல்கள் தேவனுடைய வார்த்தையை புறக்கணிப்பதாகும். சமூகத்தின் தரம் மாறிக்கொண்டே இருக்ககூடும். அதனால் நம் வாழ்க்கை தேவன் நியமித்த தரத்தில்தான் அளவிடப்பட வேண்டும், உலகத்தின் தரத்தில் அல்ல. கணவன் தேவ சித்தத்திற்கேற்ப வாழ வேண்டும்.

*Word of God prohibits polygamy, adultery and pre-marital sex. Standards of society may vary but it must be measured against the standards what our Lord had set in His word. Men ought to choose to live the Godly way.*

### 4. உதாரணமாக வாழ்தல் - Living as an Example

***எபேசியர் 5:1-2,*** *1. ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, 2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்..*

அதனால், அனைவருக்கும் குறிப்பாக குடும்பத்திற்கு ஒரு உதாரணமாக வாழ வேண்டும்.

________________________________________________________________

________________________________________________________________

குழந்தைகள் உள்ள 994 தம்பதிகளிடம் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வின் இறுதியில் தங்கள் தந்தையிடம் அதிக நேரம் செலவிட்ட குழந்தைகள் குறைவான நடத்தை பிரச்சனைகளைக் கொண்டிருந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

14,700 இளம் பெண்கள் கொண்ட மற்றொரு ஆய்வில் தந்தையுடன் நல்ல உறவுடன் இருக்கும் பெண்கள் பாலியல் உறவுகளிலும் மது மற்றும் போதை பொருட்களிலும் அதிகப்படியாக விழுவதில்லை என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

### 5. கற்றுக்கொண்டு வாழ்வது - Learn and Live

*1 **பேதுரு** 3:7, அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்..*

ஒரு கிறிஸ்தவ கணவன் எப்போதும் தன் மனைவியை பற்றி கற்றுக் கொண்டே இருப்பான். நீங்கள் ஒன்றாக வாழ்வதில் உள்ள விஷயங்களை வைத்து அவர்களை மேலும் மேலும் புரிந்துகொள்ளும்போது, தேவன் உங்களுக்கு கொடுத்த பரிசான உங்கள் மனைவிக்காக மிகுந்த நன்றி செலுத்துவீர்கள்.

ஆணும் பெண்ணும் உடல் ரீதியாக மட்டுமல்ல உணர்வுபூர்வமாகவும் மிகவும் வித்தியாசமானவர்கள். இது யாரையும் ஒருவரை விட ஒருவரை உயர்வாக்காது. ஆனால் இது ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு சிகிச்சை முறை தேவைப்படும் என்பதை குறிக்கிறது. எனக்கு எது மகிழ்ச்சி அளிக்கிறதோ அது என் மனைவிக்கும் மகிழ்ச்சி தர தேவையில்லை. அதனால் நான் அவளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் அவளை நேசிக்க நான் கற்றுக்கொள்ள வேண்டும்.

உங்கள் மனைவியை புகழ்ந்து உற்சாகப்படுத்தி நீங்கள் பேசும் வார்த்தைகள், அவர்களுக்கு ஒரு பூச்செண்டு பரிசளிப்பதற்கு சமம். ஒரு "நன்றி" அல்லது "நன்றாக செய்தாய்" என்று நீங்கள் ஒரு நாள் சொன்னால், அந்த நாளே அவர்களுக்கு அந்த வாரத்தின் சிறந்த நாளாக மாறலாம்! நீங்கள் கவனித்ததையும் தான் செய்ததை பாராட்டியதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

__________________________________________________________________

__________________________________________________________________

## மனைவியின் கடமை

### 1. கீழ்ப்படிதல்

பல்வேறு கீழ்ப்படிதலின் பிரச்சனைகளுக்கு பேதுரு பதிலளிக்கிறார்.

#### a) அடிமை

***1 பேதுரு 2:18-20,*** *18. வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். 19. ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். 20. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.*

#### b) கிறிஸ்துவை உதாரணமாக கொள்ளுதல்

***1 பேதுரு 2:21 & 23,*** *21அதைச் செய்வதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் பின்பற்றும்படியாக கிறிஸ்து ஓர் எடுத்துக்காட்டை உங்களுக்குத் தந்தார். அவர் செய்ததைப் போலவே நீங்களும் செய்யவேண்டும். கிறிஸ்து உங்களுக்காகத் துன்புற்றதால் நீங்கள் துன்பப்படும்போது பொறுமையாக இருக்கவேண்டும்.*

*23. அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.;*

#### c) அதேபோல், மனைவியும் கீழ்ப்படிய வேண்டும்

***1 பேதுரு 3:1 &5,*** *1. அந்தப்படி மனைவிகளே, உங்கள்சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து',*

*5. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்..*

__________________________________________________________________

__________________________________________________________________

மனைவி கீழ்ப்படிய வேண்டும் என்று சொல்வது ஆணாதிக்க அணுகுமுறை *(male chauvinist attitude)* அல்ல. அதுவே தேவன் குடும்பத்தில் நியமித்த ஒழுக்கமாகும். *Being submissive is not male chauvinist attitude, That's the order in which God instituted the family.*

2. **உதவியாளர்**

**ஆதியாகமம் *2:18,*** பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்..

## ஆணுக்கு உதவி தேவை

கணவனுக்கு உதவியாக இருப்பது தான் ஒரு பெண் சிருஷ்டிக்கப்பட்டதன் நோக்கமாகும்.

ஒருவரை உதவி செய்பவராகவும், ஒருவரை உதவி பெறுபவராகவும் வேதம் காண்பிக்கிறது.

மனைவி கணவனுக்கு உதவக்கூடிய வழிகள்.

a) **உங்கள் கணவனை நேசியுங்கள் - *Love your husband***

   **தீத்து *2:4,*** தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்,.

b) **ஒரு துணையாக இருங்கள் - *Be a companion***

   **மல்கியா *2:14,*** ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன்தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம்பண்ணினாயே..

   **நீதிமொழிகள் *2:16-17 & 31:12***

3. **பாலியல் ஆசைகளை திருப்தி செய்தல்**

   **எபிரெயர் *13:4,***

   ***1* கொரிந்தியர் *7:2,*** ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்.

______________________________________________________________

______________________________________________________________

கணவன் விபசாரத்தில் ஈடுபடுவதை தவிர்க்க இது உதவும்.

*__1 கொரிந்தியர் 7:4__ மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.*

சொந்த உடலில் எந்த அதிகாரமும் இல்லை. *(கணவனுக்கு தன் உடலின் மீது அதிகாரம் இல்லை. பொதுவாக கனவனுக்கு கொடுக்கப்பட்டுள்ள தார்மீக அதிகாரத்தில் இது மட்டும் ஒரு விதிவிலக்காகும். மனைவிக்கு தான் கணவரின் உடல் மீது அதிகாரம் உண்டு.)*

*__1 கொரிந்தியர் 7:5,__ உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.*

*No bargaining, motivating, paying back.*
*No unscriptural separation*

4. **குழந்தை பெறுதல்**

*__1 தீமோத்தேயு 2:15,__ அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.*

5. **வீட்டை நிர்வகித்தல்**

*__1 தீமோத்தேயு 5:14,__ ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.*

ஒரு நிர்வாகியாக வீட்டை நிர்வகிக்க வேண்டும். ஆனால் கணவரின் அதிகாரத்தின் கீழ் நிர்வகிக்க வேண்டும்.

*__தீத்து 2:5,__ தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப்*

___________________________________________________________________

___________________________________________________________________

*போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு..*

## பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் கடமை

***எபேசியர் 6:1-4.*** *1. பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். 2. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், 3. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. 4.பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.*

***கொலோசெயர் 3:20-21,*** *20. பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. 21. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.*

பெற்றோர்கள், தேவன் கொடுத்த பரிசாக குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருந்து அவர்களுடைய வாழ்க்கையில் சிறந்தவற்றை வெளியே கொண்டுவர வேண்டும்.

**அன்பு, எடுத்துக்காட்டு, ஒழுக்கம், *consistency*** மற்றும் **குடும்பத்தில் தந்தையின் ஈடுபாடு** ஆகிய ஐந்து முக்கிய பகுதிகளை குழந்தைகள் வாழ்வில் பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்.

குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து தேவன் அந்த குடும்பத்திற்காக வைத்திருக்கும் திட்டத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

நான் இந்த பாடத்தை ஆரம்பித்தபோது கூறியது போல பொறுப்புகள் எப்பொழுதும் சுழன்று கொண்டே இருக்கும், ஆதலால், ஆலோசனையை மிகவும் கவனமாக கேட்டு அதின்படி நடக்க வேண்டும்.

______________________________________________________________

______________________________________________________________

# *9. ஆவிக்குரிய குடும்பத்தின் உக்கிராணத்துவம் Spiritual Family*

***எபேசியர் 3:14,*** *இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய,*

நாம் கையாளும்படி தேவன் நமக்கு இரண்டு குடும்பங்களை கொடுத்திருக்கிறார் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

1. உலகப்பூர்வமான குடும்பம் - *Physical Family*
2. ஆவிக்குரிய குடும்பம் - *Spiritual Family*

முந்தைய பாடத்தில் நாம் உலகத்திற்குரிய குடும்பத்தை குறித்து பார்த்தோம். இப்போது நாம் ஆவிக்குரிய குடும்பத்தை பற்றி பார்ப்போம்.

பெந்தெகோஸ்தே வட்டாரத்தில் *(Pentecostal circle)* மறுபிறப்பு *(born again)* என்ற பதத்தை பயன்படுத்துவார்கள். அந்த வார்த்தையில் ஒரு ஆழமான அர்த்தம் இணைந்துள்ளது.

நாம் உடல்ரீதியாக ஒரு குடும்பத்திற்குள் பிறக்கிறோம். ஆனால் நாம் மறுபடியும் பிறக்கும்போது, நாம் தேவனின் குடும்பத்திற்குள் அவருடைய பிள்ளையாக சுவீகாரம் பண்ணப்படுகிறோம்.

***யோவான் 1:12,*** *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.*

***ரோமர் 8:14,*** *மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, அவருடைய தாயாகிய மரியாளும் அவருடைய சகோதரர்களும் அவரை காண வந்த போது, இந்த ஆவிக்குரிய குடும்பத்தை குறித்து அவர் தெளிவாக கூறினார்.

***மத்தேயு 12:46-50,*** *46. இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேசவேண்டுமென்று வெளியே நின்றார்கள். 47. அப்பொழுது, ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான். 48. தம்மிடத்தில்*

________________________________________________________________

________________________________________________________________

*இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, 49. தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! 50. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.*

ஆனாலும் இயேசு கிறிஸ்து ஒருபோதும் அவருடைய சரீரரீதியான குடும்பத்தை இழக்கவில்லை.

***யோவான் 19:25-27,*** *25. இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். 26. அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்.n 27. பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.*

இவ்வுலகத்தின் இரட்சகராகிய இயேசு இந்த முழு உலகின் தண்டனையையும் சிலுவையில் சுமந்திருந்த போதும் கூட, சிறிது நேரம் எடுத்து தன் உலகப்பிரகாரமான தாயை தனித்து விடாதபடி அவரையும் கவனித்து உறுதி செய்கிறார்.

இந்த காட்சியிலிருந்து, நல்ல உக்கிராணக்காரர்களாக இவ்வுலகிலும் தேவனுடைய ராஜ்யத்திலும் நமக்கு கடமைகள் இருப்பதை புரிந்துகொள்ளலாம்.

வேதாகமம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடைய மணவாட்டி என்ற உவமையை நாம் காணலாம். நாம் மனவாட்டியாக அவருக்கு நிச்சயிக்கப்பட்டு திருமணத்திற்காக காத்திருக்கிறோம்.

***2 கொரிந்தியர் 11:2,*** *நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.*

இந்த அணுகுமுறையோடு நாம் நம்முடைய முந்தைய பாடமாகிய குடும்பத்தில் உள்ளவர்களின் கடமையை குறித்து பார்த்தால், ஆவிக்குரிய குடும்பத்தின் உக்கிராணத்துவத்தை பற்றி நாம் அறிந்துகொள்ளலாம்.

__________________________________________________________________

__________________________________________________________________

## கணவனின் கடமை, கிறிஸ்து:

**எபேசியர் 5:23,** *கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.*

1. தலைமை/வழிகாட்டுதல் - Lead

இயேசு கிறிஸ்துவே சரீரமாகிய சபையின் தலைவர்.

**கொலோசெயர் 1:18,** *அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.*

**எபேசியர் 1:22-23, 22.** *எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, 23. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

இயேசுவின் தலைமைத்துவம் சுயத்தையோ அவருடைய நலனையோ மையமாக கொண்டது அல்ல *(not self-centred)*. அவர் மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக தம்மையே அர்ப்பணித்தார். ஏன்? அன்பின் காரணத்தால்!

2. நேசித்தல்

**எபேசியர் 5:25,** *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,*

**ரோமர் 5:6,** *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.*

**ரோமர் 5:8,** *நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

**ரோமர் 5:10,** *நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

தேவன், நம்மை மீட்பதற்காக தம்முடைய ஒரேபேறான குமாரனை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து இவ்வளவாய் அன்பு காட்டினார்.

______________________________________________________________

______________________________________________________________

### 3. நாணயமானவர் - Loyal

வாழ்க்கையின் அனைத்து அனுபவங்களிலும் இயேசு கிறிஸ்து எப்போதுமே சபையின் பக்கம்தான் இருக்கிறார்! *Jesus Christ stands by His Church through every experience of life!*

***மத்தேயு 28:19-20,*** *19. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

***யோவான் 14:18,*** *நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.*

### 4. உதாரணமாக வாழ்தல்

***எபேசியர் 5:1-2,*** *1. ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, 2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்*

அதனால், நாம் அனைவருக்கும் குறிப்பாக குடும்பத்தில் ஒரு உதாரணமாக வாழ வேண்டும்.

***1 பேதுரு 2:20-22,*** *20. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். 21. இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 22. அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை;*

***1 யோவான் 2:6,*** *அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.*

________________________________________________________________

________________________________________________________________

### 5. கற்றுகொள்வது மற்றும் வாழ்வது

***யோவான் 13:13-17,*** *13. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். 15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். 16. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. 17. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.*

இயேசு கிறிஸ்து நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாக இருந்தாலும் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இருந்தார். அதனால் இந்த பூமியில் எப்படி வாழ வேண்டும் என்பதை அவருடைய வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

## மனைவியின் கடமை

### 1. கீழ்ப்படிதல் - Submissive

பல்வேறு கீழ்ப்படிதலின் பிரச்சனைகளுக்கு பேதுரு பதிலளிக்கிறார்.

### a) அடிமை

***யோவான் 15:15,*** *இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.*

***John 15:15****, I do not call you slaves anymore, because a slave doesn't know what his master is doing. I have called you friends, because I have made known to you everything I have heard from My Father.*

கிறிஸ்துவுடன் சமமாக அல்லாமல் ஒரு அடிமை சேவை செய்வது போல அவருக்கு சேவை செய்ய வேண்டும்!

________________________________________________________________

________________________________________________________________

*b) கிறிஸ்துவை உதாரணமாக கொள்ளுதல்*

***1 பேதுரு 2:21 & 23,*** *21. இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்*

*23. அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.*

*c) அதேபோல், மனைவியும் கீழ்ப்படிய வேண்டும்*

***1 பேதுரு 3:1,*** *அந்தப்படி மனைவிகளே, உங்கள்சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து,*

***யாக்கோபு 4:7,*** *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*

***யோவான் 14:15 & 23,*** *15. நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*

*23. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.*

*நீங்கள் தேவனை நேசித்தால், அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். If any of you say that you love God then you ought to submit to God.*

*2. உதவியாளராக உம்முடைய பங்கு*

***ரோமர் 12:4-5,*** *4. ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, 5. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.*

***1 கொரிந்தியர் 12:12,*** *எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.*

________________________________________________________________

________________________________________________________________

***1 கொரிந்தியர் 12:14- 27,*** *14. சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களை உடையதாயிருக்கிறது. 15. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயமாயிராதோ? 16. காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? 17. சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? 18. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். 19. அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? 20. அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே. 21. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. 22. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. 23. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்; 24. நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. 25. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். 26. ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். 27. நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.*

*கிறிஸ்துவே தலைவர்.*

*நாம் எல்லோரும் ஒரே சரீரத்தின் தனித்தனி அங்கங்கள்.*

*ஒரு சரீரம் சரியாக செயல்படுவதற்கு, சரீரத்தின் அனைத்து பாகங்களும் இணைந்து வேலை செய்வது தலைக்கு அவசியமானதாகும். ஆகவே நாம் கிறிஸ்துவோடு இணைந்து, அவர்-நம்மீதும், நாம்-அவர்மீதும் சார்ந்திருக்க அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும்.*

*The head needs all the body parts to work together for the body to function perfectly. The interdependence with Christ should be greatly developed.*

____________________________________________________________________

____________________________________________________________________

## இயேசுவாகிய கணவனுக்கு துணையாக என்னுடைய கடமை

நாம் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கம், நம் கணவன், மணவாளன், கிறிஸ்துவுக்கு உதவுவதற்காகவே.

ஒருவரை உதவி செய்பவராகவும், ஒருவரை உதவி பெறுபவராகவும் வேதம் காண்பிக்கிறது.

மனைவி கணவனுக்கு உதவக்கூடிய வழிகள்.

1. ***உங்களுடைய கணவனை நேசியுங்கள் - Love your husband,***

***யோவான் 14:15 & 23,*** *15. நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*

*23. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.*

***மத்தேயு 22:37-40:*** *இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; 38. இது முதலாம் பிரதான கற்பனை. 39. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. 40. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.*

2. ***ஒரு துணையாக இருங்கள் - Be a companion,***
   நாம் இந்த சரீரத்தின் ஒரு அங்கம். அதனால் இந்த சரீரம் சரியாக இயங்க வேண்டுமென்றால், ஒவ்வொரு அங்கத்தினரும் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் பெரிதான நோக்கத்தை அடைய முடியும்.

---

*அவரையன்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. (யோவா 15:1-4)*
*அவர் மூலமாக நம்மால் அனைத்தையும் செய்ய முடியும் (பிலி 4:13)*

---

*We can do nothing without Him. (John 15:1-4)*

*We can do all things through Him (Philippians 4:13)*

_________________________________________________________________

_________________________________________________________________

### 3. வாஞ்சைகளை திருப்தி செய்தல் - *Satisfy the desires*

***2 கொரிந்தியர் 11:2,*** *நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.*

*நீங்கள் ஒரே கணவனுக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளீர்கள், எனவே நீங்கள் முட்டாள்தனமாக பிறர் பின் சுற்றித்திரிய முடியாது. நீங்கள் நிச்சயகப்பட்டுள்ளவருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள்.*

*உங்கள் கணவனாகிய கிறிஸ்துவின் தேவைகளை நிறைவேற்றுவதே உங்களுடைய ஒரே விருப்பமாக இருக்க வேண்டும்.*

*தேவனை நெருக்கமாக அறிந்து கொள்வதே நம்முடைய ஆண்டவரோடு நம்முடைய உறவை பலப்படுத்துவதற்கு முக்கிய அம்சமாகும்.*

### 4. குழந்தை பெறுதல் - *Child bearing*

***யோவான் 15:5,*** *நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.*

*உயிருள்ளவை அனைத்தும் வளர்ந்து தன் சந்ததியை பெருகச் செய்யவேண்டும். கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளும்போது, அந்த ஐக்கியத்தில் சந்ததியை உற்பத்தி செய்வது உங்களுடைய இயற்கையான பொறுப்பாகும்.*

***ஆதியாகமம் 1:11,*** *அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.*

*தேவன் குழந்தை பெறும் திறனால் உங்களை ஆசிர்வதித்துள்ளார். அதனால், நீங்கள் கிறிஸ்துவர்கள் என்றால் உங்களால் மற்றொரு கிறிஸ்தவனை ஆவிக்குரிய வகையில் ஈன்றெடுக்க முடியும். நீங்கள்*

______________________________________________________________

______________________________________________________________

ஒரு சபை என்றால், உங்களால் மற்றொரு சபையை ஈன்றெடுக்க முடியும்.

5. *வீட்டை நிர்வகித்தல் - **Manage the Home***

***சகரியா 9:16-17,*** *16. அந்நாளில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமான மந்தையாகிய அவர்களை இரட்சிப்பார்; அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள். 17. அவருடைய காருண்யம் எத்தனை பெரியது? அவருடைய சௌந்தரியம் எத்தனை பெரியது? தானியம் வாலிபரையும், புது திராட்சரசம் கன்னிகைகளையும் வளர்க்கும்.*

இந்த பூமியை இரட்சித்தவரின் அழகை பிரதிபலியுங்கள்.

எந்த ஒரு ஊழிய தேவைகளுக்காகவும் கடன் வாங்காதீர்கள்!

நீங்கள் சம்பாதிப்பதை விட அதிகம் செலவழிப்பீர்களா? அதுபோல இது தேவனுடைய வீடு. அதனால் தேவ ஊழியத்திற்காக எப்போதும் கடன் வாங்காதீர்கள். அவரே அந்தந்த தேவைகளை சந்திக்கட்டும்.

***சகரியா 10:12,*** *நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்; அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்!"*

***Zechariah 10:12,*** *By my power I will make my people strong, and by my authority they will go wherever they wish. I, the Lord, have spoken!"*

அவருடைய பெலத்தினால் நிர்வகிப்பதே நம்முடைய பொறுப்பாகும். *Our responsibility to manage it according to His strength.*

***1 தீமோத்தேயு*** *3:5, (ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?)*

## ஆவிக்குரிய பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் பங்கு

உலக குடும்பத்தைப்போல ஆவிக்குரிய குடும்பத்திலும் நம்முடைய கடமைகள் மாறும். கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஆவிக்குரிய குழந்தைகளை ஈன்று நாமும் ஆவிக்குரிய பெற்றோர்கள் ஆவோம்.

***1 கொரிந்தியர் 4:14-21,*** *14. உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான*

______________________________________________________________

______________________________________________________________

*பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 15. கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தில் நான் உங்களைப் பெற்றேன். 16. ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 17. இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான். 18. நான் உங்களிடத்திற்கு வருகிறதில்லை என்கிறதாகச் சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள். 19. ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்துகொள்வேன். 20. தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. 21. உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?*

பவுல் தன்னை ஒரு விவசாயி-ஆகவும், கட்டிடம் கட்டுபவராகவும், அடிமட்ட அடிமையாகவும் (galley slave), உக்கிராணக்காரனாகவும் வெவ்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் இந்த பகுதியில், தன் பொறுப்பை மாற்றிக் கொண்டு தன்னை ஒரு ஆவிக்குரிய தந்தையாக காட்டிக்கொள்கிறார்.

ஒரு ஆவிக்குரிய தந்தை தன் குழந்தைகளை அன்பினால் எச்சரிப்பார். இந்த வசனத்தில் என் அன்பான பிள்ளைகளே என பவுல் அழைத்துள்ளார். தேவனுடைய ராஜ்யத்தில் போதுமான அறிவோ அனுபவமோ இல்லாதவர்களுக்கு நீங்கள் ஆவிக்குரிய தாயாகவோ தந்தையாகவோ இருந்தால், அவர்கள் காணக்கூடாத ஆபத்துகளை பற்றி அவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியது உங்கள் கடமையாகும்.

ஒரு தந்தை தன் குழந்தையை பல வழிகளில் உற்சாகப்படுத்துவார். நீங்கள் கீழே கூறப்பட்டுள்ளவைற்றை குறித்து உங்கள் குழந்தைகளுக்கு அறிவுரை கூறலாம்

________________________________________________________________

________________________________________________________________

- உன்னுடைய அறையை சுத்தமாக வைத்துக்கொள் - *Keep his room clean,*
- விருந்தினர்களுடன் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் - *Use his manners with guests,*
- பாடத்தை கற்றுக்கொள் - *Learn and study*
- ஒழுங்காக ஆடையணிய வேண்டும் - *Dress neatly*
- பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் - *Be respectful toward adults.*

இதுபோலவே கீழே கூறப்பட்டுள்ள விஷயங்களை குறித்து உங்கள் ஆவிக்குரிய குழந்தைகளுக்கு அறிவுரை கூறலாம்,

- தேவனை நம்புவதில் - *trusting God,*
- பாவத்தில் இருந்து மனம் திரும்புதல் - *repenting of sin,*
- வார்த்தைக்கு கீழ்ப்படிதல் - *obeying the Word,*
- ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துதல் - *using their spiritual gifts,*
- ஒருவருக்கொருவர் சேவை செய்தல் - *serving others,*
- தீமை செய்தவர்களை மன்னித்தல் - *forgiving those that have wronged them,*
- சோதனைகளில் விடாமுயற்சி - *persevering in trials,*
- இடைவிடாது ஜெபிப்பது - *praying without ceasing,*
- வார்த்தையை படிப்பது - *studying the Word,*
- உங்கள் விசுவாசத்தை பிறருடன் பகிர்தல் - *sharing their faith,*
- ஏழைகளுக்கு கொடுத்தல் - *giving to the poor.*

நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தினரை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும், அப்போதுதான் நாம் நம்முடைய இருதயத்திலிருந்து அவர்களுடைய ஆவிக்குரிய நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் உள்ளப்பூர்வமாக உற்சாகப்படுத்த முடியும்.

ஆவிக்குரிய தந்தைகள் பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும், நான் கர்த்தருக்காக ஒரு முட்டாளாக இருக்க விரும்புகிறேன் – என்னை பின்பற்றுங்கள்,

- உலகின் பார்வையில் பலவீனமானவனாகவும் கனவீனமாகவும் காணப்பட்டு - *to be weak and without honour in the eyes of the world,*

________________________________________________________________

________________________________________________________________

- பசியோடு இருந்து - *to be hungry,*
- சரியான ஆடை இல்லாமல் - *poorly clothed,*
- தங்க வீடில்லாது - *homeless,*
- அதிகமாய் பிரயாசப்பட்டு - *toiling,*
- சொந்த கரங்களால் சுயமாய் வேலை செய்து – *working with our hands,*
- சபிக்கப்படும்போது ஆசீர்வாதித்து – *blessing when we are reviled,*
- துன்புறுத்தப்படும்போது சகித்துக்கொண்டு – *enduring when we are persecuted,*
- அவதூறாக பேசினவர்களோடு ஒப்புரவாகி – *reconciling when we are slandered,*
- கிறிஸ்துவுக்காக ஜீவனையும் கொடுக்க தயாராக இருந்து – *willing to lose your lives for Christ's sake,*
- இலகுவான வாழ்க்கை வாழ்வதற்கு ஏங்கி – *dying to a life of ease,*
- சுவிசேஷத்தின் நிமித்தம் மற்றவர்களுக்கு ஆறுதல் அளித்து – *comfort for others the sake of the gospel,*
- பகைவர்கள் செய்யும் காரியங்களுக்கு கிறிஸ்துவைபோல் பதிலளித்து நடக்க – *responding in a Christlike way to your enemies.*

**எல்லாமே தேவனுடைய ராஜ்யத்திற்காக. எங்களை பின்பற்றுங்கள்!**

**ஒரு ஆவிக்குரிய தந்தை தன்னுடைய குழந்தைகளை கண்டித்து ஒழுங்குபடுத்துவார்**. *A Spiritual father disciplines his children*

*"நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?"* - பவுல் தான் கொரிந்து பட்டணத்திற்கு வரும்போது, கொரிந்து சபையோரிடம் தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை சபையோரே முடிவு செய்துகொள்ளும்படி கூறுகிறார்.

இந்த நிருபத்தில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளை கைக்கொண்டு, அவருடைய ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவிற்கு அவர்கள் செவிகொடுத்தால், அவர்களிடம் அன்போடும் மென்மையாகவும் வருவேன் என்று பவுல் கூறுகிறார்.

அவர்கள் தங்களுடைய அகந்தையையும் பிரிவினை நோக்கங்களையும் விட்டு மனந்திரும்பாவிட்டால், அவர் ஒரு பிரம்புடன் (rod) வர

______________________________________________________________

______________________________________________________________

வேண்டியிருக்கும். தேவைப்பட்டால் திருச்சபையை கடிந்து, கண்டித்து ஒழுக்கத்திற்குள் கொண்டு வர அவர் தயங்க மாட்டார்.

## ஆவிக்குரிய பிள்ளைகள் கீழ்ப்படிய வேண்டும்

***எபேசியர் 6:1-4,*** *1. பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். 2. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், 3. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. 4. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.*

*கொலோசெயர் 3:20-21, 20. பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. 21. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.*

பெற்றோர்கள், தேவன் கொடுத்த பரிசாக குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருந்து அவர்களுடைய வாழ்க்கையில் சிறந்தவற்றை வெளியே கொண்டுவர வேண்டும்.

அன்பு, எடுத்துக்காட்டு, ஒழுக்கம், *consistency* மற்றும் குடும்பத்தில் தந்தையின் ஈடுபாடு ஆகிய ஐந்து முக்கிய பகுதிகளை குழந்தைகள் வாழ்வில் பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்

குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து தேவன் அந்த குடும்பத்திற்காக வைத்திருக்கும் திட்டத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

## முடிவுரை

நான் இந்த பாடத்தை ஆரம்பித்தபோது கூறியது போல பொறுப்புகள் எப்பொழுதும் சுழன்று *(Revolves from one level to the next level)* கொண்டே இருக்கும். தேவனுடைய ராஜ்யத்தின் குடும்பத்திலும் அப்படித்தான்.

என்னுடைய பிள்ளைக்கு நான் தந்தையாக இருந்தாலும், என்னுடைய பெற்றோர்களுக்கு நான் பிள்ளை. அதுபோல நீங்களும் யாருக்கேனும் ஆவிக்குரிய தந்தையாக இருக்கலாம், அதே சமயத்தில் மற்றொருவருக்கு ஆவிக்குரிய குழந்தையாகவும் இருக்கலாம்.

________________________________________________________________

________________________________________________________________

நான் ஒரு தந்தையாகவும் மகனாகவும் இருந்தாலும், என் சகோதர சகோதரிகளை விசாரிக்கும் கடமையும் பொறுப்பும் எனக்கு உண்டு.

அதேபோல உங்களிடம் ஆவிக்குரிய சகோதர சகோதரிகள் உள்ளனர். அவர்களையும் விசாரிக்கும் கடமையும் பொறுப்பும் உங்களுக்கும் உண்டு.

இதை உணர்ந்துகொண்டு, உங்களோடு பேசுகிற நபருக்கும் உங்களுக்கும் உள்ள உறவிற்கு ஏற்றபடி உங்கள் கடமையை அறிந்து வேதவசனம் நமக்கு கற்பிக்கிறபடியே அவைகளை நிறைவேற்றுங்கள்.

**உலகப்பூர்வமான மற்றும் ஆவிக்குரிய குடும்பத்தின் ஒப்பீடு:**

| உலகப்பூர்வமான குடும்பம் | ஆவிக்குரிய குடும்பம் |
|---|---|
| கணவனுக்கு கீழ்ப்படிதல்<br>*Submit to your husband* | தேவனுக்கு கீழ்ப்படிதல்<br>*Submit to the Lord* |
| கணவனுக்கு விசுவாசமாக இருத்தல்<br>*Loyal to your husband* | தேவனுக்கு விசுவாசமாக இருத்தல்<br>*Loyal to the Lord* |
| கணவன்/மனைவியை நேசித்தல்<br>*Love your spouse* | தேவனை நேசித்தல்<br>*Love the Lord* |
| கணவனின் வழிகாட்டுதலின்படி நடத்தல்<br>*Lead by the husband* | தேவனின் வழிகாட்டுதலின்படி நடத்தல்<br>*Lead by the Lord* |
| உதாரணமாக வாழ்தல்<br>*Live as an example* | இயேசு கிறிஸ்துவின் உதாரணத்தை பின்பற்றுதல்<br>*Follow the example of Jesus Christ* |
| கற்றுக்கொள்வதும் வாழ்வதும்<br>*Learn and live* | கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்டு அவரை பின்பற்றுதல்<br>*Learn from Christ and imitate Him* |
| உதவியாளராக இருத்தல்<br>*Be a helper* | சரீரத்தின் அங்கமாக இருத்தல்<br>*Be part of the body* |
| துணையாளராக இருத்தல்<br>*Be a companion* | கிறிஸ்துவுக்கு துணையாக இருத்தல்<br>*Companion to Christ* |

________________________________________________________________

________________________________________________________________

| | |
|---|---|
| குழந்தையை பெறுதல்<br>*Child bearing* | ஆவிக்குரிய குழந்தையை உண்டாக்குதல்<br>*Bring forth spiritual child* |
| வீட்டை நிர்வகித்தல்<br>*Manage home* | சபையை நிர்வகித்தல்<br>*Manage Church* |
| உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிதல்<br>*Obey your parents* | தேவனுக்கு கீழ்ப்படிதல்<br>*Obey God* |
| பெற்றோரால் ஒழுங்குபடுத்தப்பட்டது<br>*Disciplined by Parent* | தேவனால் ஒழுங்குபடுத்தப்பட்டது<br>*Disciplined by God* |
| சுழலும் பொறுப்புக்கள்<br>*Revolving role* | சுழலும் பொறுப்புக்கள்<br>*Revolving role* |
| தலைவர் – கணவன்<br>*Husband is the head* | தலைவர் - கிறிஸ்து<br>*Christ the head* |

_____________________________________________________________________

_____________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

# *10. சம்பாத்தியத்தின் உக்கிராணத்துவம்*

*"A wise man should have money in the head, but not in his heart."* ***- Jonathan Swift***

***மாற்கு 12:41-44***, *[41]இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். [42]ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். [43]அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப்பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்;*
*[44]அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."*



ஒரு நாள் இயேசு தேவாலயத்தின் முற்றத்தில் நின்றுகொண்டிருந்த போது, ஜனங்கள் தங்கள் காணிக்கைகளை போட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் பெட்டியில் போடும் நாணயத்தின் சத்தம் யார் எதை கொடுத்தார் என்பதை எல்லோருக்கும் அறிவித்தது. பெரிய, கனமான நாணயங்கள் அந்த இடம் முழுவதும் பெரிய சத்தமாக ஒலித்தன.

பிறகு ஒரு விதவை அங்கு வந்தாள். அவள் குறைந்த எடையுள்ள இரு நாணயங்களை மட்டுமே அந்த காணிக்கை பெட்டிக்குள் போட்டாள். அவள் போட்டதில் எந்த சத்தத்தையும் கேட்டிருக்க முடியாது.

எப்படி அந்த இரண்டு சிறிய நாணயங்கள் அந்த குறிப்பிடத்தக்க பெரிய காணிக்கைகளை மிஞ்சின?

______________________________________________________________

______________________________________________________________

*இயேசுவை பொறுத்த வரை, அந்த ஸ்திரி எவ்வளவு கொடுத்தாள் என்பதல்ல விஷயம். பணம் அவளை கட்டுப்படுத்தியதா அல்லது அவள் அந்த பணத்தை கட்டுப்படுத்தினாளா என்பதே விஷயம்.*

***லூக்கா 12:15***, *பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்."*

*அந்த ஏழை ஸ்திரியானவள் தன்னுடைய பணத்தை விட்டுக்கொடுக்க மனதாயிருந்தாள். எல்லாவற்றிற்கும் தேவனைத்தான் சார்ந்து இருக்க வேண்டும் என்பதை அவள் அறிந்திருந்தாள். பணத்தை சாராமல் இருக்கும் அவளது பழக்கவழக்கம் இயேசுவை பின்பற்றும் அனைவருக்கும் ஒரு மாதிரியாக அமைந்தது.*

***1 தீமோத்தேயு 6:10***, *பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

*பணம் உங்களை ஆளுகிறதா?*
*நீங்கள் பணத்தை ஆளுகிறீர்களா?*



*ஒன்று, பணம் உங்களை கட்டுப்படுத்தும் அல்லது நீங்கள் அதனை கட்டுப்படுத்துவீர்கள் என இயேசு கூறியிருக்கிறார்.*

*இயேசு கிறிஸ்து அன்று பார்த்ததுபோல சிலர், அந்த செல்வந்தர்களை போல மீதமுள்ள பணத்தை தருகிறீர்கள். ஆனால், சிலர் அந்த ஏழை ஸ்திரியை போல, தங்களிடம் உள்ள அனைத்தையும் தருகிறீர்கள்.*

________________________________________________________________

________________________________________________________________

பிரசங்கிகள்/ போதகர்கள் பணத்தை பற்றி அடிக்கடி பேச சங்கடப்படுகிறார்கள். பல கிறிஸ்தவர்களுக்கு இதற்கு தொடர்பான பிரசங்கத்தை கேட்கவோ அல்லது வேத பாடம் படிக்கவோ (bible study) விரும்புவதில்லை.

- இயேசு பணத்தை குறித்து அதிகம் பேசியுள்ளார். அவர் பிரசங்கித்த முப்பத்தெட்டு உவமைகளில் பதினாறு உவமைகள் பணத்தையும் பொருளையும் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை பற்றியதுதான்.
- சுவிசேஷங்களில், பத்தில் ஒரு வசனம் (மொத்தமாக 288) நேரடியாக பணம் சம்பந்தமாக உள்ளது.
- வேதாகமத்தில் ஜெபத்திற்கு 500 வசனங்களும், 500-க்கும் சற்று குறைந்த வசனங்கள் விசுவாசத்தை பற்றியும், 2,000 மேற்பட்ட வசனங்கள் பணம் மற்றும் உடைமைகளை பற்றியதாகும்.

இந்த பாடம் உங்கள் பணத்தையும் பொருட்களையும் சிறந்த உக்கிராணக்கரனாக நிர்வகிக்கும் கலையை கற்றுக்கொள்ள உதவும்.

பலர் தாங்கள் சேகரித்து வைத்துள்ள பணத்தை வைத்தே தங்களுடைய வாழ்க்கையை மதிப்பிடுவார்கள்.

பலர் இன்னும் கொஞ்சம் அதிகமான பணம் தங்களிடம் இருந்திருந்தால், தங்களுடைய வாழ்வு முழுமையானதாக இருந்திருக்கும் என நம்புகின்றனர்.

நாம் எவ்வளவு பணம் வைத்துள்ளோம் என்பதை வைத்தே நாம் வாழும் இந்த சமூகம் நம்மை எடை போடுகிறது.

இதை உடைப்பதற்கு சற்று கற்பனை செய்யுங்கள்...

உங்கள் வீட்டை நோக்கி ஒரு காட்டுத்தீ வருகிறது. உங்கள் வீட்டிலுள்ள மூன்று மிக மதிப்பு வாய்ந்த பொருட்களை எடுக்க உங்களிடம் ஐந்து நிமிடங்கள் உள்ளன. உங்களுடைய குடும்பம் பத்திரமாக உள்ளது. அளவும் எடையும் பற்றி கவலை இல்லை.

- எந்த பொருட்களை தீயிலிருந்து அழியாமல் காப்பாற்றுவீர்கள்?
- எந்த பொருட்கள் எல்லாம் உங்களுக்கு மிகவும் முக்கியமானவை?
- தீயிலிருந்து நீங்கள் காப்பாற்ற விரும்பும் பொருட்கள் உங்களைக்குறித்து என்ன கூறுகின்றன?

பணம் தீயதல்ல, ஆனால் பணத்தின் மீதுள்ள ஆசையே தீயது.

______________________________________________________________

______________________________________________________________




---

**The question is not about what we own, but about what owns us.**

---

நம்முடைய எல்லா கவனமும் பொட்களை அடைவதிலும் அதை பாதுகாப்பதிலும் சென்றுவிட்டால், பிறகு தேவனோடு உறவை வளர்த்துக் கொள்ள சிறிது நேரமும் பெலனும் மட்டுமே இருக்கும். தேவன் மாத்திரமே நம் தேவையாகவும் நமது இருதயத்தின் வாஞ்சையாகவும் இருக்க வேண்டும்.

நாம் வைத்திருக்கும் பணமும் அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதும்தான் நம் வாழ்க்கையின் பெரும்பாலான முடிவுகளை பாதிக்கிறது.

- எங்கே பணிபுரிகிறோம் - *where we work,*
- என்ன உண்கிறோம் - *what we eat,*
- என்ன உடுத்துகிறோம் - *what we wear,*
- எங்கே வாழ்கிறோம் - *where we live,*
- எவ்வாறு நமது குடும்பத்தை கவனிக்கிறோம் - *how we care for our family,*
- நாம் ஓய்வு பெறலாமா - *whether we can retire,*

போன்ற எல்லாவற்றையும் பேசுவோம். ஆனால் பணத்தை குறித்து மட்டும் வெளிப்படையாக பேசுவதில்லை.

_____________________________________________________________________

_____________________________________________________________________

உங்களில் சிலர் நல்ல நிதி நிலைமையில் இருக்கலாம், சிலர் அவ்வாறு நல்ல நிலையில் இல்லாமலும் இருக்கலாம். பணத்தை ஒழுங்காக நிர்வகிப்பவர்களிடம் பணம் நிறைய இருக்க வேண்டும் என்பது அவசியம் அல்ல. ஆனாலும் பணத்தை புத்திசாலித்தனமாக கட்டுப்படுத்த வேண்டும்.

நம்மில் சிலர் பண நெருக்கடியில் இருக்கலாம்.

திருமணமானவர்கள் விவாகரத்து செய்வதற்கான முதல் காரணம் பணம் என்று உங்களுக்கு தெரியுமா?

பலர் தங்கள் சுய மரியாதை, வேலை, திருமணம், அல்லது வேறு எதை காட்டிலும் பணத்தை பற்றியே மிகவும் கவலைப்படுவார்கள். ஆண்களை விட பெண்களே பணத்தை குறித்து அதிக கவலைப்படுவார்கள்.

பொய்யான கடவுளை குறிக்க வேதாகமம் பயன்படுத்தும் வார்த்தை "மேமோன்" *(Mammon)* என்பதாகும். இதனை "பணம்" அல்லது "செல்வம்" என மொழிபெயர்க்கலாம்.

பணம் உங்களுடைய தெய்வமா?

பலர் தாங்கள் சம்பாதிப்பதை விட அதிகம் செலவழிப்பார்கள்! அதனால், கடன் வாங்குவார்கள். *Then they will live in a life style which they can't afford on a long term.*

நீங்கள் உங்களுடைய பொக்கிஷங்களை வீணாய்போகும் திருடப்படும் இவ்வுலகுக்குரிய பொருட்களின் மீது முதலீடு செய்கிறீர்களா? என்று தேவன் நம்மை கேட்கிறார்.

அல்லது பரலோக பொக்கிஷங்களில் முதலீடு செய்கிறீர்களா?

எங்கு நம்முடைய பொக்கிஷம் உள்ளதோ அங்குதான் நம்முடைய இருதயமும் இருக்கும். பணத்தின் பிடியில் வாழும் வாழ்க்கைக்கும் கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு.

தேவன் நம்முடைய வங்கி கணக்கின் அளவை வைத்து நம்மேல் மகிழ்ச்சியடைய மாட்டர். ஆனால் அவர் நம்மிடம் ஒப்படைத்ததை எவ்வாறு பகிர்கிறோம் என்பதில் நம்மிடம் மகிழ்ச்சியடையகிறார்.

*God holds us accountable for how we stewardship our money.*

நம்முடைய பணத்தின் உக்கிராணக்காரர்களாய் நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதை தேவன் நம்மிடம் விசாரிக்கிறார்.

______________________________________________________________

______________________________________________________________


தேவன் நமக்களித்த ஈவுகளின் ஞானமான உக்கிராணக்காரர்களா அல்லது ஞானமற்ற உக்கிராணக்காரர்களா?

## வரவு செலவுத் திட்டம்

### *உங்களிடம் வரவு செலவுத் திட்டம் உள்ளதா? Do you have a Budget planner?*

***லூக்கா 14:28-30,*** *[28]உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட
மனதாயிருந்து, [29]அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத்
திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: [30]இந்த மனுஷன்
கட்டத்தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித்
தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத்
தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து
செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?*

பல கிறிஸ்தவர்கள் தங்கள் பணத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை திட்டமிடாத காரணத்தால் தோல்வியடைகின்றனர்.




நிறைய வீடுகள் பட்ஜெட் இன்றி வாழ்கின்றனர். எந்த திட்டமும் இல்லாமல், ஊதியத்திற்கு ஊதியம் வாழ்கிறோம்.

- நாம் மோசமாக முதலீடு செய்கிறோம் - *we invest poorly,*
- நாம் மிகவும் குறைவாக சேமிக்கிறோம் - *we save too little,*

____________________________________________________________

____________________________________________________________

- நம்மால் இயன்றதுக்கு அப்பால் வாழ்கிறோம் - *we live beyond our means,*
- எல்லாவற்றையும் விட பணத்தை குறித்து அதிகமாக கவலைப்படுகிறார்கள் - *people find themselves worried about money more than anything else*
- உங்கள் பணம் உங்களை ஆள்கிறது - *your money masters you.*

## பட்ஜெட் (வரவு செலவு திட்டம்) என்றால் என்ன?

"பட்ஜெட்" என்பது பெயர்ச்சொல் மாத்திரமல்ல வினைச்சொல்லும் கூட. *The word "budget" is both a noun and a verb.* "பட்ஜெட்" என்பதன் மற்றொரு வார்த்தை "திட்டம்."

பட்ஜெட் என்பது நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் மற்றும் எவ்வளவு நீங்கள் கடன்பட்டிருக்கிறீர்கள் என்கிற விவரங்கள் கொண்ட ஒரு ஆவணமாகும்.

| | |
|---|---|
| ***Specific*** | *Clearly name your goal.*<br>தெளிவாக இலக்கை குறிப்பிடுங்கள் |
| ***Measurable*** | *Mark your progress* |
| ***Attainable*** | *Assess that your goal is possible*<br>குறித்த இலக்கு அடையக்கூடியதா என்பதை மதிப்பிட வேண்டும் |
| ***Realistic*** | *Your benchmarks are feasible* |
| ***Timely*** | *The timeline can be met* |

_______________________________________________

_______________________________________________



மூன்று பட்ஜெட்களை உருவாக்குங்கள் - ஒரு மாதம், ஒரு வருடம், பத்து வருடங்கள் – ஆகிய மூன்று பட்ஜெட்களை ஒரே சமயத்தில் உருவாக்குங்கள்.

## வருமானம் - *Income*

*நீங்கள் இப்போது எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதில் இருந்து துவங்குங்கள். (உங்கள் மொத்த வருமானத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள்; நீங்கள் சம்பாதித்ததைப் பார்க்கும் முன்பு, உங்கள் ஊதியக் காசோலையில் இருந்து வரிகள், காப்பீடுகள் மற்றும் பிற பொருட்கள் எடுக்கப்படுகின்றன. அரசாங்கத்திற்கும், காப்பீட்டு கட்டணத்திற்கும் மற்றும் பிற ஊதிய வரிகள் விலக்குகளுக்கும் நீங்கள் செலுத்தவேண்டியதை உண்மையாக செலுத்துங்கள்)*

*Start with what you earn now. (Do not take your gross income; You have taxes, insurance, and other items taken out of your pay check before you ever see what you have earned. Pay the government, insurance bills, and other payroll deductions faithfully)*

*Other income: (such as interest, over time, bonus etc.,)*

__________________________________________________________________

__________________________________________________________________

## செலவுகள் - *Expenses*

### *1. தேவனுக்கு*

***நீதிமொழிகள் 3:9-10***, [9]உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. [10]அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்

***ரோமர் 11:16***, மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

***எவ்வளவு?***

***2 கொரிந்தியர் 9:6-8***, [6]பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். [7]அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். [8]மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

உங்கள் மனதில் என்ன முடிவு செய்து உள்ளீர்களோ அதை தான் நீங்கள் கொடுப்பீர்கள்! தசமபாகம் இல்லை! இதை குறித்த ஒரு விளக்க பாடம் வளை தளத்தில் *(YouTube)* உள்ளது. இதனை நீங்கள் பிறகு பார்க்கலாம்.

***மனப்பான்மை / Attitude***: *Be cheerful - உற்சாகமாக!*

### எங்கே கொடுப்பது:

எங்கே தேவன் உங்களை கொடுக்கும்படி ஏவுகிராரோ அங்கே கொடுங்கள்!

***1 கொரிந்தியர் 16:2-3,*** [2]நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன். [3]நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன்.

________________________________________________________________

________________________________________________________________

### *2. சேமிப்பு: 5 to 10%*

நாம் செலவு செய்வதில் அடுத்த கட்டத்திற்கு செல்வோம். உங்களுடைய முதல் செலவு **சேமிப்பாகவே** இருக்க வேண்டும்.

பணத்தை சேமிப்பதற்கு பல தவறான நோக்கங்கள் உண்டு. எதிர்காலத்தின் மீதுள்ள பயத்தினால் சேமிக்கிறீர்கள் என்றால், தேவனே உங்களது எல்லா தேவைகளையும் சந்திப்பார் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இல்லை என்பதையே இது காட்டுகிறது. கர்த்தர் உங்களை கவனித்து, உங்கள் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று அவர் நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறார் (**பிலிப்பியர் 4:19**).

பணத்தை சேமிப்பது, எதிர்கால தேவைகளை சந்திப்பதற்கு நம்மை தயார்ப்படுத்துகிறது.

**நீதிமொழிகள் 6:6-8**, [6]சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். [7]அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், [8]கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்.

***Proverbs 6:6-8**, Lazy people should learn a lesson from the way ants live. [7] They have no leader, chief, or ruler, [8] but they store up their food during the summer, getting ready for winter. (GNT)*

குறைந்த பட்சம் 5 முதல் 10% வரை நாம் சேமிக்க வேண்டும்.

### *3. கடன் - Debt payment: 1-10%*

கடனை பாவம் என வேதாகமம் எங்கும் கூறவில்லை. ஆனால் கடனுக்கு "அடிமைத்தனம்" என்ற தெளிவான குறிப்புகள் உள்ளது.

கடன் வாங்குவதை வேதாகமம் ஊக்குவிப்பதில்லை. மேலும் மோசே இஸ்ரவேலர்களிடம் பேசிய போது, மற்றவர்களிடமிருந்து கடன் வாங்குவது கீழ்படியாமையின் விளைவு என பட்டியலிடுகிறார்.

நான் உங்களுக்கு ஒரு சிறிய ஆலோசனையை கொடுக்க விரும்புகிறேன். இதை மறக்காதீர்கள்!

---

*Do Not finance your "wants" with debt!*

---

________________________________________________________________

________________________________________________________________

**கடன் வாங்கி உங்களுக்கு விருப்பமானதை வாங்க நிதி ஒதுக்காதீர்கள்!**

***விருப்பத்திற்கும் தேவைக்கும்*** *இடையே உள்ள வித்தியாசத்தை கற்றுக்கொள்ளுங்கள்!*

***ரோமர் 13:8,*** *ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.*

***Romans 13:8,*** *Don't run up debts, except for the huge debt of love you owe each other. (MSG)*

*அதனால், ஒரு இலக்கை நியமித்து உங்கள் கடன்களில் இருந்து விடுபட முயலுங்கள். இதனை நாம் இணைந்து இந்த பாடத்தின் முடிவில் செய்வோம்.*

*நான் உங்களுக்கு சிறிய யோசனையை அளிக்கிறேன். இது நீங்கள் உங்கள் எதிர்காலத்திற்கு திட்டமிட உங்களுக்கு உதவியாக இருக்கும்.*

---

*Never borrow for decreasing assets!*
*(Like automobiles, Electronic goods etc)*

---

*உங்கள் கடன் அட்டையில் (credit card) பணம் செலுத்தாமல் அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்லாதீர்கள். அவர்கள் அதற்கு 36% வரி போடுகின்றனர். மேலும் உங்கள் கடன் அட்டையை (credit card) சேமிப்பு அட்டையை (debit card) போல பயன்படுத்துங்கள். Set up a direct debit to take all your expenses of the month the credit card. உங்களுடைய credit card-ஐயும் debit card-ஐயும் cash card-ஐப்போல பயன்படுத்துங்கள்.*

4. *வீடு - **Housing**: 25-40%*

*உங்கள் வீட்டு வாடகை அல்லது வீட்டு லோன் செலவே நீங்கள் செலுத்த வேண்டிய அடுத்த பெரிய செலவாகும்.*

*உங்கள் வீட்டிற்கான லோன் பணத்தை செலுத்துபவராக நீங்கள் இருந்தால், ஒவ்வொரு மாதமும் கூடுதல் கட்டணம் செலுத்துவதற்கு நீங்கள் முயற்சியுங்கள்.*

*If you are paying mortgage for your home, then you can make an effort to make one extra payment every year.*

_______________________________________________________________

_______________________________________________________________

*A $200,000 **30-year** home loan with an interest rate of 5% would cost $186,512 in interest with the traditional 12 payments a year.*

*Make the equivalent of 13 monthly payments every year, and the loan will be retired in **26 years** and you will pay only $153,813 in interest, a savings of **$32,699**.*

### 5. போக்குவரத்து - ***Transport***: 15-25%

வாகன கடனை திருப்பி செலுத்துதல், பெட்ரோல் *(petrol)*, இரயில் அல்லது டாக்ஸி *(taxi)* போன்ற அனைத்தையும் ஒன்று சேர்த்தால் 25% மேல் ஆகக்கூடாது.

உங்களிடம் இரண்டு வாகனங்கள் இருந்தால், எவ்வாறு செலவை குறைப்பது என பாருங்கள்.

### 6. இன்சூரன்ஸ் (காப்பீடு) - ***Insurance***: 1- 5%

உங்களில் பலருக்கு உங்களுடைய வேலையின் பகுதியாக *health insurance* இருக்கும். ஆனால் எல்லோரிடமும் ஒரு *health insurance*-ஆவது இருக்க வேண்டும். இதோடு *house insurance, car insurance* போன்றவையும் அசசியமானவை ஆகும்.

### 7. வீட்டிற்கான செலவு - ***Household expenses*** 20 -40%

*Groceries/Perishables, clothes, gifts, Personal Cosmetics/Etc., Meals, travel/Vacations/Trips, Fitness/Hobbies.*

நல்ல ஆரோக்கியமான வாழ்க்கை முறை வேண்டும். எனவே நீங்கள் நல்ல காய் கறி பொருட்களை வாங்கி முடிந்தவரை வெளியில் சாப்பிடுவதை தவிர்த்துவிடுங்கள். வீட்டிலேயே உணவு தயாரிப்பது பாதுகாப்பும் சுகாதாரமும் கூட.

### 8. தொழில்முறை சேவைகள் - ***Professional services***: 1-10%

உங்களுடைய குழந்தைகள் சிறியவர்களாக இருந்தால் *Child care* (குழந்தை காப்பு நிலையம்) தேவைப்படும். அவர்கள் வளந்தவர்களாக இருந்தால் பள்ளி கட்டணம், பின்னர் கல்லூரி கட்டணம் போன்றவை தேவைப்படும்.

சலவை போன்ற மற்ற சேவைகளும் தேவைப்படும்.

*Don't panic… for some it may go over 15 %…*

___________________________________________________________________

___________________________________________________________________

இப்போது தான் நீங்கள் வரவு செலவு கணக்குகளை திட்டமிட வேண்டும். இதனால் தான் நாம் இதனை செய்கிறோம்.

## முடிவுரை

இப்போது குடும்பமாக ஒன்றிணைந்து பட்ஜெட் திட்டமிடலாம்.



உங்களுடைய பட்ஜெட் மற்றும் *planning*, கட்டுமான தளம் போன்று இருக்க வேண்டும்.

ஒரு கட்டிடத்தை கட்ட எல்லா வளங்களும், மக்களும், கருவிகளும் தேவைப்படும். அது போலவே ஒரு அழகான கட்டிடத்தை உருவாக்க உங்களுக்கும் அனைத்து வளங்களும், குடும்பத்தின் அங்கத்தினர் அனைவரும் ஒன்றாக இணைந்து தங்களிடம் உள்ள அனைத்து சாதனங்களையும் கொண்டே இதனை செய்ய முடியும்.

_______________________________________________________________

_______________________________________________________________

## *Goal Setting*

Mention here any short/long term goals for your family. Mentiond here are some usual goals. However, as husband and wife decide the goals for your family.

| | Goal | Amount | Time (Months / Years) |
|---|---|---|---|
| | Pay off Debt | | |
| | Save for a major purchase like car/ house | | |
| | Major expenses like college fees | | |
| | Replacing a major appliance like cooker, heating/ cooling system | | |
| | Vacation | | |
| | Save for pregnancy | | |
| | Save for emergency | | |
| | Save for retirement | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

____________________________________________________________________

____________________________________________________________________

***Debts***

Specify all the debts holdin the family.

| Debt | Company | Amount $ | Interest Rate |
|---|---|---|---|
| **Credit Card 1** | | | |
| **Credit Card 2** | | | |
| **Credit Card 3** | | | |
| **Store Card 1** | | | |
| **Store Card 2** | | | |
| **Store Card 3** | | | |
| **Bank loan** | | | |
| **Personal Loan** | | | |
| **Car loan** | | | |
| **College fee loan** | | | |
| **Other** | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| **Total** | | | |

________________________________________________________________

________________________________________________________________

### *Incomes Table*

| Income | USD | Remarks |
|---|---|---|
| **Salary / Business 1** | | |
| **Salary / Business 2** | | |
| **Salary / Business 3** | | |
| **Others** | | |
| ***Total*** | | |

### *Expenses Table 01*

| Giving to God | $ | Remarks |
|---|---|---|
| **Church** | | |
| **Your Call** | | |
| **Others** | | |
| ***Total*** | | |

### *Expenses Table 02*

| Savings 5-10% | $ | Remarks |
|---|---|---|
| **Emergency** | | |
| **Replacement** | | |
| **Long-term** | | |
| ***Total*** | | |

_______________________________________________________________

_______________________________________________________________

### *Expenses Table 03*

| Debt 1-10% | $ | Remarks |
|---|---|---|
| Credit Cards | | |
| Loans | | |
| Store Cards | | |
| *Total* | | |

### *Expenses Table 04*

| Housing 25 -40% | $ | Remarks |
|---|---|---|
| Mortgage/Rent | | |
| Repair/ Maint | | |
| HOA, Property tax, Insurance | | |
| Others | | |
| *Total* | | |

### *Expenses Table 05*

| Transport | $ | Remarks |
|---|---|---|
| Car loans | | |
| Tax/Tag/license | | |
| Train/Bus pass | | |
| Gas | | |
| Maintenance | | |
| *Total* | | |

_______________________________________________________________

_______________________________________________________________

## *Expenses Table 06*

| Insurance 5% | $ | Remarks |
|---|---|---|
| **Car** | | |
| **Health** | | |
| **Home** | | |
| **Others** | | |
| ***Total*** | | |

## *Expenses Table 07*

| Household 25-40% | $ | Remarks |
|---|---|---|
| **Groceries** | | |
| **Restaurants** | | |
| **Clothes** | | |
| **Gifts** | | |
| **Household items** | | |
| **Personal** | | |
| **Beauty products** | | |
| **Travel/ vacation** | | |
| **Fitness** | | |
| **Hobby** | | |
| **Miscellaneous** | | |
| ***Total*** | | |

_____________________________________________________________________

_____________________________________________________________________

## *Expenses Table 08*

| Personal 5-10% | $ | Remarks |
|---|---|---|
| **Child care** | | |
| **School/ College fees** | | |
| **Laundry** | | |
| ***Total*** | | |

## *Ratio of Income and Expenses*

- Current % - Find the existing % of amount spent in each category (Expense 01 to 08) worked out in the above pages.
- Target % - This can be filled during the interactive session

| | Income | 01 - Giving to God | 02 - Savings | 03 - Debt | 04 - Housing | 05 - Transport | 06 - Insurance | 07 - Household | 08 - Personal |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ***Expense %*** | 100% | | | | | | | | |
| ***Target %*** | - | | | | | | | | |

________________________________________________________________

________________________________________________________________

# *11. தாலந்துகளும் வரங்களும்*

## *தேவனுடைய ராஜ்யம்*

*In the Gospel we will find the phrases as "**Kingdom of heaven**," or "**Kingdom of God**,". The Kingdom is the sphere where God rules by grace and salvation through Christ. The Kingdom is the sphere of God's dominion in Christ.*




*சுவிசேஷத்தில் "**பரலோக ராஜ்யம்**" அல்லது "**தேவனுடைய ராஜ்யம்**" போன்ற சொற்களை நாம் காணலாம். தேவன் கிருபையினாலும் கிறிஸ்துவின் இரட்சிப்பினாலும் ஆட்சி செய்யப்படும் பகுதியே தேவனுடைய ராஜ்யமாகும்.*

*இந்த ராஜ்யம் ஆவிக்குரியது. ஆகையால் **நம் கண்களுக்கு தெரியாது**. இந்த ராஜ்யம் உண்மையாகவே மறுபடி பிறந்து புதிதாக்கப்பட்டவர்களால் (truly regenerated) நிறைந்தது. இது கண்களுக்கு தெரியாததால், இந்த ராஜ்யத்தில் யார் இருக்கிறார்கள் என்று நம்மால் காணமுடியாது.*

*சில நேரங்களில் பரலோக ராஜ்யம், **கண்களால் காணப்படுகிற** ராஜ்யத்தையும் குறிக்கும். இந்த காணப்படுகிற ராஜ்யம், தங்களை கிறிஸ்தவன் என்று அடையாளம் சொல்லிக்கொள்ளும் ஜனங்களை குறிக்கிறது. ஆனால் இதில் "Some are real, and some are false".*

______________________________________________________________

______________________________________________________________

***மத்தேயு 13:47-50,*** *[47] "அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. [48] அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். [49] இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, [50] அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்."*

*ராஜ்யமானது, கடலின் அடிப்பகுதியில் போடப்பட்டு பொருட்களால் நிரந்த வலையைப் போன்றதாகும். வலையில் சிக்கிய சிலவற்றை சேர்த்துக்கொண்டு கொண்டு, சிலவற்றை தூர எறிய வேண்டும்.*

*பரலோக ராஜ்யமானது கோதுமை மற்றும் களை போன்றதாகும். கோதுமையை வைத்துக் கொண்டு, களையை தீயில் தூர எறிய வேண்டும்.*

*ராஜ்யமானது நிலத்தைப் போன்றதாகும், சில நிலம் நல்லதாகவும் சில நிலம் கெட்டதாகவும் இருக்கும்.*

*ஆகவே, சுவிசேஷ குறிப்புகளில், சில சமயங்களில் காணப்படுகிற வெளிப்புறமான ராஜ்யத்தையும், சில சமயங்களில் காணப்படாத உட்புறமான ராஜ்யத்தையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மத்தேயு 25இல் உள்ள பத்து கன்னிகைகளை குறித்த உவமையில், ராஜ்யமானது அந்த பத்து கன்னிகைகளை போன்றதாகும். அதில் ஐந்து கன்னிகைகள் உண்மையானவர்கள், ஐந்து கன்னிகைகள் உண்மையற்றவர்கள். Five of them were real and five of them were false. Five of them had internal grace, five of them did not. இந்த வசனங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட காணப்படுகிற ராஜ்யத்தில் உள்ள உண்மையானவர்களையும் பொய்யர்களையும் படம்பிடித்துக் காட்டுகிறது.*

*இது போன்ற காரியத்தை நாம் சபைகளிலும் காணலாம்.*

*இப்போது நாம் பார்க்க போகிற தாலந்துகளை குறித்த உவமையில், இரட்சிக்கப்பட்டு தேவ ராஜ்யத்திற்குள் இருப்பவர்களை பற்றிப் பேசப்போகிறோம்.*

*இந்த உவமையில் உள்ளவர்கள், தேவனின் பணியாளர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். ஆகவே நீங்களும் நானும் இந்த உவமையின்*

________________________________________________________________

________________________________________________________________

காணக்கூடிய ராஜ்யத்தின் பகுதியாக இருக்கிறோம். *So, you and me are within this parable of in its external visible Kingdom.*

இந்த உவமை சொல்லப்பட்ட சூழலை முதலில் உங்களுக்கு அமைத்துத் தருகிறேன்!

***மத்தேயு 24:3***, *பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.*

சீஷர்கள் ஆண்டவரிடம் கேட்கிறார்கள், "உங்களுடைய வருகை எப்போது இருக்கும்?"

அதற்கு ஆண்டவர், "அந்த நாளையோ நேரத்தையோ குறித்து யாரும் அறியார்கள்" என்று பதிலளித்தார். இதனை அவர் அவர்களிடம் ஐந்து முறை கூறினார்.

***மத்தேயு 24:36,***

***மத்தேயு 24:42,***

***மத்தேயு 24:44,***

***மத்தேயு 24:50*** மற்றும்

***மத்தேயு 25:13***

*Jesus told them the sign of the Son of Man in heaven. He talked about the danger and deception and evil of the great Tribulation period.* இயேசு அவர்களிடம் வானத்தில் மனுஷகுமாரனின் அடையாளங்களை குறித்து கூறினார். அந்த மகா உபத்திரவ காலங்களின் ஆபத்துக்களையும் வஞ்சனைகளையும் பொல்லாங்கையும் குறித்து கூறினார்.

சுருக்கமாக சொன்னால், அவர்கள் எப்போதும் தம்முடைய வருகைக்காக ஆயத்தமாக காத்துக்கொண்டிருக்க வேண்டும் என இயேசு விரும்பினார். யாரும் அந்த நாளையும் நேரத்தையும் அறியார்கள். எப்போதும் ஆயத்தமாக இருங்கள்!

தம்முடைய செய்தியை சீஷர்களுக்கு விளக்குவதற்காக இயேசு கிறிஸ்து இரு உவமைகளை கூறினார்.

- பத்து கண்ணிகைகளைக் குறித்த உவமை (மத்தேயு 25:1-12 இதை பற்றி நாளை காணலாம்)

______________________________________________________________

______________________________________________________________

- *தாலந்துகளை குறித்த உவமை (மத்தேயு 25:14-30)*

*இரண்டு உவமைகளையும் 13ஆம் வசனம் இணைக்கிறது.*

***மத்தேயு 25:13***, *"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.*

*முதலாவது உவமை அவர் வருகையின் காலத்தை பற்றியது. தயாராக இருந்து அவரது வருகைக்காக காத்திருப்பதை பற்றியது.*

*Let me warn you that we should strike a balance between waiting and working.*

***2 தெசலோனிக்கேயர் 3:10-12***, *[10]ஒருவன் வேலைசெய்ய
மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள்
உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.
[11]உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய்,
ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.
[12]இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச்
சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப்
புத்திசொல்லுகிறோம்.*

*அவர்கள் தேவனின் வருகைக்காக காத்திருப்பதால் வேலை செய்யாமல் இருந்தனர். தேவன் எப்போது வேண்டுமானாலும் வரலாம், அதனால் ஏன் வேலைக்கு செல்ல வேண்டும்? அவர்கள் வேலையை ராஜினாமா செய்து விட்டு மற்றவர்களுக்கு பாரமாகவும் வீண் அலுவற்காரராயும் இருந்தனர்.*

*மற்றொரு புறம், தேவன் வரமாட்டார் எனவும் மக்கள் எண்ணிகொண்டிருந்தனர். பேதுரு இவர்களை "முட்டாளாக இருக்காதீர்கள், இயேசு நிச்சயம் திரும்பி வருவார்" என்று எச்சரிக்கிறார்.*

***2 பேதுரு 3:10***, *கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.*

*இந்த இரண்டிற்கும் இடையேயான சமநிலை தான் உங்களுக்கான தேவை. கர்த்தராகிய இயேசு கண்டிப்பாக வரப்போகிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர் வரப்போகும் வேளையை நாம் அறியாதபோதும் அவரிடம் கணக்கு கொடுக்க நாம் வேலை செய்து ஆவலுடன் காத்திருக்கிறோம்.*

______________________________________________________________

______________________________________________________________

அந்த நொடியையும் நேரத்தையும் நாம் அறியாததால், நாம் எல்லா நேரமும் காத்துக்கொண்டும் வேலை செய்து கொண்டும் இருப்பது தான் அந்த சமநிலை.

**லூக்கா *19:11-27***ல் உள்ள உவமையை தயவு செய்து கவனியுங்கள். இது இந்த தாலந்தின் உவமை அல்ல; வேறு ஒரு உவமை. நேரம் அனுமதிக்கும்போது நாம் அதைப் பார்ப்போம்.

இந்த தகவல்களை மனதில் கொண்டு, இந்த உவமையை நாம் விரிவாகப் பார்ப்போம். இதன்மூலம் தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை முழுமையாக புரிந்துகொள்ள முடியும்.

**மத்தேயு *25:14-30***

தேவன் நமக்கு, திறமைகளையும் திறன்களையும் கொடுத்து, அவரை மகிமைப்படுத்துவதற்கான வாய்ப்பையும் கொடுத்திருப்பது என்ன ஒரு பாக்கியம். ஆனால் இந்த உவமையில், அவருக்கு பணிபுரியும் வாய்ப்பையும் பாக்கியத்தையும் பெற்று, அந்த வாய்ப்பை சிறப்பாய் பயன்படுத்தியவர்களையும் வீணாக்கியவர்களையும் நாம் காணலாம்.

## பொறுப்பு - *Responsibility*

**வ14,** *“அன்றியும் பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது.*

*“For it is just like a man going on a journey. He called his own slaves and turned over his possessions to them. (HCSB)*

*“For the kingdom of heaven is like a man traveling to a far country, who called his own servants and delivered his goods to them. (NKJV)*

மூல பாஷையில் வேதாகமத்தில் “பரலோக ராஜ்யம்” என்ற வார்த்தை இல்லை. ஆனால் வ*1* மற்றும் *34*ல் இதனை சுட்டிக்காட்டியதால் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் நெடுந்தொலைவில் உள்ள நாடுகளுக்கு பயணமாக செல்கிறான். இன்று போல் அல்ல, அந்நாட்களில் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு கூட ஒரு பயணம் நீடிக்கும்.

________________________________________________________________

________________________________________________________________

தன்னுடைய அடிமைகளிடம் பொறுப்பினை ஒப்படைத்தார். அந்த அடிமைகள் அவருடையவர்கள். அவர்கள் ஏற்கனவே இந்த காணக்கூடிய ராஜ்யத்தின் ஒரு பகுதி ஆவார்கள்.

அவர் தம்முடைய பொருட்களை அவர்களிடம் கொடுத்து அவற்றை பராமரிக்கவும் அதிகரிக்கவும் கூறினார்.

**வ15**, அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்.

அவர் தம்முடைய வேலையாட்களின் தாலந்துகளையும் திறமைகளையும் நன்கு அறிந்திருந்தார். அவர்கள் அதனை ஒழுங்காக கையாளுவார்கள் என்பதனையும் அவர் அறிந்திருந்தார்

- முதலில் இருப்பவருக்கு ஐந்து தாலந்துகளை கொடுத்தார்.
- இரண்டாவதாக உள்ளவருக்கு இரண்டு தாலந்துகளை கொடுத்தார்
- மூன்றாவதாக இருப்பவருக்கு ஒரு தாலந்து கொடுத்தார்.

இந்த எண்கள் வேண்டுமானால் வேறுபடலாம். ஆனால், அவை மூன்று பிரிவுகளை காட்டுகிறது *(low, high and somewhere in the middle).*



தாலந்து என்பது எடையை குறிக்கும் அளவாகும். இதனால் தான் வெளிப்படுத்தல் 16ல், "தாலந்து நிறைய கல்மழை" அதாவது, ஒரு தாலந்து எடை கொண்ட கல்மழை என்று கூறுகிறது. இது எடையை குறிக்கும் ஒரு அளவு – கிலோகிராம் போல இதுவும் ஒரு அளவு.

__________________________________________________________________

__________________________________________________________________

*அந்த ஒவ்வொரு தாலந்தின் மதிப்பும் அது தங்கமா (விலை மதிப்பானது) அல்லது வெள்ளியா (தங்கத்தை விட குறைத்து மதிப்புள்ளது) என்பதை பொறுத்தது. இது பெரும்பாலும் வெள்ளியாக இருக்க வேண்டும். ஏனென்றால் வ18-ல் பணத்தை குறிக்கும் வார்த்தையை அடிக்கடி வெள்ளி நாணயத்தை குறிக்கவே பயன்படுத்துவார்கள்.*

*அவர் அதனை கொடுத்துவிட்டு ஒரு தொலைதூர நாட்டிற்கு பிரயாணமாய் சென்றுவிட்டார். அவர்கள் அதனை எடுத்துக்கொண்டு முதலீடு செய்து தனக்கு வரவை ஈட்டித் தருவார்கள் என எண்ணினார். உண்மையான உக்கிரணக்காரனாக காண்பித்துக்கொள்ளுங்கள்.*

*இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில், "ஒவ்வொருவனுக்கும் அவனவன் திறமைக்கேற்ப கொடுத்து விட்டு பயணமாய் சென்றார்.".*

*ஒவ்வொரு மனிதனின் திறமையே அவன் பெற்றதை தீர்மானிக்கிறது. சிலருக்கு பெரிய அளவு கையாளக்கூடிய திறமை பிறரைவிட அதிகமாக இருந்தது. அவர் அதற்கேற்ப ஒருவனுக்கு ஐந்தும், மற்றொருவனுக்கு இரண்டும், மற்றொருவனுக்கு ஒன்றும் கொடுத்துவிட்டு சென்றார்.*

- *தேவனே அந்த எஜமானர் என்பது இந்த உவமையை நீங்கள் பார்க்கும் போது உங்களுக்கு தெளிவாக தெரிந்திருக்கும்.*
- *பயணத்தில் செல்வது என்பது நமது ஆண்டவர் பரலோகத்திற்கு சென்றிருப்பதை குறிக்கிறது. அவர் இப்போது அங்கு தான் இருக்கிறார்.*
- *நாம் இப்போது நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ளோம் - We are now in management.*
- *நாம் பல்வேறு திறமைகளையும் தாலந்துகளையும் பெற்றுள்ளோம்.*
- *அவர் பரலோகத்தில் இருக்கும் இந்த நேரத்தில், நம்மிடம் இருக்கும் இந்த திறமைகளையும் தாலந்துகளையும் பயன்படுத்தி அவருக்கு சேவை செய்யவும், அவருக்காக சாதிக்கவும் வேண்டும்.*
- *நாம் அனைவரும் ஒரே திறமைகளை பெற்றிருப்பதில்லை.*
- *கிறிஸ்து நம் அனைவருக்கும் சமமான பங்கைக் கொடுக்கவில்லை.*
- *கடவுளின் வடிவமைப்பில் நாம் அனைவரும் வித்தியாசமாக இருக்கிறோம்.*

***ரோமர் 12:3**, அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து*

__________________________________________________________________

__________________________________________________________________

எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

அவர் கிருபையின் அளவையும், விசுவாசத்தின் அளவையும் பொறுத்தே அவர் ஒவ்வொருவருக்கும் வரங்களை அருளுகிறார்.

***வ16-17***, *[16]ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். [17]அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.*

***V 16-17**, Immediately the man who had received five talents went, put them to work, and earned five more.[17] In the same way the man with two earned two more.*

இந்த வசனத்தில் "உடனடியாக" என்ற வார்த்தை தமிழ் வேதாகமத்தில் இல்லை.

ஐந்து தாலந்துகளை பெற்ற மனிதன் உடனடியாக தான் பெற்றதை பயன்படுத்தினான். உடனடியாக ஈடுபடுதலே உள்ளான இரட்சிப்பின் கனியாகும். இவர் ஒரு உண்மையான ஊழியக்காரன். ஏனென்றால், அவர் உடனடியாக செயல்படுகிறார். மேலும் அவருடைய இருதயம் தேவனை சேவிப்பதன் பாக்கியத்தை உடனடியாக உணருகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் தான் உடனடியாக என் நினைவில் வருகிறார். அவர் ஞானஸ்நானம் பெற்ற பின் காலத்தை வீணடிக்கவில்லை.

***அப்போஸ்தலர் 9:20***, *தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.*

ஐந்து தாலந்து பெற்ற அந்த ஊழியர், சென்று வணிகம் செய்து நல்ல பலனை பெற்றார். அவர் எஜமானனின் பணத்தை இரட்டிப்பாக்கினார்.

ஐந்து வைத்திருந்தவர் அதனை பத்தாக்கினார். இரண்டு வைத்திருந்தவரும் அதனோடு மேலும் இரண்டை கூட்டினார்.

- சமமான சதவீதம் - *Equal percentage.*
- சமமான விளைவுகள் அல்ல - *Not equal result*
- இருவரும் உண்மையாய் இருந்ததில் வித்தியாசம் இல்லை - *Equal faithfulness*

*The implication of this parable is that even in the Kingdom there will be different levels of rulership for people at different capacities. So, God sovereignly has*

_______________________________________________________________

_______________________________________________________________

*designed some of us to be rulers and some of us to be followers and some of us to fit in at all different levels.*

*இந்த உவமையின்படி, தேவனுடைய ராஜ்யத்திலும் திறன்களுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் அவரது பொறுப்புகள் நியமிக்கப்படும் என்று நாம் அறிந்துகொள்ளலாம். ஆகவே, தேவன் தம்முடைய அநாதி திட்டத்தின்படி நம்மில் சிலரை தலைவர்களாகவும், சிலரை பின்பற்றுகிரவர்களாகவும், சிலரை வெவ்வேறு நிலைகளிலும் வடிவமைத்துள்ளார்.*

*இயேசு கிறிஸ்துவும் இப்பூமியில் இருந்தபோது இதை பின்பற்றியதை நாம் பார்க்க முடியும். தம்முடைய சீஷர்களில் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரையும் எப்போதும் தம்முடனே வைத்துக்கொண்டார். அதிலும், பேதுரு தனிப்பட்ட சிறந்த தலைவரானார். எருசலேமில் சபை ஒன்றுகூடிய போது யாக்கோபும் சபை தலைமைத்துவத்திற்கு உயர்ந்தார்.*

***வ18**, ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.*

*ஒரு தாலந்தை வாங்கினவன் ஒரு குழியை வெட்டி, அதில் அந்த தாலந்தை புதைத்தான். தன் எஜமானிடம் இருந்து பெற்றதை வைத்து எந்த வேலையும் செய்யவில்லை.*

*அக்காலத்தில் பணத்தை பாதுகாப்பாக சேமித்து வைக்க தரையில் குழிகளை தோண்டி அதில் மறைத்து வைப்பது வழக்கமாகும்.*

*ஆகான் என்பவன் தான் கொள்ளையிட்ட பணத்தை பூமியின் அடியில் மறைத்து வைத்தான்.*

***யோசுவா 7:21**, கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான்."*

*நமது உவமையில் உள்ள மனிதனும் அதனை புதைத்து வைக்கிறான். அவன் அந்த தாலந்தைக் கொண்டு எதுவும் செய்யவில்லை. மேலும் அவர் கொடுத்த வாய்ப்பையும் உரிமையையும் அவன் வீணடித்துவிட்டான்.*

*ஏனெனில் அவன் தனக்கு குறைவாக வழங்கப்பட்டுள்ளது என்று நினைத்ததால் அவன் அவ்வாறு செய்தான்.*

*நாம் இதனை ஒரு கணம் ஆழ்ந்து சிந்திக்கலாம்!*

________________________________________________________________

________________________________________________________________

- நம்முடைய ஆண்டவர் பரமேறி சென்றிருக்கும் இவ்வேளையில், நமக்கு ஆவிக்குரிய உரிமைகளைப் பெற்றிருக்கிறோம்.
- நம் தேவன் நமக்கு வெவ்வேறு வரங்களை வழங்கியுள்ளார்.
- நம் தேவன் நமக்கு வெவ்வேறு அளவில் கிருபைகளை வழங்கியுள்ளார். நமக்கு வழங்கப்பட்ட கிருபைகளைக்கொண்டு அதிகபட்சமாக அறுவடைகளை அதிகரிக்கும்படி தேவன் விரும்புகிறார்.
- ஒன்று அவர் கொடுத்தற்கு சமமாக நாம் அவருக்கு திரும்ப கொடுக்க முடியும் அல்லது நாம் அதனை வீணடிக்க முடியும்.
- ஒரே ஒரு தாலந்து வைத்திருந்தாலும், அந்த ஒரு தாலந்திற்கு பொறுப்புள்ள உக்கிரணகாரர்களாக நாம் இருக்க வேண்டும்.

## கணக்கு சரிபார்த்தல் – *Reckoning (Settling Accounts)*

*வ19, "வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக்கேட்டான்.*

*எஜமான் தனது கணக்குகளை சரிபார்க்க திரும்புகிறார். அவர் தனது அடிமைகளுக்கு தான் கொடுத்த கிருபைகளையும் வாய்ப்புகளையும் வைத்து அவர்கள் என்ன செய்துள்ளனர் என்று காண்பதற்காக அவர் மீண்டும் வருகிறார்.*

*நீண்ட காலத்திற்கு பின்னர்.... ஆண்டவர் திரும்ப வருவதற்கும் நீண்ட காலம் எடுக்கிறது...*

*ஆண்டவர் திரும்பும்போது, அவருக்கு சேவை செய்ய கொடுக்கப்பட்ட வாய்ப்பையும் கிருபைகளையும் வைத்து நாம் என்ன செய்துள்ளோம் என்பதை பார்க்க அவர் திரும்ப வரப்போகிறார்.*

- ***உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய கிருபைகளைக் கொண்டு நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்?***
- ***உங்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளை கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?***
- ***தேவன் உங்களுக்கு செய்த எல்லாவற்றிற்காகவும் உங்கள் முழு வாழ்க்கையையும் அவருக்கு சேவை செய்வதற்காக அற்ப்பணித்துள்ளீர்களா?***

________________________________________________________________

________________________________________________________________

*வ **20**, அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன் வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.'*

*வ **20,** The man who had received five talents approached, presented five more talents, and said, 'Master, you gave me five talents. Look, I've earned five more talents.'(HCSB)*

நாம் இந்த வசனத்தை கிரேக்க மொழி பெயர்ப்பில் வார்த்தைக்கு வார்த்தை பார்த்தோமெனில் இந்த வேலைக்காரனின் மகிழ்ச்சி நமக்கு புரியும்.

*"தேவனே, ஐந்து தாலந்துகளை எனக்கு அளித்தீர்கள். இதோ இன்னும் ஐந்து தாலந்துகளை பெற்றேன்."*.

ஐந்து தாலந்துகளின் முக்கியத்துவம். இவன் தன் எஜமானரை சந்தித்து இன்னும் ஐந்து தாலந்துகள் அதிகரித்திருப்பதை சொல்லுவதற்காக மிகவும் ஆவலாக இருக்கிறான். அவன் தனக்கு கொடுக்கப்பட்டதில் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருந்திருக்கிறான்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவருக்கு செய்ய வேண்டிய ஊழியத்தை சரிவர நிறைவேற்றி, அவரை காணும்போது ஆனந்தமாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

- அப்போஸ்தலனாகிய பவுலிடம் இந்த உற்சாகத்தை நாம் காணலாம். ஆகையால் தான், அவர் நியாயத்தீர்ப்பு நாளை தைரியமாய் சந்திக்க ஆவலாக உள்ளதாக கூறுகிறார்.
- தேவன் திரும்பி வரும் நாளன்று தான் வெட்கப்பட்டு போவதில்லை என அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார்.

பவுலும் யோவானும், ஆண்டவர் திரும்பும்போது அவரிடம் கொடுப்பதற்கு, அவர் கொடுத்த வாய்ப்பை கொண்டு சம்பாதித்தவை ஏதேனும் இருக்கும் என்பதை இருவரும் அறிந்திருந்தனர்.

அவர்களைப் போலவே நாம் அனைவரும், எல்லா கிறிஸ்தவரும் தேவனை சந்திக்க பயமின்றி உற்சாகமாக இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நாம் ஆண்டவரின் வருகையை குறித்து பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு அளிக்கப்பட்ட கிருபைகளையும்

______________________________________________________________

______________________________________________________________

வாய்ப்புகளையும் வைத்து நாம் செய்த ஊழியத்தை குறித்து அவரிடம் கணக்கு ஒப்புவிப்பது நமக்கு கிடைக்கும் பாக்கியமாகும்.

---

*Privileges You gave to me I received it from YOU,*
*Responded to the call on my life from YOU, and*

*Rendered back to You the service that You were due.*

*கிருபைகளை தந்தீர், அவற்றை உம்மிடம் பெற்றுக்கொண்டேன்,*
*என் வாழ்வில் நீர் கொடுத்த அழைப்பிற்கு செவிகொடுத்தேன்.*

*நீர் எனக்கு நியமித்த ஊழியம் யாவையும் நிறைவேற்றி முடித்தேன்.*

---

ஐந்து தாலந்துகளை பெற்ற ஊழியர் ஒப்புக் கொண்டதாவது,

- எல்லாவற்றையும் தேவனிடத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறோம் - *The source of everything was the lord.*
- தன்னை பற்றின அகங்காரம் இல்லை - *No Ego about himself,*
- பெருமை இல்லை- *No pride,*
- உம்முடைய அழைப்பிற்கு உண்மையாய் அர்ப்பணித்தேன் - *I am faithful to respond to your call.*

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த உலகை விட்டு செல்லும் முன் தன் ஆவிக்குரிய மகனுக்கு எழுதிய கடிதத்தில் கூறியவை:

***2 தீமோத்தேயு 4:6-8***, *[6]ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும்காலம் வந்தது. [7]நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். [8]இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.*

இது அகங்காரமான கூற்று அல்ல. ஆனால் இது உண்மையான ஊழியக்காரனின் உறுதியான வார்த்தைகளாகும்.

***வ 21,*** *“அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்,*

__________________________________________________________________

__________________________________________________________________

அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்!'

எஜமானும் சந்தோஷப்படுகிறார்! தன்னுடைய அடிமை உண்மையுள்ளவனாக இருந்ததால் எஜமானும் சந்தோஷப்படுகிறார்.

"உத்தமனும் உண்மையுமான" என்று அந்த எஜமான் அடிமையிடம் கூறுவது, வெறும் அவன் செய்த வேலையின் புகழ்ச்சி மாத்திரமல்ல, அவனுடைய குணத்தையும் சேர்த்தே புகழுகிறார்.

அந்த எஜமான் மிகவும் இரக்கமுள்ளவர். அவர் அதோடு நிறுத்தவில்லை, அந்த அடிமையிடம், "கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். நீ உத்தமனும் உண்மையுமானவன் என்றும் நிரூபித்துவிட்டாய். உன்னால் இந்த கொஞ்சத்தை கையாள முடிந்ததால் நான் உன்னை பல காரியங்களுக்கு அதிகாரியாக வைப்பேன்" என்றார்.

அந்த அடிமை மூன்று பாராட்டுக்களை பெற்றார்.

1. தன்னுடைய எஜமானின் வார்த்தைகளால் பாராட்டு பெற்றான்.
2. மேலான காரியங்களுக்கு பொறுப்பாளியாக உயர்த்தப்பட்டான்.
3. எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க அந்த அடிமைக்கு அனுமதிக்கப்பட்டது.

அவருடைய இரண்டாம் வருகையின் போது அவருக்கு முன் நிற்கும் போது அவரிடம் இருந்து எதை பெற நீங்கள் விரும்புவீர்கள்?

அவரிடம் இருந்து என் செவிகளில் நான் கேட்க விரும்புவது என்னவெனில், *"Well done Abraham, good and faithful. You are a good and trust worthy servant of mine."*.

ஆனால் தேவன் மிகவும் கிருபையானவர். அவர் மிகவும் கிருபையானவர் என்பதால் அவர் அதோடு நிறுத்த மாட்டார்.

அவர் தன்னுடைய அடிமையிடம், "கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். நீ உத்தமனும் உண்மையுமானவன் என்று நிரூபித்துவிட்டாய். உன்னால் இந்த கொஞ்சத்தை கையாள முடிந்ததால் நான் உன்னை பல காரியங்களுக்கு அதிகாரியாக வைப்பேன்."

அதுபோலவே அவர் என்னிடமும் கூறுவார்!!

_______________________________________________________________

_______________________________________________________________

நாம் நித்தியத்திற்கு செல்லும் போது நாம் அனைவரும் சமமானவர்கள் என்பதை நீங்கள் என்றாவது நினைத்ததுண்டா? *Have you ever wondered when we go into eternity we are all going to be equal?*

திராட்சத்தோட்டத்தில் உள்ள வேலைக்காரர்களை பற்றிய உவமை உங்களுக்கு நியாபகத்தில் உள்ளதா? (மத்தேயு 20:1-16)

எந்த நேரத்தில் வேலையில் சேர்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அவர்கள் அனைவருக்கும் ஒரே கூலி கொடுக்கப்பட்டது.

அதேபோல், தேவனுடைய ராஜ்யத்திலும் நாம் அனைவரும் சமமானவர்களாக ஆகிவிடுவோம்.

இரண்டாவதாக, நாம் அனைவரும் கிறிஸ்துவை போல் இருப்போம். பரிசுத்தத்திலும் பரிபூரணத்திலும் எந்த ஒரு மாறுபாடான நிலையும் இல்லை. நாம் அனைவரும் ஒன்றாக இருப்போம்.

அப்படியானால் நாம் எவ்வாறு ஆளப்போகிறோம்? *Then how come we are going to have rulership?*

தேவனுடைய ராஜ்யத்தில் ஊழியங்களில் வெவ்வேறான நிலைகள் உள்ளன. இப்போது, தேவ ராஜ்யத்தின் வேலைக்கு வெவ்வேறு வகையான மக்கள் வெவ்வேறு காரியங்களை நிறைவேற்ற தேவைப்படுகின்றனர்.

நம் அனைவருக்கும் ஒரே வேலை இருக்காது. நாம் அனைவரும் ஒரேமாதிரியான வேலையை தேவனுக்கு செய்யப்போவதில்லை. தேவதூதர்கள் தங்கள் வரிசையின் பிரகாரமாய் தேவனுக்கு சேவை செய்கின்றனர். தேவதூதர்களும், பிரதான தேவதூதர்களும் *(archangels)*, சேராபீன்களும் *(seraphim)*, கேருபீன்களும் *(cherubim)*, துறைத்தனங்களும் *(principalities)*, அதிகாரங்களும் *(powers)*, அதிபதி *(rulers)* போன்ற அனைவரும், நாமும் நம்முடைய மகிமையின் சரீரத்தில் தேவனை சேவிப்பதில் ஒரு பிரத்தியேகமான இடத்தை பெறுவோம் என நான் நம்புகிறேன்.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவை போல முற்றிலும் பரிபூரணமாய், முற்றிலும் பரிசுத்தமாய், நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொண்டவர்களாக இருப்போம். எனவே, நித்தியத்தில் நாம் எந்த வேலையை செய்தாலும் அது நித்தியமாகவும் முற்றிலும் திருப்தியளிப்பதாகவும் இருக்கும். இந்த சிறிய பொறுப்பு அல்லது பெரிய பொறுப்பை குறித்த வேறுபாட்டின் எண்ணங்கள் தோன்றாது. *Because the privilege we occupy there will be in exact accord with our eternal God designed and God given capacities.*

________________________________________________________________

________________________________________________________________

நித்தியத்தில் நாம் அனைவரும் சமமானவர்களாக இருப்போம்.

ஆனாலும், நாம் அனைவரும் வேறுபட்டவர்களாக இருப்போம்.

மூன்றாவதாக, தேவனுடைய சந்தோஷத்தில் பிரவேசித்தல்.

சந்தோஷம் அவருக்கு முன் வைக்கப்பட்டிருப்பதை அறிந்து இயேசு சிலுவையில் அறையப்பட தம்மை ஒப்புக்கொடுத்தார்.

***எபிரேயர் 12:2,*** *அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.*

தேவன் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாரோ நாமும் அவ்வளவு சந்தோஷத்துடனே இருப்போம்.

மீட்கப்பட்டுவிட்டோம், சாத்தான் தோற்றுவிட்டான், பாவம் வீழ்த்தப்பட்டது, நீதியின் ராஜ்யம் நித்தியமாய் நிறுவப்பட்டுவிட்டது, தேவனே நித்திய மகிமையுடையவர் என்று உணரும்போது நம் இருதயத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

தேவனுடைய அதே சந்தோஷத்திற்குள் நாமும் பிரவேசிப்போம்.

***வ22-23,*** *[22] “இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். [23] அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.*

*Exactly the same thing happened to the five talents! Same faithfulness.*

***வ24-25,*** *[24] “ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். [25] ஆகையால், நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.’*


நாம் கதையின் சோகமான பகுதிக்குள் நுழைகிறோம். இதை எப்படி தவிர்ப்பது என்று தான் நாம் இன்று கற்றுக்கொள்ள வேண்டும்.

______________________________________________________________

______________________________________________________________

- இந்த அடிமை தானும் எஜமானுக்கு சொந்தமானவன் என்று கூறுகிறான்.
- அவனும் எஜமானின் வீட்டின் ஒரு பகுதியை சேர்ந்தவன்.
- அவனிடமும் திறமைகள் இருந்தன.
- அவனிடம் ஒரு தாலந்தை நிர்வகிக்கும் திறமை இருந்தது. அதனால் தான் எஜமான் அவனிடம் ஒரு தாலந்தை தந்தார்.

*He produced nothing!* அவன் எதையும் சம்பாதிக்கவில்லை!



அவன் அந்த தாலந்தை கொண்டு ஒன்றும் செய்யவில்லை.

அவன் அந்த வீட்டின் அங்கமாக இருந்தாலும், தன்னுடைய எஜமானை ஒரு அவிசுவாசி குறை கூறுவதுபோல கூறியதால், அந்த வீட்டிற்கு சம்பந்தம் இல்லாதவனைப்போலவே இருந்தான்.

- நீர் மிகவும் கடினமானவர் - *You are a hard man,*
- நீர் மன்னிக்காதவர் - *You are unforgiving,*
- நீர் மனமிரங்காதவர் - *You are unrelenting,*
- நீர் வளைந்து கொடுக்காதவர் - *You are unbending,*
- நீர் கருணையற்றவர் - *You are unmerciful,*
- நீர் கிருபையற்றவர் - *You are ungracious,*
- நீர் தயையற்றவர் - *You are unkind,*

_________________________________________________________________

_________________________________________________________________

- *உம்மிடம் இரக்கம் ஏதுமில்லை - You lack compassion,*
- *நீர் மிகவும் கடினமானவர் - You are too tough*
- *உம்மிடம் உணர்வே இல்லை - You have no sensitivity.*

*This man operated out of fear! That is what religion does to people.* இவன் பயத்தினால் ஊழியம் செய்தான்! **இது தான் மதம் மக்களுக்கு செய்யும்**.

*அவன் தன் எஜமானை திருடன் என குற்றம் சாட்டுகிறான், எப்படி?*

*"நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமானவர்" என கூறுகிறான். இந்த கூற்றுக்கு திருடுதல் என்பதே பொருள்.*

*அவனது சொந்த எஜமான் மீது என்ன ஒரு குற்றச்சாட்டு!*

***வ26-27,*** *[26]"அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே. [27]அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்கவேண்டியதாயிருந்தது; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே, என்று சொல்லி.*

*நீ பணத்தை எடுத்துக்கொண்டு தரையில் புதைத்தாய் என எஜமான் அந்த அடிமையிடம் சொன்னார். நீ உன்னுடைய சோம்பேறித்தனத்தினாலும் துன்மார்க்கத்தினாலும் உன்னுடைய கிருபைகளை பயன்படுத்தவில்லை. நீ துன்மார்க்கனும், சோம்பேறித்தனமான அடிமை. நீதிமொழிகள் என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது போல, சோம்பலும் துன்மார்க்கமும் ஒவ்வொரு முறையும் கைகோர்த்து செல்கின்றன.*

*நான் கடினமானவன் என்று நீ அறிந்திருந்தால் குறைந்தபட்சம் என்னுடைய பணத்தை காசுக்காரரிடம் சேமித்திருக்கலாம் என அந்த எஜமான் தன் அடிமையிடம் கூறினார். நான் திரும்பி வந்தபோது எனக்கு வட்டி கிடைத்திருக்கும்? ரோம சாம்ராஜ்யத்திலும் இப்போது இருப்பது போல வங்கிகள் இருந்தன.*

*உண்மையில் அவன் எந்த முயற்சியும் செய்யவில்லை, நகர வாசலுக்கு சென்று காசுக்காரர்களிடம் முதலீடு செய்வது போன்ற எளிமையான முயற்சியும் செய்யவில்லை. அது அவனுடைய துன்மார்க்கத்தினாலும் சோம்பலினாலும் தான் அவன் தன் எஜமானனிடம் சாக்கும் பொய்யும் கூறினான்.*

____________________________________________________________________

____________________________________________________________________

*வ 28-30,* *[28]'அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். [29]உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். [30]பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.'*

*10 தாலந்துகள் கொண்டவனுக்கு அதை கொடுங்கள்!*

*ஏன் அவனுக்கு?*

எஜமானின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவன் உண்மையுள்ளவனாக இருந்தான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில், நித்தியம் முழுவதும், உண்மையான விசுவாசிகளால் மாத்திரமே அன்றி வேறொருவராலும் எந்த ஊழியமும் செய்யப்படாது.

தங்களது கிருபைகளையும் வாய்ப்புகளையும் நிரூபித்துக் காட்டியவர்களுக்கு அதிகம் கொடுக்கப்படும், அவர்களிடம் மிகுதியாக இருக்கும். ஒருவன் தன்னிடத்தில் இல்லாதிருந்தால், அவனிடம் இருந்ததும் எடுத்துக்கொள்ளப்படும்.

*வெகுமதியின் போது என்ன நடைபெறும்?*

உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரர் இன்னும் கிருபை பெறுகிறார்கள், ஊழியம் செய்வதற்கு அதிக வாய்ப்பு கிடைக்கும், மேலும் அதிக ஆவிக்குரிய திறனும் கிடைக்கும்.

*உண்மையற்ற ஊழியருக்கு என்ன நடக்கும்?*

*லாபமற்ற ஊழியக்காரரை புறம்பே தள்ளிவிடுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அது நரகத்தை தவிர வேறு எதுவுமில்லை.*

## முடிவுரை

*அந்த இரண்டு அடிமைகளிடமும் காணப்படும் குணாதிசயம் என்னவெனில், அவர்கள் இருவரும் தேவனுக்கு ஊழியம் செய்வற்கு தங்கள் வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய இரட்சிப்பின் உண்மையை நிரூபித்தனர்.*

__________________________________________________________________

__________________________________________________________________

அவர்கள் தங்களுடைய நேரத்தை எஜமானுக்காக செலவழித்தனர்.

ஆனால் ஒரு வேலைக்காரன் தனது பணத்தை நிலத்தடியில் புதைத்து விட்டு தன்னுடைய நேரத்தை தன்னுடைய விருப்பத்திற்காக செலவழித்தான். மேலும் அவன் தன்னை எஜாமானின் அடிமை என அழைத்துகொண்டான். ஆனால் அவன் எஜமானின் அடிமை அல்ல.

அவன் தன் எஜமானை சேர்ந்தவன் என கூறிக்கொண்டாலும், அவன் அதனை தன் செயலில் காட்டவில்லை. அவன் நரகத்தின் கணக்கில் சேர்க்கப்பட்டு கர்த்தரின் பிரசன்னத்தை விட்டு தூக்கி எறியப்பட்டான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் நமக்கு அதே எச்சரிக்கை கொடுக்கிறதை நாம் காண்கிறோம். வெளிப்புற தோற்றத்தில் மட்டுமல்ல உள்ளார்ந்த செயலிலும் ராஜ்யத்துடன் இணைந்திருக்கிறீர்களா என்று உங்களை நீங்களே நிச்சயித்துக்கொள்ளுங்கள்.

நம் தேவன் எந்த நேரத்திலும் திரும்பி வரக்கூடும்!

தேவன் உங்களுக்கு கொடுத்த கிருபைகள் மற்றும் வாய்ப்புகளை கொண்டு நீங்கள் அவரை சேவிப்பதால் அவரை காண உற்சாகமாய் இருங்கள்.

இறைவன் வரும்போது ஒரு பிரிவினை இருக்கும்!

உண்மையுள்ளவர்களுக்கு பரிசளிக்கப்படும்!

உண்மையாய் இல்லாதவர்கள், சோம்பேறிகள், பொல்லாதவர்கள் மற்றும் பயப்படுகிறவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

என் சகோதர சகோதரிகளே,

தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள கிருபைகள் மற்றும் வாய்ப்புகளின் உக்கிராணத்துவத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

நாம் ஆண்டவரிடத்தில் நம்மை தாழ்த்தி நம்முடைய அழைப்பில் உண்மையுள்ளவர்களாய் இருப்போம்.

________________________________________________________________

________________________________________________________________

## *12. உங்கள் நாவின் உக்கிராணத்துவம்*

***1 கொரிந்தியர் 4:1-2,*** *1இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக்*
*கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின்*
*உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். 2மேலும்,*
*உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு*
*அவசியமாம்*

*"**சிறியதாக இருக்கும் நாவின் வல்லமையை சந்தேகிக்காதீர்கள், அதை குறைத்தும் மதிப்பிடாதீர்கள்!**" "Never doubt the power of the tiny tongue – and never underestimate it!"*

***யாக்கோபு*** ***3:1-12,*** *1என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று*
*அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. 2நாம் எல்லாரும்*
*அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால்*
*அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே*
*அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான். 3பாருங்கள், குதிரைகள்*
*நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு,*
*அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.*
*4கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும்,*
*கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி*
*யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான*
*சுக்கானாலே திருப்பப்படும். 5அப்படியே, நாவானதும் சிறிய*
*அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய*
*நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! 6நாவும்*
*நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில்*
*நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக்*
*கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும்*
*இருக்கிறது! 7சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள்,*
*நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால்*
*அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. 8நாவை அடக்க ஒரு*
*மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும்*
*சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. 9அதினாலே நாம்*
*பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி*
*உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். 10துதித்தலும்*
*சபித்தலும் ஒரேவாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே,*
*இப்படியிருக்கலாகாது. 11ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும்*

________________________________________________________________

________________________________________________________________

*கசப்புமான தண்ணீர் சுரக்குமா? [12]என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.*

இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய யாக்கோபு, நாவைக்குறித்து அற்புதமான கண்ணோட்டத்தை நமக்கு கொடுத்திருக்கிறார்.

நாவில் நம்பமுடியாத அளவிற்கு "உள்ளார்ந்த சக்தி" (intrinsic power) உள்ளது.

***நீதிமொழிகள் 18:21**, மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.*

***நீதிமொழிகள் 28:23**, தன் நாவினால் முகஸ்துதி பேசுகிறவனைப்பார்க்கிலும், கடிந்துகொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான்.*

இயேசு நாவை நம் இதயத்துடன் இணைத்தார்.

***மத்தேயு 15:18**, "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்."*

வேதாகமம் நம் வாயையும், நாவையும் பயன்படுத்துவதைக் குறித்து அதிக முக்கியத்துவம் செலுத்துகிறது. நம் நாவை, தேவனை மகிமைப்படுத்தவும் பயன்படுத்த முடியும், அந்த மகிமையை குலைத்துப்போடவும் பயன்படுத்த முடியும்.

தேவன் நமக்கு நாவையும், பிறரிடம் தொடர்புகொள்ளும் திறனையும் சேர்த்து கொடுத்திருக்கிறார்!

நீங்கள் உங்கள் நாவின் நல்ல உக்கிராணக்காரரா?

## நாவும் ஆவிக்குரிய வாழ்வும்

### *நாவு உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை வெளிப்படுத்துகிறது - Tongue reveals about your spiritual life*

ஒரு மருத்துவரிடம் செல்லும் போது, அவர் வாயைத் திறந்து நாவை காண்பிக்கச் சொல்கிறார்!

______________________________________________________________________

______________________________________________________________________

***யாக்கோபு 1:26**, உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.*

பெருமையுள்ளவர்களையும், சுய நீதியுள்ளவர்களையும், பக்தியுள்ள ஆன்மீக வாதியையும் அவர்கள் பேசும் வார்த்தைகளால் அறியலாம்.



இயேசு கிறிஸ்து இதை குறித்து கூறியுள்ளார்.

***மத்தேயு 12:33-34**, [33] "மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும். [34] விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்."*

உங்கள் மனதில் உள்ளதை காலப்போக்கில் உங்கள் நாவு வெளிப்படுத்திவிடும்.

நாவு கண்ணாடியை போன்றது. ஒருவர் பேசுவதை கவனிக்கும்போது, அவர் எப்படிப்பட்டவர் என்று அறிந்துகொள்ளலாம்.

பலருக்கு நான் கவுன்சிலிங் *(counselling)* கொடுக்கும்போது, அவர்கள் சொல்லுகிற காரியம், "நான் டென்ஷன் *(pressure)* ஆகும்போது அல்லது மன அழுத்தத்தில் *(stress)* இருக்கும்போது கோபப்பட்டு விடுகிறேன்" என்று கூறுவார்கள். நான் இந்த கருத்தோடு உடன்படுவதில்லை. ஏனெனில், இது

______________________________________________________________

______________________________________________________________

டென்ஷன் அல்லது மன அழுத்தம் அல்ல, உங்கள் உள்ளத்தில் உள்ளதே வெளியே வரும்.

மேலே கூறப்பட்டுள்ள வசனங்களை நாம் பார்க்கும்போது, இந்த நாவை கச்சிதமாக பயன்படுத்துவதை பற்றி இந்த வசனங்கள் கூறவில்லை. மாறாக, நாவை எப்படி திறமையாக நிர்வகிக்க முடியும் என்றே நமக்கு கூறுகின்றன *(it's not mentioning about perfection but it's about how to manage it).*

உங்களால் உங்கள் நாவை கட்டுக்குள் வைக்க முடியவில்லை எனில், வழக்கம்போல நீங்கள் விரும்பி செய்யும் கீழ்க்கண்ட காரியங்கள் அர்த்தமற்றதாக போய்விடும்:

- தவறாமல் சபைக்கு வருதல்
- வேத வசனத்தில் சிறந்த அறிவு,
- மலைகளை பெயர்க்கும் ஜெபம்
- தாராளமாக கொடுத்தல்

போன்ற அனைத்தும் அர்த்தமற்றதாகி, உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதைப்போல ஆகிவிடும்.

**நீதிமொழிகள்** 27:17, இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்.

ஒருவரை பிரயோஜனம் உண்டாக கூர்மைப்படுத்தவும் முடியும், பிரயோஜனமற்ற வழியில் கூர்மைப்படுத்தவும் முடியும். *You can either sharpen to be positive or negative.* சமீபத்தில் எங்கள் சபையில் பிளவுஸ் தைக்கும் ஒரு சகோதரி, பிளவுஸ் துணியை வெட்டும்போது சேலையின் ஓரத்தையும் சேர்த்து வெட்டிவிட்டார்கள். அந்த கத்திரிகோல் தான் வெட்டியது! ஆனால் அதற்கு இது சேலையின் ஓரமா அல்லது பிளவுஸ் துணியா என்பது தெரியாது.

அதுபோல நம்முடைய வார்த்தைகளால், ஒருவரை பிரயோஜனம் உண்டாகவும் கூர்மைப்படுத்த முடியும், பிரயோஜனமற்ற வழியிலும் கூர்மைப்படுத்தமுடியும்

*Your words you can sharpen someone positively or negatively.*

ஒரு நண்பன் உற்சாகப்படுத்தி ஒருவரை தேவனை பின்தொடரச் செய்யவும் முடியும் அல்லது தேவனை விட்டு பிரித்து விடவும் முடியும். ஒருவருடைய வளர்ச்சிக்கு துணையாகவோ அல்லது தடையாகவோ மாறலாம். *Your friends*

________________________________________________________________

________________________________________________________________

*also can either encourage you or discourage you to following God. Either it could be helpful to grow or hinder your growth.*

## அழிவுக்கு நாவை பயன்படுத்துதல் - *Using your tongue for destruction.*

**யாக்கோபு** ***3:9-10***, [9]அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். [10]துதித்தலும் சபித்தலும் ஒரேவாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

நம் நாவை எவ்வாறு எதிர்மறையான / பிரயோஜனமற்ற நோக்கத்திற்கு பயன்படுத்த முடியும்?

### கிசு கிசு - *Gossip*



கிசு கிசு என்றால் என்ன?

ஒரு பிரச்சனையை பற்றி, அந்த பிரச்சனையின் பகுதியாகவோ அல்லது அதன் தீர்வின் பகுதியாகவோ இல்லாத ஒருவரிடம் அந்த பிரச்சனையைப் பற்றி பேசுவது. *Speaking to someone about an issue of which they are neither part of the problem nor a part of the solution.*

________________________________________________________________

________________________________________________________________

ஒருவருடைய முகத்துக்கு முன் கூற முடியாத விஷயங்களை, அவரின் முதுகிற்கு பின்னால் கூறுவது.

ஒருவருடன் பிரச்சனை ஏற்படும்போது, பிரச்சனை உள்ள அவரிடம் முதலில் பேசாமல் மற்றவரிடம் பேசுவது.

***நீதிமொழிகள் 18:8,*** *கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுபோலிருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்.*

கிசு கிசு பொதுவாக நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சம்பாஷனைகளுக்கு பின்னால்தான் ஒளிந்து கொண்டிருக்கும். உதாரணமாக.

- நீங்க கேள்விப்பட்டீங்களா?
- உங்களுக்குத் தெரியுமா?
- நான் நம்பல... ஆனா கேள்விப்பட்டேன்...
- நீங்க யார்ட்டையும் சொல்லமாட்டீங்க-னு தான் உங்ககிட்ட மட்டும் சொல்றேன்.
- நீங்க என்கூட சேர்ந்து ஜெபம் பண்ணுவீங்க-னு உங்ககிட்ட சொல்றேன்...

கிசு கிசுக்களை புறம்பே தள்ளுவது தேவ ஊழியரின் (*deacon*) கடமைகளில் ஒன்றாகும் (அபோஸ்தலர் 6).

### விமர்சனம் - *Criticism*

மற்றவர்களிடம் உள்ள தவறை கண்டறிவது மிகவும் சுலபம். அதில் நாம் அனைவரும் கைதேர்ந்தவர்கள்.

நாம் கெட்டவர்கள் என்பதை மறைக்கவே மற்றவர்களின் பலவீனங்களை பெரிதாக சொல்வது நமக்கு மிகவும் பிடித்த காரியமாகும்.

நம்முடைய விமர்சனங்கள் அனைத்தும் பெரும்பாலும் "நான் நல்லவன்" என்று சுயநீதியை (*self-righteous*) வெளிப்படுத்தும்; இல்லாவிட்டால் "அவர் தப்பு" என்று நியாயந்தீர்ப்பதாக இருக்கும். இதை மீறி ஒன்றுமிருக்காது.

***யாக்கோபு 4:11,*** *சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக்*

__________________________________________________________________

__________________________________________________________________

*குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்.*

*Never pull each other to pieces, my brothers. If you do you are judging your brother and setting yourself up in the place of God's Law; you have become in fact a critic of the Law. Yet if you start to criticise the Law instead of obeying it you are setting yourself up as judge, and there is only one judge, the one who gave the Law, to whom belongs absolute power of life and death. How can you then be so silly as to imagine that you are your neighbour's judge? (PHILIPS)*

நீங்கள் பேசுவது பொய் அல்ல, உண்மையைத்தான் பேசுகிறீர்கள். ஆனாலும், மற்றவர்களை பற்றி பேசும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும்.

***மத்தேயு 12:34***, *விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.*

பல விசுவாசிகள் தாங்கள் உண்மையைத்தான் பேசுகிறோம் என்று சொல்லி பிறருடைய மரியாதையை குலைத்து விடுவார்கள்.

பிறருக்கு சொந்தமான பணத்தையோ பொருளையோ நீங்கள் எடுத்திருந்தால், அதை திருப்பி கொடுக்க முடியும். ஆனால் ஒருவரின் மதிப்பை உங்களால் எப்போதுமே திருப்பி கொடுக்க முடியாது.

### முனுமுனுப்பு & நன்றி உணர்வில்லாதவர்கள் - Murmuring & Unthankful

முனுமுனுப்பும் நன்றி உணர்வு இல்லாமையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

***1 கொரிந்தியர் 10:1-6 & 10-11***, *[1]இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். [2]எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். [3]எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். [4]எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. [5]அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள்*

________________________________________________________________

________________________________________________________________

அழிக்கப்பட்டார்கள். [6]அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.

[10]அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். [11]இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.

எகிப்து தேசத்தில் இருந்து வெளியே வந்த இஸ்ரவேலர்களும் ஆவிக்குரிய உணவு நம்மைப்போலவே ஆவிக்குரிய உணவையும், தண்ணீரையும் கன்மலையிலிருந்து பெற்றுக்கொண்டனர். அந்த கன்மலை வேறு யாரும் இல்லை, கிறிஸ்துவே. அப்படியிருந்தும் அவர்கள் முறுமுறுத்து வனாந்திரத்தில் அழிந்தனர்.

புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழும் நாம், அவர்களை போல வாழக் கூடாது என்று வேதத்தால் தெளிவாக எச்சரிக்கப்பட்டுள்ளோம், நாமும் அப்படியே செய்தோமென்றால், நாமும் அழிக்கப்படுவோம்.

---

*நாம் ஏன் ஏதாவது சொல்லி முறுமுறுக்கிறோம்?*
*Why we complain and murmur?*

*ஏனென்றால், நாம் நன்றி உணர்வில்லாதவர்களாக இருப்பதால்.*
*Because we are unthankful.*

---

இப்போது எதற்க்கெல்லாம் நாம் தேவனுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என சிந்திப்போமா?

- இரட்சிப்பு - *Salvation,*
- நித்திய வாழ்வு - *Eternal life,*
- இரக்கம் - *Mercy,*
- கிருபை - *Grace,*
- வாழ்வு - *Life,*
- உடல் நலம் - *Health,*
- உணவு - *Food,*

________________________________________________________________

________________________________________________________________

- உடை - *Clothing*
- பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும்.....

***1 தீமோத்தேயு 6:8**, உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.*

***யாக்கோபு 3:6**, நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது.*

*We all make mistakes in all kinds of ways, but the man who can claim that he never says the wrong thing can consider himself perfect, for if he can control his tongue he can control every other part of his personality. (PHILIPS)*

## ஒழுக்கமான நாவை பெறுவது எப்படி?

## *How to have a Disciplined Tongue*

***யாக்கோபு 3:10**, துதித்தலும் சபித்தலும் ஒரேவாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.*

***James 3:10**, We use the tongue to bless our Father, God, and we use the same tongue to curse our fellow-men, who are all created in God's likeness. Blessing and curses come out of the same mouth—surely, my brothers, this is the sort of thing that never ought to happen! (PHILIPS)*

ஒழுக்கமான நாவு வேண்டுமெனில், முதலில் உங்களிடம் கட்டுப்படுத்த முடியாத நாவு உள்ளது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். இது தான் இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கான முதல் படியாகும்.

***1 யோவான் 1:9**, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

பாவத்தை அறிக்கையிட்டு விட்டுவிடுங்கள்.

______________________________________________________________

______________________________________________________________

## ***நற்செய்தியை பிரசங்கிக்கும் உக்கிராணத்துவம் - Stewardship of Preaching the Gospel.***

***ரோமர் 10:14-15,*** *[14]அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? [15]அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.*

தேவன் நமக்கு ஏன் வாயை தந்துள்ளார் என்ற காரணத்தில் கவனம் செலுத்தினோம் என்றால், நாவை தவறாகப் பயன்படுத்தி வீணாக்க மாட்டோம்.

உங்களுடைய கவனத்தை நீங்கள் திருப்ப வேண்டும். நற்செய்தியை பிரசிங்கிப்பதற்கே உங்களுக்கு நாவு கொடுக்கப்பட்டுள்ளது.

***2 கொரிந்தியர் 5:15,*** *பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.*

---

*நீங்கள் உங்களுக்காக வாழ முடியாது.*
*தேவனுக்காகவே உங்கள் வாழ்க்கையை வாழ வேண்டும்.*

---

*You can NOT live for yourself. Your life got to be lived for God*

***2 கொரிந்தியர் 5:20,*** *ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்..*

கிறிஸ்துவின் தூதர்களாக நற்சிய்தியை அறிவிக்கும் பெரிய பொறுப்பும் உரிமையும் *(privilege)* நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவன் நமக்கு ஜனங்கள் மீது மனதுருகும் இருதயத்தை அருள்வாராக, அப்பொழுது, கிறிஸ்துவை போல் ஜனங்களுக்கு இரங்குவோம்.

__________________________________________________________________

__________________________________________________________________

***மத்தேயு 9:36,*** *அவர், திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி.*

## ஆறுதல் செய்யும் உக்கிராணத்துவம் - *Stewardship to comfort*

***2 கொரிந்தியர் 7:5-7,*** *[5]எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன. [6]ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார். [7]அவன் வந்ததினாலேமாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்திவைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதினாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.*

***2 கொரிந்தியர் 1:3-4,*** *[3]நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். [4]தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.*

*பிரச்சனையிலும் இக்கட்டுகளிலும் உள்ளவர்களுக்கு நாம் ஆறுதல் அளிப்பவர்களாக இருக்க வேண்டும். தேவன் உங்களுக்காக செய்தவற்றிற்காக நன்றி செலுத்தும்போது தான், பிறருடைய கஷ்டங்களில் நல்ல உக்கிராணக்காரனாக ஆறுதல் கூறும் மனப்பாங்கு வரும்.*

*சோதனை நேரங்களில் நீங்கள் அவர்களுக்கு ஜெபிக்கிறீர்கள் என்று அவர்களுக்கு சொல்லுவதன் மூலம் அவர்கள் ஆறுதல் பெறலாம்.*

*கடைசியாக எப்போது உங்களால் சிரமப்படுகிறவர்களுக்கு ஆறுதலளிக்க முடிந்தது?*

________________________________________________________________

________________________________________________________________

### ஆராதனையில் உக்கிராணத்துவம் - *Stewardship to worship*

***ஓசியா 14:1-2***, [1]இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். [2]வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்.

உங்கள் உதடுகளின் ஸ்தோத்திர பலிகளை தேவனுக்கு செலுத்துங்கள்!

அவர் நிமித்தமும், அவர் செய்தவற்றின் நிமித்தமும் ஸ்தோத்திர பலி செலுத்துங்கள்!

***எபிரேயர் 13:15***, ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

நன்றியுணர்வும் வழிபாடும் எவ்வாறு நம் உதடுகளோடு இணைக்கப்-பட்டுள்ளன என்பதை உங்களால் காண முடிகிறதா?

இதையே யாக்கோபும் வெளிப்படுத்துகிறார், "துதித்தலும் பழித்தலும் ஒரே வாயில் இருந்துதான் வருகின்றன". இந்த விஷயங்கள் இருக்கக்கூடாது!

### முடிவுரை

உங்கள் வாழ்க்கையிலிருந்து நீங்கள் விட வேண்டிய விஷயங்கள் என்னென்ன? *What are the things you need to get rid off in your life?*

***நீதிமொழிகள் 21:23***, தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.

அதை காத்துக்கொள்ளுங்கள்!

இயேசு கிறிஸ்துவும் இதை குறித்து எச்சரித்தார்.

***மத்தேயு 12:36-37***, [36]மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். [37]ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

1. **நன்றியுணர்வோடு அவரை எப்போதும் துதியுங்கள்**
   ***Be thankful and praise Him always***

______________________________________________________________

______________________________________________________________

எபிரேயர் *13:15*ல் பார்த்ததுபோல நன்றியுணர்வோடு அவரது துதி உமது உதடுகளின்மேல் எப்போதும் இருப்பதாக.

2. **தேவன் உங்களுக்கு பகுத்தறிதலை கொடுப்பாராக**

   ***God give you the discernment***

***சங்கீதம் 19:14***, *என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.*

இதுவே தினமும் உங்கள் ஜெபமாக இருக்கட்டும்!

3. **உங்கள் நாவினை தவறாக பயன்படுத்தியதற்காக மன்னிப்பு கேளுங்கள்**

   ***Ask for forgiveness for all wrong use of your tongue***

***யாக்கோபு 3:2***, *நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.*

உங்கள் நாவினை கட்டுப்படுத்துவதன் மூலம், நீங்கள் ஒரு முழுமையான மனிதனாக முன்னேறிச்செல்ல முடியும்!

4. **உற்சாகப்படுத்தும் வார்த்தைகளை பேச பழகுங்கள்**

   ***Practice to bring encouraging words***

***எபேசியர் 4:29***, *கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.*

____________________________________________________________

____________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## *13. இணைக்கப்படு & ஐக்கியப்படு - காலை தியானம் 03*

## *Connected & United*




*இந்த பொருள் உங்களுக்கு ஞாபகம் உள்ளதா?*

*இவர்களின் விளம்பரத்தின் மையம் “மக்களை இணைப்பது” (connecting people) என்பதுதான். ஆனால் இது மக்களை எப்படி துண்டித்துவிட்டது என்பது நமக்கு நன்றாக தெரியும்.*

*இந்நாட்களில் மக்கள் துண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40% மக்கள் தனிமையான வாழ்க்கை வாழ்கின்றனர் என்று ஆய்வு கூறுகிறது. இது மிகவும் ஆபத்தானது.*

*The research found that almost 10% of people aged 16 to 24 were "always or often" lonely - the highest proportion of any age group in the United Kingdom.*

*This was more than three times higher than people aged 65 and over. இது 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மக்களை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.*

***In USA, Health insurer Cigna** took a nationwide survey, and found that 54% of respondents said they feel like no one knows them well, NPR reports.*

*Additionally, 56% of people said the people they surround themselves around "are not necessarily with them," and approximately 40% said they "lack companionship," their "relationships aren't meaningful," and that they feel "isolated from others."*

*"Half of Americans view themselves as lonely,"* ***David Cordani****, chief executive of* ***Cigna****, said, according to NPR. "I can't help but be surprised".*

*ஜனவரி (January) 2018-ல், "உயிருக்கு ஆபத்தான தனிமையை" சமாளிக்க (lethal of Loneliness) இங்கிலாந்தில் ஒரு புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டது.*

இந்த காலை வேளையில் நீங்கள் தேவனோடு எந்த அளவுக்கு தொடர்போடும் ஐக்கியத்தோடும் இருக்கிறீர்கள் என்று பார்ப்போம்.

இயேசு *5,000* பேருக்கு உணவளித்து, முழு நாளும் அவர்களுக்கு போதிக்கிறார். அதன் பிறகு தம்முடைய சீஷர்களுடன் தனியாக இருக்க வேண்டும் என கருதி அவர் கலிலேயா கடலை கடக்கிறார். ஆனால் அப்பத்தை சாப்பிட்ட மக்கள் அவர் படகின் அருகில் செல்வதற்கு முன்னரே அக்கறைக்கு ஓடிச் சென்றனர்.

***யோவான் 6:26-29****,* [26] *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்களென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.* [27] *அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.* [28] *அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.* [29] *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்."*

யோவான் சுவிசேஷம் முழுவதிலும், இயேசு தேவனின் கிரியைகளை குறித்து பேசினார். பெரும்பாலான நேரத்தில், அது அற்புதங்களையும் அடையாளங்களையும் பிரதிபலித்து. ஆனால் இங்கு தேவன் மேல் விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய கிரியை என்ற மற்றொரு பரிணாமத்தை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

__________________________________________________________________

__________________________________________________________________

கடந்த மூன்று நாட்களாக நல்ல உக்கிராணக்காரனாக இருப்பதை குறித்து தியானித்து வருகிறோம். *You should not end up thinking that it's the performance which is going to be measured or that is the yardstick in which God is going to measure.*

தேவன் நமக்கு 'பூமியில் பரலோகத்தை' வெளிப்படுத்தியுள்ளார் *('Heaven on Earth').* ***மத்தேயு 6:10**, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.*

அவரைப் பார்க்கிலும் பெரிய காரியங்களை செய்வோம் என்று இயேசு கூறினார்!

***யோவான் 14:12**, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிறகிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.*

*A high-resistance **connection** (HRC) is a problem that results from **loose** or poor **connections** in traditional electrical accessories and switchgear which can **cause heat** to develop, capable of starting a fire.*

*Though it's true that there will be a reckoning of the things what the Lord had entrusted you with, but it is be fulfilled accruing to His terms.*

***மத்தேயு 7:21-23**, [21] "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. [22] அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். [23] அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்!'*

________________________________________________________________

________________________________________________________________

*Knowing God by you one thing!*
*Known by God is another thing.*

*நீங்கள் தேவனை அறிந்து கொள்வது என்பது ஒரு விஷயம்!*
*தேவன் உங்களை அறிந்து கொள்வது என்பது மற்றொரு விஷயம்.*

இயேசு இரண்டு வெவ்வேறு வகையான பிரிவுகளுடன் பேசுகிறார்.

1. தேவனின் விருப்பத்தை செய்யாதவர்கள் - *Those who don't do the will of God*
2. தேவனுடன் எந்த உறவும் இல்லாமல் அவருடைய விருப்பத்தை செய்கிறவர்கள் - *Those who do the will of God without any relationship with Him.*

*வ 21,* இந்த பிரிவை சேர்ந்தவர்கள், *"கர்த்தாவே! கர்த்தாவே"* என கூறினாலும், அவர்களுடைய வாழ்க்கையின் ஆண்டவராய் அவர் இருக்கவில்லை.

தேவனுடைய சித்தத்தைச் செய்வதுதான் தேவனுடைய கிரியைகளை நடப்பித்தல் என்று இயேசு வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் சென்று அவரை குறித்து பிரசங்கிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து தெளிவாக கட்டளையிட்டுள்ளார். அப்படி பிரசங்கிக்கும்போது, தேவன் தம்முடைய கிரியைகளால் தம்முடைய வார்த்தைகளை உறுதிப்படுத்துவார். ஆனால் இந்த பிரிவினர் இப்படிப்பட்ட எந்த வேலையும் செய்யவில்லை.


*வ22,* இவர்கள் மிகவும் நன்மையான கிரியைகளை செய்து, தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தினார்கள்.

இந்த இரண்டாவது பிரிவை சேர்ந்தவர்கள், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டதைச் செய்தார்கள், ஆனால் கர்த்தருடன் எந்த உறவும் அவர்களுக்கு இல்லை.

*வ23,* தேவன் *"நான் உன்னை அறிந்திருக்கவில்லை"* என்ற மிகவும் ஆபத்தான அறிக்கையை கூறினார்.

________________________________________________________________

________________________________________________________________




இயேசு கிறிஸ்துவும் சமாரிய ஸ்திரீயும், பிதாவை ஆராதிப்பது பற்றி மிகவும் சுவாரசியமாக உரையாடினர்.

நாம் கடைசி இரண்டு வசனங்களை நன்கு அறிந்திருக்கிறோம், ஆனால் நடந்த முழு உரையாடலையும் படிப்போம்.

***யோவான் 4:21-24***, *[21] அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு.*
*நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத்*
*தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. [22] நீங்கள் அறியாததைத்*
*தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத்*
*தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய்*
*வருகிறது. [23] உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை*
*ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது*
*இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள்*
*இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். [24] தேவன்*
*ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும்*
*உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்"*

ஆராதித்தல் என்றால் என்னவென்று உனக்குத் தெரியாது ஆனால் நாங்கள் அறிவோம்.

ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும்!

________________________________________________________________

________________________________________________________________

உண்மை என்பது, உங்கள் இருதயத்தில் இருப்பதை தேவனிடமிருந்து மறைக்காமல். அவருக்கு முன் முழுவதுமாக வெளிப்படுத்துவதாகும்.

உங்கள் இருதயத்தில் தனிப்பட்ட இடமென்று ஒன்றும் இல்லை!

---

*Openness and honesty with God gives the invitation for Him to come to you. Then He engages with you.*

---

இதைப் புரிந்துகொள்வதற்கு எளிமையான முறையில் நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். ஆஸ்திரேலியாவில் எனது சமீபத்திய பயணத்தில், என் வாழ்நாளில் நான் இதுவரை பார்த்திராத ஒரு சிலர் இருந்தார்கள். ஆனால் என்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். நாங்கள் எப்போது ஊழியத்தை ஆரம்பித்தோம், என் மனைவி, குழந்தைகளின் பெயர்கள், நான் பகிர்ந்துகொள்ளும் செய்திகளிலிருந்து பல விவரங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அவர்கள் தங்கள் குடும்பத்தை பற்றி என்னிடம் கூறி நான் அவர்களை அறிந்துகொள்ள நேரம் எடுத்துக்கொள்ளும் வரைக்கும் அவர்களை எனக்கு தெரியாது.

நாம் பிறப்பதற்கு முன்பே அவர் நம்மை அறிந்திருக்கிறார் என்ற இன்னொரு விஷயத்தையும் நம் வேதாகாமம் கூறுகிறது.

***சங்கீதம் 139:16***, *என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.*

***ஏசாயா 49:16***, *இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.*

***மத்தேயு 10:30***, *உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.*

தேவன் உங்களைப் பற்றி அறிந்த விவரங்களின் அளவை பற்றி கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் அப்படியிருந்தாலும் அவர் வலுகட்டாயமாக உங்கள் இருதயத்துக்குள் நுழைய மாட்டார்.

நீங்கள் அவரை உள்ளே வரும்படி அழைத்து உங்கள் வாழ்க்கையின் அதிகாரத்தை அவரிடம் கொடுக்கும்வரை அவர் எதையும் செய்ய மாட்டார்.

________________________________________________________________

________________________________________________________________

அவரை அழைப்பதும் வெளிப்படையாக அவரிடம் இருப்பதும்தான் இந்த உறவின் அஸ்திபாரம்.

அவருடைய திட்டத்தை தவிர்த்து உங்களுக்கென சொந்த திட்டத்தை உருவாக்கி வைத்திருந்தீர்கள் என்றால், என்றால் நீங்கள் ஒரு இரகசியமான இடத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் என்று அர்த்தம். அங்கு தேவன் வரப்போவதில்லை மாறாக நீங்களும் அந்த பகுதியை தேவனிடம் அம்பலப்படுத்தப் போவதில்லை.

ஆராதனையில் பல அம்சங்கள் உள்ளன. இதனை பல முறை நம் ஊழியத்தில் கூறியும் பின்பற்றியும் உள்ளோம். ஆனால் ஆராதனையின் ஒரு பகுதி என்னவெனில் உங்களை முழுவதுமாக வெளிப்படுத்துவது. உங்கள் வாழ்க்கையில் தேவனிடம் வெளிக்காட்டாத பகுதி என்று எதுவும் இருக்கக்கூடாது.

உங்கள் இருதயத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடன் நெருக்கமான தொடர்பை வைத்துகொண்டு. எல்லா எண்ணங்களையும் தேவனிடத்தில் அளவிட வேண்டும். *Having a seamless connection with God in every part of your heart and every attitude should be measured with God.*

நாம் தேவனோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் இருக்கும்போது, அவர் உங்களுடன் இணைகிறார்!

## ஐக்கியமாகுதல் - *Being United*

வேத வசனங்களில் தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவை விவரிக்க இரண்டு உவமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஓநாயும் ஆடும்

### திராட்சச் செடியும் கொடியும்

***யோவான் 10:3-4***, *[3]வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான். [4]அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.*

***யோவான் 10:14***, *நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,*

________________________________________________________________

________________________________________________________________

*நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.*

*விலங்குகளில் மந்தமான (dumbest) விலங்கு செம்மறியாடாகும். அவை முட்டாள்தனமானவை. ஒரே ஒரு விஷயத்தை எப்படிச் செய்வது என்று மட்டுமே அவைகளுக்கு தெரியும், புல்லை மேய (அதோடு புல்லை சாப்பிடும் செம்மறியாடுகளை உருவாக்க) தெரியும்.*

*கற்றுக்கொள்வதில் செம்மறியாடு மிகவும் மந்தமானவை. செம்மறி ஆடுகளுக்கு ஒரு பாடம் கற்றுக்கொடுப்பது எப்படிப்பட்ட வேதனையான காரியம் என்பதற்கு எண்ணற்ற கதைகளை ஒவ்வொரு மேய்ப்பரும் சொல்வார்கள். ஆனாலும் அந்த வேதனையான பாடத்தை கற்றுக்கொள்ள அவைகள் தவறிவிடுகிறது. அவைகள் ஒரு வேலிக்குள்ளே உடைத்துக் கொண்டு போக முயற்சிக்கும் போது அந்த வேலியில் உள்ள முட்கம்பிகளில் அவை அகப்பட்டுக்கொள்ள கூடும். அடுத்த நாள் அது மீண்டும் மீண்டும் அதே காரியத்தை முயற்சிக்கும்.*

*செம்மறியாடு மிகவும் விகாரமானது. மேலும் அதற்கு சுறுசுறுப்பும் (agility) இல்லை கண்ணியமும் (dignity) இல்லை.*

*செம்மறியாடு எப்போதும் எதாவது வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருக்கும். எப்போதாவது ஒரு ஆட்டுக்குட்டி அதன் தாயை உறிஞ்சுவதை பார்த்துள்ளீர்களா? கிட்டத்தட்ட அவை பிறந்த உடனே, வன்முறையாக தன் தாயின் மடியிலிருந்து உறிஞ்சும். அதிலிருந்து, நாளுக்கு நாள் இரவுக்கு பின் இரவு, புல், புல் இன்னும் புல் என்ற அவைகளின் தேவை குறைவதில்லை.*

*செம்மறியாடு பிடிவாதமானது, அது ஒரு யானையை நகர்த்த முயற்சிப்பது போல.*

*Sheep are stubborn, it's like trying to move an elephant. Ever watched a shepherd try to manoeuvre a sheep into a fold or a dip-tank.*

*Sheep are straying perhaps the main reason Scripture chooses sheep to characterize us, more than any other animal, is because of its well-deserved reputation for straying and getting lost.*

*சில விலங்குகள் எந்த மேற்பார்வையும் இல்லாமல் சுயமாய் சமாளிக்க முடியும். செம்மறி ஆடால் அப்படி சுயமாய் சமாளிக்க முடியாது. அவை தம் மேய்ப்பனை மிகவும் சார்ந்து இருக்கும். மேய்ப்பன் இல்லாமல்*

________________________________________________________________

________________________________________________________________

அவைகளால் வாழ முடியாது. *Sheep are dependent Some animals can cope and thrive without any close supervision. Not sheep. They are very dependent on their shepherd. They cannot live without him.*

## திராட்சச் செடியும் கொடியும் - *Wine and Branches*

இன்று பல தவறான போதகர்கள் கிறிஸ்துவே திராட்சச் செடி என்றும், பல்வேறு மனிதர்களால் உருவாக்கப்பட்ட சபைகள் அல்லது சபைகளுள் காணப்படும் பிரிவுகளே *(denominations)* திராட்சச் செடியின் கொடிகள் எனவும் சொல்கிறார்கள்.

*They say, "One branch is the Baptist Church, another the Lutheran, another the Roman Catholic, another the Seventh Day Adventist, etc."*

*Jesus did not say, "I am the vine, and denominations are the branches!" He said, "I am the vine and you are the branches." Disciples of Christ are the branches in the vine. If you are a Christian, you are a branch in Christ.*

இயேசு, "நானே திராட்சச்செடி, சபைகளுள் காணப்படும் பிரிவுகளே *(denominations)* அந்த கொடிகள்!" என கூறவில்லை. மாறாக அவர், "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" என கூறினார். கிறிஸ்துவின் சீஷர்களே அந்த திராட்சச் செடியின் கொடிகள். நீங்கள் கிறிஸ்தவர்கள் என்றால், நீங்கள் தான் இயேசுவில் உள்ள கொடி.

ஒரு தக்காளி செடியிலிருந்து சோளம், கருணை கிழங்கு, பீன்ஸ், மற்றும் முட்டைக்கோஸ் உற்பத்தியாகுமா?

அது சாத்தியமில்லை.

தக்காளி செடியால் தக்காளியை தான் உற்பத்தி செய்ய முடியும்.

உண்மையான திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவால் கிறிஸ்தவர்களை மட்டுமே உருவாக்க முடியும். லூத்தரன்கள் *(Lutherans)*, அவரால் பாப்டிஸ்டுகள் *(Baptists)*, யெகோவாவின் சாட்சிகள் *(Jehovah's Witnesses)*, பெந்தெகோஸ்தேக்கள் *(Pentecostals)* போன்றவர்களை உருவாக்க முடியாது,

**யோவான் 15:5-8**, 5 "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன்
என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக்
கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.
6 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட
கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;

_______________________________________________

_______________________________________________

*அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். [7]நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். [8]நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.*

இந்த கிளைகளுக்கு அந்த செடியே உயிர் ஆதாரமாக உள்ளது, மேலும் அந்த கொடிகள் வாழவும் கனிகொடுக்கவும் அச்செடியில் நிலைத்திருக்க வேண்டும்.

இயேசுவே அந்த திராட்சைச்செடி, மேலும் ஜனங்களே அந்த கிளைகள். கனிகொடுக்கும் கிளைகள் கிறிஸ்தவர்களை குறிக்கிறது என்பது வெளிப்படையாக தெரிந்த ஒன்று. மலட்டு கிளைகள் ஆவிக்குரிய கனிகொடுக்காத கிறிஸ்தவர்கள் என்பதையும் எளிதில் அடையாளம் காணலாம்.

உண்மையிலேயே கொடியுடன் இணைக்கப்பட்ட ஒரு கிளை பாதுகாப்பானது, அது என்றும் நீக்கப்படுவதில்லை.

ஆனால் இணைக்கப்பட்டதாக தோன்றுகிறவையும், மேலோட்டமாக இணைக்கப்பட்டவையே நீக்கப்படும்.

இயேசு இந்த திராட்சைச்செடி உவமையை பல காரணங்களுக்காக தேர்ந்தெடுத்தார். பணிவான இந்த திராட்சைச்செடி அவருடைய தாழ்மையை காட்டுகிறது.

இது திராட்சச்செடி மற்றும் கிளைகள் இடையே ஒரு நெருக்கமான, நிரந்தர ஐக்கியத்தை படம்பிடித்து காட்டுகிறது. இது ஐக்கியத்தின் அடையாளமாகும், ஏனெனில் கிளைகள் முற்றிலும் திராட்சச்செடிக்குச் சொந்தமானது.

கிளைகள் வாழ்ந்து கனி கொடுக்கவேண்டுமெனில், அவை ஊட்டச்சத்துக்கும், ஆதரவுக்கும், வலிமைக்கும் திராட்சச்செடியை முழுவதுமாக சார்ந்து இருக்க வேண்டும்.

கிளையானது திராட்சச்செடியுடன் இணைக்கப்பட்டும் ஐக்கியப்பட்டும் இருக்கும் வரை, அவற்றிற்கு கனி தருவதில் எந்தப் போராட்டமும் இருக்காது.

*நீங்கள் அவருள் நிலைத்திருப்பீர்களா?*

_______________________________________________________________

_______________________________________________________________



*நீங்கள்* ***அவருடன்*** *எப்பொழுதும் இணைந்திருக்கிறீர்களா?*

___________________________________________________________________

___________________________________________________________________

## *14. இரண்டாம் வருகையை எதிர்நோக்கி வாழ்தல்*

### *பத்து கன்னிகைகளின் உவமை - மத்தேயு 25:1-12*

*மத்தேயு **24** மற்றும் **25** அதிகாரங்களில் உள்ள ஒலிவ மலை பிரசங்கமானது (Olivet Discourse) தேவனின் இரண்டாம் வருகையை குறித்த அவரது சொந்த பிரசங்கமாகும்.*

*இந்த குறிப்பிட்ட உவமை ஒரு எச்சரிக்கை உவமையாகும். இப்படிப்பட்ட பல உவமைகளை இயேசு இந்த பத்தியில் கூறியுள்ளார்.*

*இதற்குமுன் இயேசு தம்முடைய இரண்டாம் வருகைக்கான அடையாளங்களை குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த உவமையில் அவருடைய வருகைக்கு ஆயத்தமாக இருப்பதை பற்றி எச்சரித்துள்ளார்.*

*இயேசு எந்த சூழ்நிலையில் இந்த உவமையை கூறினார் என்பதை தெளிவுபடுத்திக்கொள்வதன் மூலம், இதை பற்றி நன்றாக புரிந்துகொள்ள முடியும்.*

***மத்தேயு** 24:3, பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்”*

*சீஷர்கள் இயேசுவிடம் மூன்று கேள்விகளை கேட்டனர். அதற்கு இயேசு இந்த உவமைகளின் மூலம் அவர்களுக்கு விளக்கமாக பதிலளித்தார்.*

*அவரது பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன,*

***மத்தேயு** 24:36, “அந்த நாளையும் அந்த நாழிகைகளையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.*

***மத்தேயு** 24:42, உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.*

***மத்தேயு** 24:44, நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.*

***மத்தேயு** 24:50, அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து,*

____________________________________________________________


____________________________________________________________

பரலோகத்தில் இருக்கும் தமது பிதாவைத் தவிர யாருக்கும் அந்த வேளையை பற்றி தெரியாது என நான்கு முறை இயேசு அவர்களுக்கு பதிலளித்துள்ளார்.

பிறகு இயேசு இந்த குறிப்பிட்ட உவமையை அவர்களுக்கு கூறி, இவ்வாறாக முடிக்கிறார்,

***மத்தேயு 25:13***, *“மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.*

திடீரென அல்லது எதிர்பாராத வேளையில் அவரது இரண்டாம் வருகை இருக்கும் என்பதால் நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதே இந்த உவமையின் நோக்கமாகும்.




***மத்தேயு 25:1-12***, *[1] “அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். [2] அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். [3] புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. [4] புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். [5] மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்கள்*

________________________________________________________________

________________________________________________________________

எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். [6]நடுராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. [7]அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். [8]புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். [9]புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். [10]அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. [11]பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். [12]அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.'

இவற்றை சொல்லி முடித்துவிட்டு இறுதியில், உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு வெகுமதியும் உண்மையில்லாத ஊழியக்காரனுக்கு தண்டனையும் கிடைக்கும் என முடிக்கிறார். இவற்றை கூறுவதன் மூலம், தமது வருகையின் நிச்சயத்தை அவர் உறுதிப்படுத்துகிறார்.

இயேசுவின் முதலாம் வருகையை குறித்து அநேக தீர்க்கதரிசிகள், அவர் எங்கே பிறப்பார், கன்னிகையின் வயிற்றில் பிறப்பார், தாவீதின் வம்சத்தில் பிறப்பார், கலிலேயாவை சேர்ந்தவர், வனாந்திரத்தில் இருந்து ஒரு சத்தம் அவருக்கு வழியை உண்டு பண்ணும் போன்ற தீர்க்கதரிசனங்களை உரைத்துள்ளனர். இவை எல்லாமே நிறைவேறியது. அப்படியிருந்தும், மேசியாவை காண்பதற்காகவே தங்கள் வாழ்க்கையை அற்ப்பணித்தவர்கள், அவர் வந்தபோது அவரை தவர விட்டதோடு நில்லாமல், அவரை சிலுவையிலும் அறைந்தனர்.

இயேசு தமது இரண்டாம் வருகையை பற்றி சிறிது நேரம் எடுத்து விளக்குகிறார். அவர் அவசரமாக எதிர்பாராத வேளையில் வரப்போகிறார். அனைவரும் அதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் அதை நீங்கள் தவர விட்டீர்கள் என்றால் இரண்டாம் வாய்ப்பு ஏதும் இல்லை!

அவர் பாவிகளை நியாயந்தீர்க்கவும் நீதிமான்களுக்கு பரிசளிக்கவும் வருகிறார்.

____________________________________________________________

____________________________________________________________

*யூதர்களின் கல்யாணத்தை பற்றிய கண்ணோட்டம் தான் உங்களுக்கு தேவைப்படுகிறது. இதை பற்றிய விளக்கமான பாடத்தை இயேசுவின் இரண்டாம் வருகையில் உள்ள இரண்டாம் பாடத்தில் கற்பித்துள்ளோம். நீங்கள் இதனை சரியாக புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இதைப்பற்றிய சுருக்கமான விளக்கத்தை நான் உங்களுக்கு கூறுகிறேன்.*

*முதலில் நிச்சயம் (engagement) நடைபெறும். இது தன் மகள் மற்றும் மகனை ஒருவருக்கொருவர் தரவிருக்கும் தந்தைகளுக்கு இடையே நடைபெறும் ஒரு அதிகாரபூர்வமான ஒப்பந்தம். அதனால், நிச்சயம் என்பது தந்தைகளுக்கிடையே நடைபெறும், மணமகன் மற்றும் மணமகளுக்கு இடையே அல்ல.*

*இரண்டாம் கட்டமாக நிச்சயதார்த்தம் (betrothal) நடைபெறும். இது தான் அதிகாரபூர்வமான சடங்காகும். இதில் ஜோடிகள் இருவரும், குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் ஒன்றுகூடி ஒரு உண்மையான விழா நடத்துவர்.*

*நிச்சயதார்த்தம் நடந்ததிலிருந்து அவர்கள் கணவன் மனைவி என அழைக்கப்படுவர். அவர்கள் நிச்சயதார்த்தம் நடந்ததிலிருந்து கணவன் மனைவி என அழைக்கப்படுவதால், அவர்கள் அந்த நிச்சயதார்த்தத்தை முறிக்க எண்ணினால் அவர்கள் அதிகாரபூர்வமாக இந்த திருமணத்திலிருந்து விவாகரத்து பெற வேண்டும்.*

*மூன்றாவதாக மணமகன் மணமகளை தன்னோடு தன்னுடைய இடத்தில் வாழ்வதற்கு அழைத்துச் செல்ல வருவார். அவர் தன்னுடைய குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பவனி வருவார். பொதுவாக இது நள்ளிரவில் நடைபெறும். மணமகள் தனது குடும்பம், தோழிகளுடன் இந்த திருமண விழாவில் பங்கேற்க காத்துக்கொண்டிருப்பாள்.*

*மணமகன் வந்து மணமகளை அவளுடைய தோழிகளுடன் தன்னுடன் அழைத்துச் செல்வார். மேலும் அவர்கள் விளக்குகளுடன் பாடல் மற்றும் மகிழ்ச்சிகரமான வேடிக்கை மற்றும் பெரும் உற்சாகத்துடன் இரவு கிராமத்தில் அணிவகுத்துச் செல்வர்!*

- *எல்லாமே மணமகளுக்காக தயாராக இருக்கிறது!*
- *மணமகன் நன்றாக வேலை செய்து வீட்டை கட்டி முடித்தார்!*
- *தந்தை அந்த வீடு தயார் என ஒப்புதல் கொடுத்துவிட்டார்!*
- *இப்போது மணமகன் தனது மனைவியோடு திருமணத்தில் இணைகின்றார்.*

__________________________________________________________________

__________________________________________________________________

அன்றிரவு அவர்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது, கிராமத்தில் உள்ள அனைத்து மக்களும் ஊர்வலத்திலும் கொண்டாட்டத்திலும் பங்குகொண்டனர். அந்த கிராமத்தில் இது ஒரு விழாவை போல ஏழு நாட்களுக்கு நிலைத்திருக்கும்.

இந்த உவமையில் விளக்கிற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தையை நீங்கள் அறிந்து கொள்வது மற்றொரு முக்கியமான விஷயம் ஆகும்.

***மத்தேயு 25:1***, *"அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்."*

இதற்கான கிரேக்க வார்த்தை 'லம்பாஸ்' ('lampas') ஆகும். இயேசு கெத்செமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்ட போது இதனை யோவான் 18:3இல் பயன்படுத்தியுள்ளனர். இது 'விளக்கு' என மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இயேசு மத்தேயு 5:14-15இல் விளக்கை பற்றி கூறியபோது, இதனை குறிக்க பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை 'போஸ்' (phos) ஆகும். இது புதிய ஏற்பாட்டில் 59 முறை வெளிச்சம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அந்நாளில் அவர்கள் பயன்படுத்திய விளக்கானது ஒரு நீளமான மரத்தினால் ஆன முனையில் சில துவாரத்துடன் அதனுள் சிறிய துணியை கொண்டதாக இருந்தது. எண்ணெயை அந்த துணியில் ஊற்றி அதனை எரிய வைப்பார்கள். பின்னர் அவர்கள் அதை பிரகாசிக்க துணிகளை ஒழுங்காக்குவர் (trim). இந்த விளக்கை ஏந்திச் செல்பவர்கள் சிறிய எண்ணெய் குடுவையையும் ஏந்திச் செல்வார்கள்.

இப்பொழுது நாம் இந்த உவமையை அதன் சூழ்நிலையில் காண்போம்.

**வ 1,** அவர்கள் பத்து பேரும் கன்னிகைகள்!

அவர்கள் வெறும் பத்து மணப்பெண் தோழிகள். மேலும் மணப்பெண் தோழிகள் கன்னிகைகளாக இருப்பது வழக்கம்.

யூதர்கள் 10 என்ற எண்ணில் மிகவும் கவரப்பட்டு இருந்தனர். எனவே இயேசுவும் அதே எண்ணை பயன்படுத்தினார்.

- பத்து கற்பனைகள்!
- பஸ்காவை சாப்பிட பத்து பேர்.
- பத்துபேர் சேர்த்தது தான் ஒரு ஆராதனை கூடம் (synagogue).

______________________________________________________________

______________________________________________________________

- திருமண ஆசீர்வாதம் கொடுக்க பத்துபேர்.
- பல யூத திருவிழாக்களில் 10 என்ற எண்ணை நீங்கள் காண்பீர்கள்.

இப்போதுள்ள திருமண நாள் விழாவை போல, மணப்பெண் தோழிகள் பூக்கள் அல்லது மெழுகுவர்த்திகள் போன்றவைற்றை எடுத்துச் சென்றனர். இந்த திருமண ஊர்வலத்தின் போது அவர்கள் விளக்கினை ஏந்திச் சென்றனர். மேலும் அவர்கள் மணமகன் வந்தபோது இரவை வெளிச்சமாக்கவும் சந்தோஷமாக இருக்கவும் அந்த விளக்குகளை ஊர்வலத்தின் போது எடுத்துச் சென்றனர்.

*யார் இந்த கன்னிகைகள்?*

*அவர்கள் அனைவரும், தாங்கள் கர்த்தராகிய இயேசுவை சேர்ந்தவர்கள் என அறிவிக்கும் கிறிஸ்தவர்கள்.*

*Let me take this little further, they are those who have gathered with the assembly of Christian people, who await for the Second Coming of the Lord.* நான் இதை இன்னும் விளக்கமாக கூற விரும்புகிறேன், இவர்கள் கிறிஸ்தவர்களோடு இணைந்து ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் மக்கள்.

இவர்கள் யாரெனில்:

- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்புபவர்கள், இறையியல் *(Theology) - They believe in the lord Jesus Christ, Theology*
- தேவனின் இரண்டாம் வருகைக்காக காத்துக்கொண்டிருப்பவர்கள் - *They wait for the second coming of the Lord, Eschatology*
- காலம் நெருங்கிக்கொண்டிருப்பதை அவர்கள் அறிவார்கள் - *They know that the time is drawing closer*
- அவர்கள் தேவனோடு இருக்க ஆயத்தமாக உள்ளனர் - *They are prepared to be with the Lord*
- அவர்கள் தங்கள் சொந்த திருமண ஆடையை வைத்துள்ளவர்கள் - *They have their own wedding garment*
- அவர்கள் தங்கள் விளக்கை வைத்துள்ளனர் - *They have their torch*

சுருக்கமாக சொன்னால் உங்களையும் என்னையும் போல உள்ளவர்கள்.

அவர்களுடைய விளக்கு கிறிஸ்துவின் விசுவாசத்தை குறிக்கிறது. மணமகன் வருகைக்காக அவர்கள் எதிர்நோக்கி காத்திருக்கும்போது வெளிப்படையான கிறிஸ்தவ அடையாளங்களை காண்பிக்கிறவர்கள்.

____________________________________________________________

____________________________________________________________

அதனால், இந்த பத்து கன்னிகைகளுக்கு இடையே வெளிப்படையாக எந்த ஒரு வித்தியாசங்களையும் நம்மால் கண்டறிய முடியாது. அவர்கள் எல்லோரும் ஒன்று போல இருந்தார்கள், மேலும் வெளிப்படையாகவும் அவர்கள் அனைவரும் ஒன்று போல தான் இருந்தார்கள்.

வ 2, இதில் ஐந்து பேர் புத்திசாலிகளும் மற்ற ஐந்து பேர் முட்டாள்களும் ஆவர்.

தேவன் மனிதர்களின் இருதயத்தை அறிவார்.

***சங்கீதம்*** *14:1, தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.*

***சங்கீதம் 53:1,*** *தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்; அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான அக்கிரமங்களைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.*

கிரேக்க மொழியில் இவரை 'மோரோஸ்' (mōros) என அழைக்கின்றனர். இதிலிருந்து தான் கயவன் (moron), முட்டாள் என்ற வார்த்தை தோன்றியது.

அவர்கள் அனைவரும் தேவனை அறிந்தபோதிலும், அவர்கள் தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை.

இயேசு தம்முடைய பிரசங்கத்தில் யார் புத்திசாலி என்றும், யார் முட்டாள் என்றும் விளக்குகிறார்.

தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவனே புத்திசாலியான மனிதன்.

***மத்தேயு*** *7:24, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.*

தேவ வார்த்தையை கேட்டும் அதற்கு கீழ்ப்படியாதவனே முட்டாள் ஆவான்.

***மத்தேயு*** *7:26, "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.*

________________________________________________________________

________________________________________________________________

## விளக்கு, வெளிச்சம் - *Torch, light*

பழைய ஏற்பாட்டிலுள்ள கற்பனைகள் வெளிச்சமாகும்.

***நீதிமொழிகள் 6:23,*** *கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி,*

***சங்கீதம் 119:105,*** *உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.*

பழைய ஏற்பாட்டில் வார்த்தை விளக்காக இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டில் விளக்கு இயேசு கிறிஸ்து!

***யோவான் 1:4,*** *அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.*

***யோவான் 1:1,*** *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*

***யோவான் 1:14,*** *அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

அதனால், நீங்கள் இயேசுவை உங்களுடைய வாழ்வில் வைத்திருந்தால் அவர் வெளிச்சத்தை அளிப்பார்.

நம்மை போல இந்த மணப்பெண் தோழியர் கூட்டத்தை தேவன் மேலிருந்து கீழே பார்த்தார்.

- நாம் அனைவரும் கிறிஸ்தவர் என வெளிப்படையாக கூறிக்கொண்டிருக்கிறோம் - *all of us are professing that we are Christians,*
- நம்மிடம் திருமண ஆடை உள்ளது - *We have the wedding garments,*
- நம்முடைய விளக்கு நம்மிடம் உள்ளது - *We have our torch,*
- நாம் அவருடைய வருகைக்காக காத்துக்கொண்டு இருக்கிறோம் - *We are waiting for His coming*

நாம் எந்த வகையை சேர்ந்தவர், புத்திசாலியா அல்லது முட்டாளா என்பதை அவர் அறிவார், அவர் மட்டுமே அறிவார்.

________________________________________________________________

________________________________________________________________

இந்த இரண்டு குழுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவெனில், அவர்களின் ஆயத்தம் தான்.

*வ3-4, [3] புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. [4] புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.*

புத்திசாலியானவர்கள் எண்ணெயை எடுத்துச் சென்றார்கள். முட்டாள்களிடம் எண்ணெய் இல்லை. முட்டாள்கள் தங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ளவில்லை. முட்டாள்கள் வெளிப்புறமாக தான் இருப்பார்கள். இதில் ஐவர் தயாராகவும் மற்ற ஐவர் ஆயத்தமாகாமலும் இருந்தார்கள்.

## எண்ணெய் - Oil

***லூக்கா 4:18,*** *"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்;*

"தேவனின் ஆவியும்" அபிஷேக எண்ணெயும் நேரடியாக தொடர்புடையவை. *The oil of anointing stands as a physical representation of Jesus being given the Spirit to perform these functions for God in His service to man.*

***அப்போஸ்தலர் 10:38,*** *நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.*

இந்த இரு பிரிவு கன்னிகைகளுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில், கிறிஸ்துவுக்குள் அவர்களின் உள்ளான வாழ்க்கையின் ஆயத்தமே.

இதை இயேசு மறுபடியும் பல உவமைகளில் வலியுறுத்தியுள்ளார்.

_______________________________________________________________

_______________________________________________________________

**மத்தேயு** *22:1-14,* திருமண விருந்தில் ஒருவன் மட்டும் திருமண ஆடை அணியவில்லை.

**மத்தேயு** *13:24-30,* கோதுமையும் களையும் ஒன்றாக வளரும். அறுவடை தினம் வரைக்கும் அவை இரண்டிற்குமான வித்தியாசம் எதையும் கண்டறிய முடியாது.

**மத்தேயு** *13:18-23,* விதைக்கிறவர்களின் உவமையில், அவைகள் வேகமாக வளர்கின்றன, ஆனால் அவைகள் விழுந்துபோகின்றன அல்லது நெருக்கப்படுகின்றன.

இன்றைய தினத்தில் இந்த உலகம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு சபையிலும் தேவனின் வருகைக்காக மீட்கப்படாத மற்றும் தயாராகாத மக்கள் நிறைந்துள்ளனர்.

ஐந்து பேர் தயாராக வரவில்லை. அப்படியென்றால் 50% பேர். *please don't take this as a method in mathematic calculation.*

மேலும் அது நீங்களாகவும் அல்லது உங்களுக்கு அருகில் அமர்ந்து இருக்கும் நபராகவும் இருக்கலாம்!

***2 தீமோத்தேயு 3:5,*** *தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு!*

***வ 5,*** *மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.*

தேவன் வருவார். ஆனால் அதற்கு நேரம் எடுக்கிறது. அதனால் அவர்கள் அனைவரும் உறங்கிவிட்டனர். ஞாபகம் உள்ளதா அவர்கள் அனைவரும் உறங்கி விட்டனர்.

உங்களில் திருமணமான பலர், திருமணத்திற்கு முந்தைய இரவு தூங்காமல் அந்த பெரிய நாளை நினைத்து அதற்கு தயாராகி இருப்பீர்கள், என நிச்சயமாக நான் நம்புகிறேன். சிலநேரங்களில் உங்களால் விழித்திருக்க முடியாது, உறங்கிவிடுவீர்கள்.

***வ6,*** *"நடுராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று!'*

மணமகன் வருவதற்கு நீண்ட நேரம் ஆகிவிட்டது. அவர் எதிர்பாராத நேரத்தில், நள்ளிரவில், வருகிறார்.

________________________________________________________________

________________________________________________________________

ஒரு நிமிடம் இதற்கு இணையாக பஸ்காவின் இரவை சிந்தித்து பாருங்கள்! ***யாத்திராகமம் 12:29***, *நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்.*

இஸ்ரவேலுக்கான விடுதலை நள்ளிரவில் நடைபெற்றது. அதனாலே அவர்கள் மேசியாவை நள்ளிரவில் எதிர்பாராதவிதமாக எதிர்பார்கிறார்கள்!

அவர் ஒரு திருடனை போல வருவார் என வேதாகமம் கூறுகிறது!

***வ7-8,*** *[7]அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். [8]புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்'*

புத்திசாலிகள் திருமண ஆடையை அணிந்திருந்தனர், அவர்கள் தங்களுடைய விளக்கை ஒழுங்குபடுத்தி நன்றாக எரியவைத்தனர், அவற்றுள் எண்ணெய் ஊற்றி இருட்டான வானத்தை வெளிச்சமாக்கினர், மேலும் அவர்கள் மணமகனுடன் இணையவும், திருமண ஊர்வலத்தில் கலந்து கொள்ளவும் தயாராக இருந்தனர்.

முட்டாள்களிடம் போதுமான அளவு எண்ணெய் இல்லை! அவர்கள் வெளியே சென்று பிறரிடம் தங்களுக்கு எண்ணெயைத் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

---

*The message is very clear from the Lord saying the salvation is NOT transferable!*

*இரட்சிப்பை பிறருக்கு கொடுக்க முடியாது என்ற செய்தி தேவனிடமிருந்து மிகவும் தெளிவாக வருகிறது!*

---

இறந்த பின்னரோ அல்லது இயேசுவின் இரண்டாம் வருகையின் போதோ தேவனின் நியாயாசனத்திற்கு முன் நிற்க நீங்கள் அழைக்கப்பட்டால், பரலோகத்திலும் பூமியிலும் உள்ள அனைத்து பரிசுத்தவான்களும் உங்கள்

___________________________________________________________________

___________________________________________________________________

சார்பாக கண்ணீர் மாத்திரமே வடிக்க முடியுமே தவிர உங்களை ஆக்கினையிலிருந்து காப்பாற்ற முடியாது.

இரட்சிக்கப்பட்டவர்கள் தவர மாட்டார்கள். உங்கள் எண்ணெய்யை எங்களுக்குக் கொடுங்கள் என்ற கோரிக்கைக்கு, யாரும் பதிலளிக்க முடியாது! தேவனால் மட்டுமே கூற முடியும்!! அது இலவசமாக கிடைக்கிறது!!!

***வ9-10,*** *[9]புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். [10]அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.*

நீங்கள் உங்கள் சொந்த இரட்சிப்பை காத்துக்கொள்ள வேண்டும் என்பதையே இது நமக்கு கற்பிக்கிறது. தேடும் அனைவருக்கும் இது இலவசமாக கிடைக்கும்.

***ஏசாயா 55:1-3,*** *[1]"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும்கொள்ளுங்கள். [2]நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். [3]உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.*

நீங்கள் சொந்தமாகப் போய் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்!

எண்ணெய் இலவசமாக கிடைக்கிறது! ஏராளமாக!! ஆனால் இந்த நேரத்தில் அல்ல!!!

எண்ணெய் விற்பனையாளர்கள் யார்?

- வேத வசனம் - *The Scriptures,*
- அப்போஸ்தலர்கள் - *The Apostles,*

_______________________________________________________________

_______________________________________________________________

- *தீர்க்கதரிசிகள் - The Prophets,*
- *சுவிசேஷகர்கள் - The Evangelist,*
- *போதகர்கள் - The Pastors,*
- *ஆசிரியர்கள் / உபதேசியார்கள் - The teachers.*

எரியாத விளக்கை வைத்திருக்கிற ஒருவரையும் திருமண ஊர்வலத்திற்குள் அனுமதிக்க மாட்டார்கள். நேரம் இல்லாததால் அவர்களால் அதை எரியவைக்க முடியாது!

**லூக்கா 6:46,** [46]"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? [47]என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். [48]ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. [49]என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின் மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து, முழுவதும் அழிந்தது என்றார்."

மத நம்பிக்கையின் அடிப்படையில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அஸ்திபாரம் கிடையாது. பரிசுத்தம் என்ற ஒன்று அவர்கள் வாழ்வில் இல்லை. அவர்கள் வாழ்க்கையில் எந்த ஒரு மாற்றத்தையும் நீங்கள் காண முடியாது. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று எப்படிப்பட்ட வெளித்தோற்றத்தை காட்டினாலும் சரி.


**வ10,** [10]அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

தேவனுடைய வழிகளை பற்றி கற்றுக்கொடுப்பவர் யாரும் இல்லை. ஏனென்றால் கதவுகள் சாத்தப்பட்டு உள்ளன! நோவாவின் பேழை மிதக்க ஆரம்பித்தபோது மக்களின் எண்ணங்களை ஒரு கனம் கற்பனை செய்து பாருங்கள். மக்கள் வந்து கதவை தட்டி, அதை திறக்கும்படி கேட்டுக் கொண்டனர். கர்த்தராகிய தேவன் அந்த கதவுகளை மூடி விட்டார். நோவா பேழையைக் கட்டியபோது, மக்கள் அவரை ஏளனமாகவும், பரிகசித்தும்

______________________________________________________________

______________________________________________________________

பேசினார்கள். ஆனால் கதவு அடைக்கப்பட்டதும் எல்லோர் மனதிலும் இருதயத்திலும் பீதி உண்டானது.




என் அன்பான சகோதர சகோதரிகளே இப்போது கதவு திறந்திருக்கிறது. இந்த செய்தியை கேட்கும் போது கதவு திறந்திருக்கும். நீங்கள் தயாராக இருங்கள். மனிதகுமாரன் வரும் அடையாளம் அருகில் இருக்கும் போது நீங்கள் ஆயத்தத்தோடு உறங்க செல்லுங்கள்.

அதனால், நீங்கள் ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இப்போது விலைக்கிரையம் செலுத்த தயாராக இருக்க வேண்டும். இயேசு மத்தேயு 13ஆம் அதிகாரத்தில் இரண்டு உவமைகளை கூறியுள்ளார்.

**மத்தேயு 13:45-46,** [45]மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. [46]அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.

_______________________________________________________________

_______________________________________________________________

ராஜ்யம் என்பது முத்து போன்றது, மனிதன் தன்னிடம் இருந்த அனைத்தையும் விற்று, அதை வாங்கிக்கொண்டான்.

***மத்தேயு 13:44,*** *"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.*

பரலோக ராஜ்யம் என்பது ஒரு மனிதன் வயலை கண்டுபிடித்து, தன்னிடம் உள்ள யாவற்றையும் விற்று அந்த வயலை வாங்குவது போலாகும்.

உங்கள் சுயத்தை முழுவதும் விலையாக நீங்கள் செலுத்த வேண்டும்!

***வ11-12,*** *[11] "பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். [12] அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*


கதவு மூடப்பட்டுவிட்டால், அவர்கள் திருமண கொண்டாட்டத்தில் நுழைவதற்கு தாமதமாகி விடும்.

இயேசு இந்த குறுகிய வாசல் *(narrow gate)* பற்றி பேசினார்!

***லூக்கா 13:24-27,*** *[24] "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். [25] வீட்டெஜமான் எழுந்து, கதவைப்பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத்திறக்க வேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். [26] அப்பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம்பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம்பண்ணினீரே என்று சொல்லுவீர்கள். [27] ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.'*

______________________________________________________________

______________________________________________________________




*மூடிய கதவுகளுக்கு முன்பாக நின்று, அதை தட்டி அவரிடம் அழுவது எப்படிப்பட்ட ஒரு பேரழிவாக இருக்கும்.*

*இரண்டாவது வாய்ப்பு இல்லை. எதிர்பாராத நாளுக்கு தயாராகும் ஒரே வழி ஒவ்வொரு நாளும் தயாராக இருப்பதாகும்! ஒவ்வொரு நாளும்!!*

*என் சகோதர சகோதரிகளே, இயேசு இந்த உவமையை இப்படியாக கூறி முடித்தார், "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்." **மத்தேயு 25:13**.*

*நீங்கள் தயாராக உள்ளீர்களா?*

*இரண்டாவது வாய்ப்பு இல்லை!*

*யாரும் உங்களுக்கு உதவ முடியாது!!*

*இந்த நேரம் உங்களுக்கு இல்லாமல் போகலாம்!!!*

*இது தான் அதற்கான நேரம் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!*

_______________________________________________________________

_______________________________________________________________

# 15 இராஜாவின் வருகை

இப்போது லூக்காவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் உவமைகளை பற்றி பார்க்கப் போகிறோம்.

நாம் நேற்று இரவு விளக்கமாக பார்த்த மத்தேயு 25இல் உள்ள உவமையும் இந்த உவமையும் ஒரே உவமை அல்ல.

அதற்கும் இதற்கும் சில ஒற்றுமைகள் இருந்தாலும் பல வேற்றுமைகளும் உள்ளன:

| | பத்துராத்தல் திரவிய உவமை<br>**லூக்கா 19:11-27** | தாலந்துகளின் உவமை<br>**மத் 25:14–30** |
|---|---|---|
| கதாப்பாத்திரங்களின் எண்ணிக்கையில் வேறுபாடு | | |
| உவமை சொல்லப்பட்ட சமயம் | எரிகொவிலிருந்து எருசலேமிற்கு செல்லும் வழி | எருசலேமில் ஆண்டவருடைய இறுதி வாரத்தில் |
| உவமையை கேட்டவர்கள் | பெரும் கூட்டம் | சீஷர்கள் |
| கதாப்பாத்திரங்களின் வகை | 1. ஊழியர்கள்<br>2. விரோதிகள் | ஊழியர்கள் மாத்திரம் |
| விளைச்சல் | பத்தும், ஐந்தும் | இரட்டிப்பான அதிகரிப்பு |

**லூக்கா 19:11-27,** 11 அவர்கள் இவைகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும், அவர் ஒரு உவமையைச் சொன்னார்: 12 பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான். 13 புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில்

________________________________________________________________

________________________________________________________________

பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்துராத்தல்
திரவியங்கொடுத்து: நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு
வியாபாரம்பண்ணுங்கள் என்று சொன்னான். [14]அவனுடைய ஊரார்
அவனைப் பகைத்து, இவன் எங்கள் மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு
மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை
அனுப்பினார்கள். [15]அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு
திரும்பிவந்தபோது, தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த
ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது
இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச்
சொன்னான். [16]அப்பொழுது முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய
ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். [17]எஜமான்
அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில்
உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு
அதிகாரியாயிரு என்றான். [18]அப்படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து:
ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது
என்றான். [19]அவனையும் அவன் நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு
அதிகாரியாயிரு என்றான். [20]பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே,
இதோ, உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன். [21]நீர்
வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான
கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான்.
[22]அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன்
வாய்ச்சொல்லைக்கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன். நான்
வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான
கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே, [23]பின்னே ஏன் நீ என்
திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை; வைத்திருந்தால் நான்
வரும்போது, அதை வட்டியோடே வரப்பற்றிக்கொள்வேனே என்று
சொல்லி; [24]சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன்
கையிலிருந்தெடுத்து, பத்துராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான்.
[25]அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்துராத்தல் இருக்கிறதே
என்றார்கள். [26]அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும்,
இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன். [27]அன்றியும் தங்கள்மேல் நான்
ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை
இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள் என்று
சொன்னான் என்றார்.'"

________________________________________________________________

________________________________________________________________

இயேசு கிறிஸ்து இந்த உவமையின் மூலம் போதிப்பதை புரிந்துகொள்வதற்கு முன், இந்த உவமை சொல்லப்பட்ட பின்னணியை முதலில் உங்களுக்கு அமைத்துக்கொடுக்க விரும்புகிறேன்.

ரோம சாம்ராஜ்யம் இஸ்ரவேல் உட்பட முழு உலகத்தையும் ஆட்சி செய்தது. ரோம இராயன் (அதாவது Caesar, சீசர் அல்லது ரோம பேரரசர்), மக்களிடமிருந்து தனக்கு வரி சேகரித்துக் கொடுக்கும்படி ராஜாக்களையும் ஆட்சியாளர்களையும் தேசங்களுக்கு நியமித்தான். எனவே, சகல நாடுகளும் சீசரின் (Caesar) அதிகாரத்தின் கீழ் ஆட்சி செய்தனர். எந்த பிரச்சனையும் இல்லாமல் உள்ளூர் அதிகாரிகள் சுமூகமாக வரி வசூலிப்பதற்கு ரோம போர்ச் சேவகர்கள் உதவினர்.

ரோம இராயனான சீசர் மட்டும்தான் இந்த முழு சாம்ராஜ்யத்தின் ஒரே ராஜாவாக இருந்தான், எனவே அவன் தான் இஸ்ரவேலுக்கும் ராஜா.

ரோமர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக ஆட்சி செய்தனர். தங்கள் ஆட்சியின் கீழ் பல்வேறு கலாச்சாரங்களையும் மரபுகளையும் பின்பற்றும் ஜனங்களை ஆள்கிறோம் என்பதை அறிந்திருந்தனர். அதனால், உள்ளூரில் நன்கு அறியப்பட்டிருந்த தலைவர்கள், அரசர்களை அல்லது அந்த ஊரின் கலாச்சாரத்தை சேர்ந்தவர்களை ரோமர்களுக்கு கீழ் ஆட்சியில் நியமித்தனர். இதன் மூலம் ரோமர்கள் தங்கள் ராஜ்யம் முழுவதும் பிரச்சனை இல்லாமல் இயங்க உறுதி செய்தனர்.

இஸ்ரவேல் ஜனங்களை ஆட்சி செய்யவும் ரோம ராயனுக்குக் கீழ் அரசர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். என்னதான் உள்ளூர் ராஜா இருந்தாலும், இஸ்ரவேலரின் இறுதி ஆட்சியாளர் ரோம பேரரசர் சீசரே. அனால், இஸ்ரேலை ஆட்சி செய்தவர்கள் ரோமர்களோ, யூதர்களோ அல்ல. ஏரோதியரின் குடும்பத்திலிருந்து வந்த ஏதோமேனியர்களே (Idumeans) இஸ்ரவேலரை ஆண்டனர். இந்த ராஜாக்களில் குறிப்பிடத்தக்கவர், நாம் நன்கு அறிந்த மகா ஏரோது (Herod the Great) மாத்திரமே.

கி. மு. 40இல், மகா ஏரோது ரோமாபுரிக்கு சென்று ரோம படைத்தலைவரும் அரசியல்வாதியுமான மார்க் அந்தோணியிடம் (Marc Antony) இஸ்ரவேலை ஆளுவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த மார்க் அந்தோணி என்பவர் ஜூலியஸ் சீசரின் நெருங்கிய ஆதரவாளர். இதன்மூலம் ஏரோது ஆட்சி பொறுப்பை பெற்றான். ("ஒபதியா புத்தகத்தை வாசிப்பது எப்படி" என்ற செய்தியில், ஏரோதை குறித்தும் அவர்கள் ஏன் இஸ்ரவேலை ஆள விரும்புகிறார்கள் போன்ற குறிப்புகளும் எங்கள் வலைதளத்தில் (YouTube Channel) உள்ளன. நீங்கள் பார்த்து அறிந்துகொள்ளலாம்).

________________________________________________________________

________________________________________________________________

*மகா ஏரோது கி. மு. 4 வரை ஆட்சி செய்து இறந்து போனார். அவர் தன்னுடைய "உயிலில்" இந்த ராஜ்யம் மூன்றாக பிரிக்கப்பட வேண்டும் என்றும், அது தன்னுடைய மூன்று மகன்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*ஏரோது மரித்துப்போன பிறகு, ரோமர்கள் ராஜ்யத்தை அவருடைய மூன்று மகன்களுக்கும் பிரித்தனர்.*

1. ***ஆர்கிலாஸ் (Archelaus)*** *காற்பங்கு தேசமாகிய* ***யூதேயாவின்*** *தலைவனாகிவிட்டான்.*
2. ***ஏரோது அந்திபாஸ் (Herod Antipas) கலிலேயா (Galilee)*** *மற்றும்* ***பெராயாவின் (Peraea)*** *காற்பங்கு தேசாதிபதியானான்.*
3. ***பிலிப்பு (Philip) யோர்தானின்*** *வடக்கு மற்றும் கிழக்கு பகுதியின் காற்பங்கு தேசாதிபதியானான்.*

*இயேசு இப்போது இந்த உவமையை எரிகோவிலிருந்து எருசலேமுக்கு செல்லும் வழியில் கூறினார்.*

*ஆர்கிலாஸ் யூதேயாவை ஆண்டான். எரிகொவும் அந்த பிரதேசத்தின் ஒரு பகுதியும் சேர்ந்த இடத்தை ஆர்கிலாஸ் ஆட்சி செய்தான். அங்கு ஒரு அரண்மனையையும் கட்டி குடியிருந்தான். ஏரிகோவிலிருந்து சாலை வழியாக எருசலேமிற்கு செல்ல பதினேழு மயில்கள் ஆகும். 17 மைல்களின் பயணத்தில் இயேசு அவர்களிடம் பேசுவதையும் அவர்களுக்கு எவ்வளவு கற்றுக்கொடுத்திருப்பார் என்பதையும் கற்பனை செய்து பார்க்க முடியாது. இயேசு இந்த உவமையை சொல்வதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஆர்கிலாஸ் தன் ஆட்சியை நிறுத்தியிருந்தான்.*

*இந்த உவமையை சொல்வதற்கு முன்னர் தான் இயேசு சகேயுவிடம் (Zacchaeus) பேசிவிட்டு தங்கியிருந்தார் (லூக்கா 19:1-10).*

*ஆனால் இந்த உவமை இடம் பெற்ற சூழலை நீங்கள் புரிந்துகொள்ள இதன் வரலாற்றை கூறியே ஆகவேண்டும். ஆர்கிலாஸ் தன் தந்தையின் மரணத்திற்கு பின்பு, தனது ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு பல தீய காரியங்களை செய்தான். சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன் மக்களுக்கு தன் மீது பயம் வரவேண்டும் என்பதற்காக, முதல் பஸ்காவின் போது 3,000 யூதர்களை கொன்றான். அவன் மிகவும் கொடூரமான கொலைகாரன் என்பதால் மக்கள் அவனை வெறுத்தனர்.*

*ரோம இராயனுக்கு கீழ் ஆட்சி செய்ய நியமிக்கப்பட இருப்பவர்கள், இராயனை முதலில் சந்திக்க வேண்டும். அதன் பின்னரே இராயன்*

______________________________________________________________

______________________________________________________________

அவர்களை அரசனாக நியமிப்பார். அது போலவே ஆர்கிலாசும் அவனது இரண்டு சகோதரர்களும் செய்தனர். ஆனால் தம்மை ஏற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை பெற ரோமாபுரிக்கு அவன் சென்றபோது, அவனை வெறுத்த மக்கள், ஆர்கிலாசுக்கு பின்னால் ஒரு குழுவை அனுப்பினர்.

ஆர்கிலாஸ் தனக்கு ராஜாவாக இருக்கும் உரிமை கொடுக்கும்படி சீசரிடம் முறையீடு செய்து கொண்டிருக்கும்போது, யூதேயாவிலிருந்து சென்ற 50 முக்கிய யூத தலைவர்கள், ரோமாபுரியில் குடியேறிய 8,000 யூதர்களோடு சேர்ந்து சென்று சீசரிடம், "இந்த மனிதன் எங்களை ஆளுவதை நாங்கள் விரும்பவில்லை" என கூறினர். சீசர் ஒரு அரசியல்வாதி என்பதால், எல்லோரையும் சந்தோஷப்படுத்துவதற்கு நடுநிலையை கண்டறிய முயன்றான். "ஆர்கிலாசே நீ ராஜாவாக இருக்கலாம் ஆனால் மக்களின் நன்மதிப்பை பெற்ற பின்னரே நீ அந்த பட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும் அதுவரை சேனைத்தலைவனாக இருக்கும்படி கூறிவிட்டார்.

மக்கள் ஒரு குழுவை ரோமாபுரிக்கு அனுப்பி, சீசர் அவரை ஏற்றுக்கொள்வதையும் நியமனம் செய்வதையும் தடுக்க முயன்றார். அவர்களால் முடியவில்லை, அதனால் அவர் ஒரு அரசனாக மீண்டும் வந்து ஆட்சி செய்தார். எல்லோரும் அறிந்திருந்த இந்த வரலாற்றை அடிப்படையாக கொண்டு இயேசு இந்த கதையை கூறினார். இந்த கதையானது பிரபுவானவர் ஒரு உயர்ந்த அரசரிடம் சென்ற தனது சொந்த மக்களை ஆட்சி செய்வதற்கான உரிமையை பெற்றுக்கொள்வதை பற்றியது ஆகும்.

***வ12***, *[12] பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்.*

இந்த அரசியல் பின்னணியை கேட்ட பிறகு, உங்களால் இதனை நன்றாக புரிந்து கொள்ள முடியும்.

இந்த கதையில் இப்போது ஒரு பிரபுவானவர் ராஜ்யத்தைப் பெற தூர தேசத்திற்கு செல்கிறார்.

கிரேக்க மொழியில் பிரபுவை 'அந்த்ரபோஸ் திஸ் யுஜென்ஸ்' (anthrpos tis eugens) என்று அழைப்பர். இதற்கு ஒரு உயர் ஸ்தானத்தில் பிறந்த மனிதன் அல்லது ராஜாவாக பிறந்த ஒரு மனிதன் என்று பொருள். இயேசுவே ராஜாவாக பிறந்தவர். ஏனெனில் இயேசுவின் தந்தை யெகோவா தேவன்.

________________________________________________________________

________________________________________________________________

அதனால் இது ராஜாவாக பிறந்து, தொலைதூர நாட்டிற்கு சென்ற குறிப்பிடத்தக்க ஒரு மனிதரை பற்றிய கதை.

அவர் ஒரு ராஜ்யத்தை பெறுவதற்காக சென்றிருக்கிறார். மேசியாவாக வந்த இயேசு இப்போதே ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென இஸ்ரவேலர்கள் எதிர்பார்த்தனர். இயேசு தம்முடைய ராஜ்யத்தை அமைப்பார் என்றும் ரோம சாம்ராஜ்யத்தை அகற்றுவார் என்றும் சீஷர்கள் நினைத்தார்கள் என்பது நினைவில் உள்ளதா.

மனுஷகுமாரன் வந்து, தம்முடைய ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவாரென்று யூதர் நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் இழந்தவர்களை காப்பாற்றவே மனிதகுமாரன் வந்தார் என்று இயேசு கூறினார்!

ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்து ஆட்சி செய்வதற்கு முன்னதாக இரட்சிப்பின் காரியங்கள் நிறைவேற வேண்டும். இயேசு முதல் முறையாக வந்தபோது அவர் கீழே குறிப்பிட்டுள்ளவைகளுக்காக வரவில்லை

- ரோம் சாம்ராஜ்யத்தை தூக்கி எரிந்து ஒரு மண்ணுலக இராஜ்யம் அமைக்க,
- சமுதாயத்தில் எல்லா தவறுகளையும் சரி செய்ய,
- அனைத்து உள்நாட்டு ஏற்றத்தாழ்வுகளையும் சீர்படுத்த,
- உலகில் ஒழுக்கத்தை உருவாக்க,
- அடிமைத்தனம், ஊழல், வறுமை, அநீதி ஆகியவற்றை முடிவுக்கு கொண்டு வர,
- பொருளாதார நீதியை நியமிக்க மற்றும்
- யூதருக்கான வெற்றியை நிறுவ.

ஆனால் பாவிகளை இரட்சிக்கவே அவர் வந்தார்.

அதற்கு மேலாக, முதலில் விசுவாசிகள் மத்தியில் தேவனுடைய ராஜ்யத்தை அமைப்பதற்காக வந்தார்.

***லூக்கா 17:21***, *இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்."*

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, ஆட்சி செய்யும் செங்கோலோடு வருவார். அப்போது அனைத்தையும் சரிசெய்வார்.

- பூமியை புதுப்பிப்பார்,

________________________________________________________________

________________________________________________________________

- பாலைவனத்தை ஒரு பூந்தோட்டமாக மாற்றுவார்,
- நீரூற்றுகளையும் நீர்வீழ்ச்சிகளையும் உருவாக்குவார்,
- பாலைவனங்களில் ஆறுகளையும் ஏரிகளையும் உருவாக்குவார்,
- இந்த மிருக இராஜ்யத்தை மாற்றுவார்,
- புதுப்பிக்கப்பட்ட பூமியில் மகிமையான *paradise* ஸ்தாபிக்கப்படும்
- நீதியோடும், உண்மையோடும், சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் ஆட்சி செய்வார்.

அவரது இரண்டாவது வருகையை பற்றிய விரிவான ஆய்வை செய்துள்ளோம், அதன் முழு விவரங்களையும் பெற அதைப் பாருங்கள்.

இயேசு சென்றுவிட்டார்!

ஆனாலும், அவர் திரும்பி வரும்போது முழு சிருஷ்டியையும் ஆளுவார்!

**வெளி 19:16, ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா** என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.

**பிலிப்பியர் 2:9-11**, [9]ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, [10]இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், [11]பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

இந்த பிரபு ஒரு ராஜ்யத்தைப் பெறப்போகிறார், தம்மை விட அதிக அதிகாரம் பெற்றவரிடமிருந்து முடிசூட்டப்படுவதற்கு செல்கிறார். இப்பொழுது விட்டுச் செல்லும் அதே தேசத்தை ஆட்சி செய்ய ராஜ்யத்துடன் திரும்ப வரப்போகிறார்!

**வ13**, புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்துராத்தல் திரவியங்கொடுத்து: நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள் என்று சொன்னான்.'

மத்தேயு 25இல் கூறப்பட்டுள்ளது போல மூன்று அடிமைகளை அவர் இங்கு அழைக்கவில்ல. அவர் இங்கு 10 அடிமைகளை அழைத்ததை நாம் காணலாம்.

__________________________________________________________

__________________________________________________________

மேலும், இங்கே இந்த உவமையில் அனைவருக்கும் சம அளவு தாலந்துகள் வழங்கப்பட்டது. மத்தேயுவில் கூறப்பட்டுள்ள உவமையில், ஒருவருக்கு ஐந்தும், மற்றொருவருக்கு இரண்டும், மேலும் கடைசியானவருக்கு ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் பார்த்தோம்.

இங்கே அவர் ஒவ்வொருவருக்கும் ஒன்று என்ற வீதத்தில் அவர்களிடம் பத்து ராத்தல் வழங்கினார். அதாவது மூன்று மாத சம்பளமாகும். இது பெரிய பணமல்ல.

அவர் சென்றபின், அவரது அடிமைகள் வியாபாரம் செய்து தங்கள் முயற்சிகள் மூலம் மதிப்பான லாபம் சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பினார். முதலீட்டிற்கான ஒரு நியாயமான இலாபம் ஈட்டுவதன் மூலம் அவர்கள் தங்களுக்கு எஜமான் மீதுள்ள அன்பையும், மரியாதையையும் மற்றும் அக்கறையையும் வெளிப்படுத்த முடியும். அவர் திரும்பி வந்த பின், எல்லோரும் என்ன செய்திருகிறார்கள் என்று அவர் மதிப்பிடுவார்.

அடிமைகள் தங்கள் எஜமானரிடம் கீழே கூறப்பட்டுள்ளவையை காட்டும்படி கூறப்பட்டனர்,

- ஒரு அடிமையின் நம்பகத்தன்மை,
- அவர்மேல் உள்ள அன்பு,
- அவர்மேல் உள்ள மரியாதை,
- அவருக்கான கணம்,
- அவரது ராஜ்யத்தின் மேல் வைராக்கியம்
- அவரது ராஜ்யத்தின் வளர்ச்சி,

பின்னர், அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தியதன் பின் ராஜ்யத்தின் நன்மைகளை அனுபவிப்பார்கள்.

பிரபு இல்லாதபோதும், அடிமைகள் பிரபுவின் அன்பிற்கும் மரியாதைக்கும் கணத்திற்கும் பாத்திரமான வாழ்க்கை வாழ அழைக்கப்படுகிறார்கள்.தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வரங்களையும், தாலந்துகளையும், வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் கடைசி மட்டும் பயன்படுத்தி விளைச்சலை அதிகரிக்கவும் அழைக்கப்படுகிறார்கள்.

***வ14**, அவனுடைய ஊரார் அவனைப் பகைத்து, இவன் எங்கள் மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள்.’*

________________________________________________________________

________________________________________________________________

*V 14, But his citizens hated him, and sent a delegation after him, saying, 'We will not have this man to reign over us.'*

அவருடைய ஊரார் அவரை வெறுத்து, தங்கள் மீது அந்த பிரபு ராஜாவாக இராதபடிக்கு அவனுடைய மேல் அதிகாரியிடம் முறையிட்டனர்.

இயேசுவின் இந்த வார்த்தையை பாருங்கள், "அவருடைய ஊரார் அவரை வெறுத்தனர்." *(his citizens hated him)*

இந்த பூமியில் எல்லோரும் கர்த்தருக்கு சொந்தமானவர்கள்! இதில் யாரும் விதிவிலக்கல்ல. இந்து, பௌத்தம், சீக்கியம், முஸ்லீம், நாத்திகர், என்று யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் நீங்கள் தேவனுடையவர்கள்.

இந்த உலகத்தை அவர் உண்டாக்கியுள்ளார். நீங்கள் அவருடைய நாட்டில் வாழ்கிறீர்கள். அது அவருடையது, அவர் உங்களை உருவாக்கினார். அவர் உருவாக்கியதால் நீங்கள் அவருக்கு சொந்தமானவர்கள்.




இந்த கதையில் நீங்கள் மூன்று வகையான மக்களை மட்டுமே காண்பீர்கள்.

1. உண்மையுள்ளவர்கள் - *Faithful*
2. உண்மையற்றவர்கள் - *Unfaithful*
3. தேவனை முழுவதுமாக நிராகரித்தவர்கள் - *Rejected God altogether*

அதனால், அந்த மூன்றாவது பிரிவை சேர்ந்தவர்கள் பிரபுவை வெறுத்ததால் அவருடைய ஆட்சியை தடுக்க ஒரு குழுவினை அனுப்பினார்கள்.

________________________________________________________________

________________________________________________________________

ஒரு கணம் கெட்டகுமாரனின் உவமையை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இளைய மகன் ஒரு விசுவாசியாக இருக்க வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். தந்தையின் மகன் என்பதால் அவன் ஒரு விசுவாசியாக இருக்க வேண்டும்.

அப்படி இல்லை, மனந்திரும்பி வரும் வரை இளைய மகன் விசுவாசியல்ல.

ஆனாலும் இளைய மகன் தந்தையின் குடும்பத்தில் சிருஷ்டிக்கப்பட்டார். மக்கள் புரிந்து கொள்ள முடியாத ஒரு செய்தி இது என்று நான் நினைக்கிறேன்.

கிறிஸ்துவை அவர்கள் நிராகரித்தால் அவர்களிடம் கிறிஸ்துவிற்கு ஏதுமில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் கிறிஸ்துவை நிராகரித்தாலும் கூட, அவரிடத்தில் உங்களுக்கு பங்கு உண்டு.

நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, அவருக்கு உங்களிடம் எல்லா உரிமையும் சம்பந்தமும் உண்டு.

நீங்கள் அவருடைய உலகில் இருக்கிறீர்கள்.

நீங்கள் அவருடைய தேசத்தில், அவருடைய இறையாண்மைக்கு உட்பட்டு, அவருடைய முழு அதிகாரத்தின் கீழ் இருக்கிறீர்கள். "முழங்கால் யாவும் அவருக்கு முடங்கும்" என்று பிலிப்பியர் 2இல் கூறப்பட்டுள்ளது. நீங்கள் அவரை நிராகரிக்கலாம், நீங்கள் அவரை புறக்கணிக்கலாம், ஆனால் நீங்கள் அவருக்கு சொந்தமானவர்கள்.



______________________________________________________________

______________________________________________________________

பிரபுவை வெறுக்க எந்த காரணத்தையும் இக்கதையில் குறிப்பிடவில்லை. நாம் முதலில் பார்த்த வரலாற்றிலிருந்து இந்த கதை சற்றே மாறுபட்டுள்ளது.

**யோவான்** *15:25, முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.'*

வரலாற்றில் ஆர்கிலாசை வெறுக்க மக்களிடம் சரியான காரணம் இருந்தது. இயேசு கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்த யூதர்களுக்கு ஆர்கிலாஸ் தங்களை ஆளுவதில் விருப்பமில்லை. அவன் 3,000 பேரை கொன்றுபோட்டான். இயேசுவின் தலைமுறையில் உள்ள யூதர்களுக்கும், அவன் தங்கள் மீது ஆட்சி செலுத்துவதில் விருப்பம் இல்லை.

ஆர்கிலாஸ் சிம்மாசனத்தில் ஏறுவதை யூதர்களால் தடுக்க முடியவில்லை. அதேபோல் இயேசுவும் சிம்மாசனத்தில் ஏறுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

இயேசு திரும்பவும் வரப்போகிறார். அவர் மூடிசூட்டப்பட்டுள்ளார். அவர் ராஜாதி ராஜா-வாகவும் கர்த்தாதி கர்த்தா-வாகவும் வருவார். அனைத்து ராஜ்யங்களும் அவருடைய ராஜ்யமாக மாறும். இயேசு உலகத்தை ஆளுவார், ஒவ்வொரு முழங்கால்களும் அவருக்கு முடங்கும். அவருடைய மகத்துவமுள்ள சிங்காசனத்தில் அவரை ஏறவிடாமல் தடுக்கும் முயற்சியில் யாரும் வெற்றிபெற மாட்டார்கள். சுவிசேஷத்தை வெறுக்கிறவர்களும், இயேசு கிறிஸ்துவை வெறுக்கிறவர்களும், நற்செய்தியை நிராகரிக்கிறவர்களும், இயேசு கிறிஸ்துவை நியாயாதிபதியாகவும், சங்காரக்காரராகவும் சந்திப்பார்கள்.

*வ15, "அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது, தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான்.*

அந்த பிரபு ராஜ்யத்தை பெற்று அரசனாகி திரும்பி வருகிறான். இயேசு தமது இரண்டாம் வருகையில் திரும்பி வரும்போது, ராஜாதி ராஜாவாக எல்லா மகத்துவங்களுடனும் வருவார், முன்னணையில் அல்ல.

வெளிப்படுத்தல் 19ல் அவர் வரும் காட்சியை நாம் காணலாம். வெள்ளை குதிரையில் பரிசுத்தவான்கள் அனைவரோடும் தூதர் சேனையோடும் நம் இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறார். அவர் பூமியில் இறங்கி அவருடைய மகிமையின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். இது தான்

______________________________________________________________

______________________________________________________________

தீர்க்கதரிசிகள் உரைத்த தீர்க்கதரிசனம், இயேசு சொன்ன அனைத்தும், அப்போஸ்தலர்கள் எழுதிய அனைத்தும் இதுவே.

எல்லோரும் எஜமானிடம் கணக்கை கொடுக்க வந்தே ஆக வேண்டும்.


***வ16-19***, *[16] அப்பொழுது முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். [17] எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். [18] அப்படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். [19] அவனையும் அவன் நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.'*

பிரபுவானவர் தம்முடைய அடிமைகளை வரவழைத்து, கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்டார். தாம் அவர்களிடம் கொடுத்த பணத்தில் என்ன செய்தார்கள் என்பதை அவர் அறிய விரும்பினார்.

முதல் அடிமையின் பதிலைக் கேளுங்கள், *'ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.'*

**ஆண்டவர்** என்ற வார்த்தையை கிரேக்க மொழியில் 'கீரியோஸ்' *(Kyrios)* என்பதாகும். இதனை எஜமான் அல்லது உரிமையாளர் என்று மொழிபெயர்க்கலாம் *(Master, or Owner).*

மரியாதை!



________________________________________________________________

________________________________________________________________

உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது – இந்த வரியை கவனியுங்கள் 'உம்முடைய ராத்தலினால்'. "நீர் எனக்கு கொடுத்த பணத்தில் நான் இதை செய்தேன்" என்று அவன் கூறவில்லை.

உம்முடைய ராத்தல் இதை செய்தது! நான் இதை முதலீடு மட்டுமே செய்தேன் ஆனால் நீர் தான் இதற்கான சூழலையை உருவாக்கினீர், அது உம்முடைய வல்லமையும் மற்றும் மகத்துவமுமாகும். நான் சரியான இடத்தில் இருந்ததால், நீர் என் பொருப்பில் வைக்கப்பட்ட பணம் உம் நிமித்தம் இந்த வளர்ச்சியை அடைந்தது.

இதனை ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறிந்து கொண்டு அறிக்கையிட வேண்டும். நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் எப்படி உண்மையாய் வாழ்கிறோம் என்பதற்கு இதுவே ஆதாரம். ஆகவே, சத்தியத்தை பிடித்துக்கொண்டு, ஆவியானவரின் வல்லமையோடு, தேவன் நமக்கு கொடுத்த ஆவியின் வரங்களையும், வாய்ப்புக்களையும், அநுக்கிரகங்களையும் அவருக்கு கணமும் மகிமையும் உண்டாகும்படி முடிந்த அளவிற்கு பயன்படுத்த வேண்டும்.

***1 கொரிந்தியர் 3:6-7***, *[6]நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். [7]அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.*

நாம் நம் ஆவிக்குரிய வரங்களையும், திறமைகளையும், திறன்களையும் பயன்படுத்துகிறோம், ஆனால் தேவனே அவற்றை விளையச்செய்கிறார்.

*எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.*

இது மிகவும் நம்பமுடியாத வெகுமதியாகும். ஆரம்பத்தில் அடிமைக்கு மூன்று மாத ஊதியங்கள் மட்டுமே இருந்தன, ஆனால் அவர் 10 நகரங்களை ஆளுவதற்கான வெகுமதியை பெற்றார்.

இது ஆயிரவாருட அரசாட்சியில் நடைபெறும். கர்த்தருடன் ராஜ்யத்தில் நுழையும்போது உண்மையுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்வார்கள். நாம் இந்த பூமியில் அவருடைய ஆட்சிக்கு கீழ் இருப்போம், அவருடன் ஆட்சி செய்து, பல உண்மையான நகரங்களில் அதிகாரம் செலுத்துவோம். நித்திய பரலோகத்தில் இந்த ஆட்சி இல்லை.

________________________________________________________________

________________________________________________________________

இரண்டாவது அடிமை வந்து தனது கணக்கை அளிக்கிறார். மனத்தாழ்மை மற்றும் மரியாதை போன்ற முதல் அடிமையிடம் காணப்பட்ட அதே பண்புகள்.

எல்லோருக்கும் ஒரேமாதிரியான:

- வாய்ப்புகள் இருப்பதில்லை,
- ஊழியம் இருப்பதில்லை,
- சபை இருப்பதில்லை,
- தாக்கம் இருப்பதில்லை
- ஆவிக்குரிய வரங்கள் இருப்பதில்லை.

என்னுடைய கைகளில் இருந்த உங்களுடைய ராத்தல் *(mina)* இதனை செய்தது. பிரபுவானவர் அவனை நோக்கி: *"நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு" என்றான்.*

இந்த பிரபுவின் பெருந்தன்மை தான் என்ன!

உண்மையுள்ள இந்த இருவரிடமும் காணப்படும் பண்புகள்:

- உண்மையான விசுவாசிகள் - *Real believers,*
- தங்கள் எஜமானை நேசிப்பவர்கள் - *Loved their Master,*
- உண்மையுள்ளவர்கள் - *Faithful,*
- தாழ்மையானவர்கள் - *Humble,*
- கர்த்தரை சேவிப்பதில் பேறு பெற்றவர்கள் - *Honored to serve Him,*
- தங்கள் வாய்ப்புக்களை பயன்படுத்துபவர்கள் - *Used their privilege,*
- தங்கள் செல்வாக்கை பயன்படுத்துபவர்கள் - *Used their influence,*
- முழுமனதோடு - *Commitment*
- இறுதியாக விளைச்சலுக்கு காரணம் பிரபுவே என்று பிரபுவிற்கு கனத்தை செலுத்தினர் - *Finally gave all the credit back to Him.*

உங்களை உற்சாகப்படுத்துவதற்கு நான் சில வசனங்களை உங்களுக்கு கொடுக்கிறேன்!

***1 கொரிந்தியர் 6:2-3***, *[2]பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? [3]தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?*

________________________________________________________________

________________________________________________________________

*அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடாதிருக்கிறது எப்படி?*

*நாம் ஆட்சி செய்வோம், நாம் தேவதூதர்களையும் ஆளுவோம். அப்போஸ்தலர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை ஆளுவார்கள்.*

*விசுவாசிகள் நியாயத்தீர்ப்பு பற்றி பவுல் பேமா (Bema) என எழுதுகிறார், அங்கே நம்முடைய சேவைக்குத்தக்க தங்கம், வெள்ளி, விலைமதிப்பற்ற கற்களுக்கான வெகுமதியைப் நாம் பெறுவோம். (இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு என்ற தலைப்ப்பின் கீழ் 18ஆம் பாடத்தில் ஒரு விரிவான ஆய்வு செய்யப்பட்டுள்ளது)*

***1 கொரிந்தியர் 3:12-15***

***2 கொரிந்தியர் 5: 9-11***

***2 பேதுரு 1***

*ஆண்டவர் திரும்பி வரும் போது விசுவாசிகளுக்கு மகத்தான எதிர்காலமும் வெகுமதியும் இருக்கும். நமது எஜமானர் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு மிகுதியாக நம் மீது அருளுவார். எழுதியிருக்கிறபடி: "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரிந்தியர் 2:9)*

***வ20-21**, [20] "பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே, இதோ, உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன். [21] நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான்.'*

*இப்போது நாம் விசுவாசமற்ற ஒருவரை குறித்து பார்ப்போம்.*

*நீங்கள் வியாபாரம் செய்ய ஒரு மதிப்புமிக்க காரியம் கிடைத்தவுடன் மேலே சொன்னது போல, இன்றைக்கு அதை ஒரு கைக்குட்டையில் வைக்க மாட்டீர்கள். அந்த காலத்தில் இல்ல பழக்கவழக்கங்களின்படி அதை நீங்கள் புதைத்து விடுவீர்கள். ஆனால் இந்த மனிதன் சிந்தனையற்றவனாக இருக்கிறான், எனவே அவன் கவனமற்றவனாகவும் பயனற்றவனாகவும் இருந்தான்.*

____________________________________________________________________

____________________________________________________________________

அவருடைய நடவடிக்கைகளில் இருந்து நாம் பார்க்கக்கூடியது என்னவென்றால், அவருடைய குணம் அவரிடம் உள்ளதை வெளிப்படுத்தின,

- பிரபு மீது அன்பு ஏதும் இல்லை,
- பிரபுவிற்கு கணம் செய்யும் ஆசை இல்லை,
- பிரபுவிற்கு வேலை செய்யும் எண்ணமில்லை,
- பிரபுவிற்கு எந்த வேலையும் செய்ய எண்ணமில்லை,
- பிரபுவிற்கு தன்னுடைய விசுவாசத்தை காண்பிக்கும் எந்த வித நோக்கமும் இல்லை,
- பிரபுவை மகிழ்விக்கும் எண்ணமும்மில்லை,
- பிரபுவின் விவகாரங்களில் எந்தவித ஆர்வமும் இல்லை,
- பிரபுவின் பண்பை புரிந்து கொள்ளும் எண்ணமும்மிலை,
- பிரபு தன்னை பற்றி என்ன சிந்திப்பார் என்பது பற்றிய கவலையும் யோசனையுமில்லை,
- தன்னுடைய தேவையை மட்டுமே பார்க்கும் அவனொரு சுயநலவாதி,
- அவனுடைய வாழ்க்கையை மிகவும் எளிதாக எடுத்துக்கொள்பவன்.
- தன்னுடைய எஜமானுக்கும் தனக்கும் எந்தவித உறவும் இல்லை என்பதை இது காண்பிக்கிறது.

அவன் பிரபுவின் மீதுள்ள அன்பினால் அல்ல அவர்மீது பயத்தினால் செயல்பட்டதாக கூறினான்!

பிரபுவை திருடன் என பழி கூறினான். ஏனெனில் நீர் சேமித்து வைக்காததை நீர் சேகரித்து, நீர் விதைக்காத இடத்தில் அறுவடை செய்தீர் என்று கூறினான்.

மதத் தலைவர்கள் யூத மக்களை பயமுறுத்துவதன் மூலம் அவர்களை மத சட்டத்திற்குக் கீழ்ப்படிய வைத்தனர். அன்பினால் அல்ல.

அவன் பொய்யாய் அவரை பின்பற்றுகிறவன். மேலும் தான் செய்த எந்த காரியத்திற்கும் அவன் பொறுப்பேற்கவில்லை. மாறாக, இப்போது ராஜாவான பிரபுவை குற்றம்சாட்டுவதற்கு மட்டும் அவனிடம் தைரியம் இருந்தது.

இவனும் மற்ற இருவரோடு கூட ஒரே கூட்டத்தில் இருந்தாலும், இவன் ஒரு விசுவாசி அல்ல. ஏனென்றால் எந்த உண்மையான விசுவாசியும் இதுபோல்

__________________________________________________________________

__________________________________________________________________

செயல்படுவதில்லை. எந்த ஒரு உண்மையான விசுவாசியும் தேவனை பொய்யன், திருடன் மற்றும் சுரண்டுபவர் என்று அழைப்பதில்லை. எந்த உண்மையான விசுவாசி இடமும் அன்பின் பற்றாக்குறை, நம்பிக்கை இல்லாமை, கர்த்தருடைய விஷயங்களில் அக்கறையற்ற ஆகிய தன்மைகளை காண முடியாது.

எந்த உண்மையான விசுவாசியும், தேவன் நேர்மை இல்லாதவர எனவும், சட்டவிரோத சுயநல ஆதாயத்திற்காக மக்களை பயன்படுத்துகிறார் என்றும் குற்றம் சாட்ட மாட்டான்.

*வ22-23, [22]அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக்கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன். நான் வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே, [23]பின்னே ஏன் நீ என் திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை; வைத்திருந்தால் நான் வரும்போது, அதை வட்டியோடே வரப்பற்றிக்கொள்வேனே என்று சொல்லி'*

தேவன் தமது அன்பான பிள்ளைகளில் யார் ஒருவரையும் பயனற்ற அடிமை என்று அழைக்கவில்லை. எனவே, நான் அப்படிப்பட்ட மனிதன் என்று உனக்குத் தெரியுமென்றால் நீ ஏன் பணத்தை வங்கியில் வைக்கவில்லை என்று அவர் அவனிடம் கேட்கிறார்?

அவன் தான் அவருக்கு பயப்படுவதாக சொன்னதால், குறைந்தபட்சம் வங்கிக்கு சென்று பணத்தை போட்டிருக்கலாம். அது சில வட்டியை சம்பாதித்திருக்கும்.

இந்த அடிமை, தன் தனிப்பட்ட தேவையின் காரணமாக எஜமானிடம் வந்து இருக்கலாம், தன் தேவைகள் சந்திக்கப்பட்டதால், இன்னும் எவ்வளவு பெற முடியும் என்ற நோக்கத்துடன் அவன் எஜமானையும் சக ஊழியர்களையும் சுற்றி தொங்கினான். சுயநலமிக்கவன். எஜமான் மீது எந்த வித உண்மையான அன்புமில்லை மேலும் எப்போதும் தன்னுடைய சுயநல ஆதாயத்திற்காகவே அவரை நோக்கி பார்க்கிறான்.

நம்முடைய சபைகளும் இது போன்ற மக்களால் நிரப்பப்பட்டிருக்கும். தாங்கள் சபைகளில் இருந்து எதனை பெற முடியும் என மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். தேவனின் மீதான அன்பையோ, கர்த்தருக்கு சேவை செய்யும் விருப்பமோ அல்லது தேவன் அவர்களிடம் ஒப்படைத்த ஆவிக்குரிய

_______________________________________________________________

_______________________________________________________________

வரங்கள் மற்றும் தாலந்துகளுக்கு உண்மையாக இருக்கும் எண்ணத்தையோ நீங்கள் அவர்களிடம் காணமாட்டீர்கள்.

இந்த தவறான சீஷர்களை நீங்கள் எல்லா இடங்களிலும் பார்க்க முடியும். அவர்களது குணாதிசையங்கள்:

- தேவன் மீது அன்பு இல்லை - *No love for Him,*
- தேவனை கனப்படுத்த விருப்பமில்லை - *No desire to honor Him,*
- தேவனை மதிக்க விருப்பமில்லை - *No desire to respect Him,*
- தேவனை விசுவாசிக்க விருப்பமில்லை - *No desire to trust Him*
- தங்களின் நம்பகத்தன்மையை காட்ட விருப்மில்லை - *No desire to show themselves trustworthy,*
- போலித்தனம் அவர்களின் வாழ்க்கை முறை, நன்றாக நடிப்பார்கள் - *Hypocrisy is their lifestyle, Act very well*
- அவர்கள் சபை/ஊழியத்தில் இருந்து எதை பெற முடியும் என்று எதிர் பார்ப்பவர்கள் - *Look for what they can get out from the church/ ministry*
- அவர்களின் ஆவிக்குரிய வாய்ப்புகளை - *Waste their spiritual opportunity,*
- அவரை சேவிப்பதற்கான சலுகைகளை வீணாக்குபவர் - *Waste their privilege of serving Him*
- அவர்கள் எந்தவித மாற்றமுமின்றி இருப்பார் - *Just remain as they are*

*வ24-26, [24] "சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன் கையிலிருந்தெடுத்து, பத்துராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். [25]அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்துராத்தல் இருக்கிறதே என்றார்கள். [26]அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

அவர்களுடன் நின்றவர்கள் யாராக இருக்கக்கூடும்? அந்த மீதமுள்ள ஏழு அடிமைகளா அல்லது மற்றவர்களா. எனக்கு உறுதியாக தெரியாது.

பத்து ஊழியர்களில் மூன்று பேர் மட்டுமே திரும்பி வந்தனர் மீதமிருந்தவர்கள் வரவில்லை. இது என் சொந்த சிந்தனை தான்: தேவனால் அருளப்பட்ட பலர் தங்கள் சொந்த ஆதாயத்திற்காக அதை பயன்படுத்துகின்றனர் தேவனை மகிமைப்படுத்துவதற்காக இல்லை என்பதை நம் சமுதாயத்தில் பார்க்கலாம்.

______________________________________________________________

______________________________________________________________

இது என்னுடைய சிந்தனை .... இதனை நிராகரிப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை உள்ளது ...

பத்து ராத்தல்களை வைத்திருந்தவனிடம் மீதி உள்ள ராத்தல்களை எடுத்துக்கொள்ளுமாறு எஜமான் கூறினார். பிரபுவிற்கு அவரிடம் பத்து இருந்தது தெரியும், ஆனால் மக்கள் அவனிடம் ஏற்கனவே பத்து இருந்தது என கூறினர்.

அதற்கு பிரபு: உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இது தான் கிருபை! கிருபை மூர்க்கத்தனமானது!!

எது எடுத்துக்கொள்ளப்பட்டது?

- வாய்ப்பு,
- சலுகை,
- பதவி,
- எல்லாவற்றையும் இழந்தான்
- நித்தியத்திற்கும் பயனற்று மதிப்பிழந்தான்.

கிறிஸ்துவை அறிக்கையிடுகிறவர்கள், ஆனால் தேவனுடன் எந்த தொடர்பும் இல்லாதவர்களின் நிலை இப்படி தான் முடிகிறது.

- அவர்கள் சபையுடன் இணைக்கப்பட்டனர்- *They were connected to the church,*
- சலுகைகள் மூலம் சூழப்பட்டுள்ளனர் - *Surrounded by the privileges*
- சுவிசேஷத்தின் சத்தியத்தை கேட்டுள்ளனர் - *Heard the truth of the gospel,*
- சுவிசேஷத்தின் மூலம் சம்பாதிப்பவர்கள் - *They make a profession out of Gospel,*
- தங்கள் சொந்த தேவைகளை நிறைவேற்றுகிறார்கள் - *Fulfilling their own purposes,*
- தேவனுடன் எந்த உறவும் இல்லை - *No relationship with the Lord,*
- தேவனிடம் எந்த அன்பும் இல்லை - *No love for the Lord,*
- தேவனை கனப்படுத்துவதில் எந்த விருப்பமுமில்லை - *No desire to honor Him.*

________________________________________________________________

________________________________________________________________

*அவர்கள் தேவன் கடுமையானவர் என்றும் அதிகமாய் எதிபார்ப்பவர் (demanding), நியாயமற்றவர் மற்றும் நேர்மையற்றவர் என்றும் கூறினர். அவர்கள் எண்ணெய் இல்லாத கன்னிகைகளைப் போல, ராஜ்யத்தினின்று நித்தியத்திற்கும் வெளியேற்றப்படுவர்.*

*வ27, [27] அன்றியும் தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள் என்று சொன்னான் என்றார்.'*

*கொலை செய்யப்படுவர்?*

***'கடாஸ்பாஸ்' (katasphaz)*** *என்பது மிகவும் கடினமான வார்த்தையாகும். இதற்கு அவர்களை வெட்டு அல்லது முற்றிலும் அழி என்பது பொருளாகும்.*

*A very strong word, '**katasphaz**', cut them down or slay them completely.*

### முடிவுரை

*நீங்கள் இந்த கதையில் உள்ளீர்கள்.*

- ***விசுவாசமுள்ளவர்களில் ஒருவராக - Either one among the Faithful,***
- ***பொய்யானவராக - The False அல்லது***
- ***எதிரியாக - The Enemies.***

*நீங்கள் எந்த வகையை சேர்ந்தவராக இருந்தாலும், கர்த்தருக்கு சொந்தமானவர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!*

*நாம் அனைவரும் அவருக்கு முன்பாக நின்று கணக்கைக் கொடுக்க வேண்டும்.*

***2 கொரிந்தியர் 5:10***, *ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.*

***ரோமர் 14:12***, *ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.*

*If you have confessed Him as Lord and King, you become among the faithful, those who are rewarded and lavished with spiritual graces and privileges forever.*

________________________________________________________________

________________________________________________________________

நீங்கள் பொய்யானவர்களுடன் மறைந்து இருந்தால், ஒரு நாள் வரும், அந்நாளில் நீங்கள் அணிந்திருக்கும் முகமூடி கழற்றப்படும் மேலும் உங்கள் முட்டாள்தனமான சாக்குகள் அனைத்தும் வெளியரங்கமாகும். நீங்கள் நித்தியத்திற்கும் பயனற்றவர்களாகி, கிறிஸ்துவின் எதிரிகளோடு அழிக்கப்படுவீர்கள்.

இந்த உவமையின் கருப்பொருளானது,

- **விசுவாசத்திற்கான வெகுமதிகள்,**
- **பொய்யானவர்களை நிராகரித்தல்,**
- **எதிரிகளை பழிவாங்குதல்.**

---

## *நீங்கள் எங்கு உள்ளீர்கள்?*

---

____________________________________________________________________

____________________________________________________________________